

# நினைவுகளும் கனவுகளும்




வே. சு. கருணாகரன்



கருணாகரன் நாவலன்
தொ.பேசி: 0777-168755
new
Easyway Technologies
Importers &Distributors Brand New Computers, Laptops
Computer Accessories, CCTV Camera, Phone Accessories,
Digital Devices & Electronic Items.
இவைகள் அனைத்தையும் நம்பமுடியாத விலையில்
HUAWEI
NOKIA Connecting People
DELL
ASUS
Canon
havit
Edifier
CREATIVE
TP-LINK
Transcend
intel
hp
AOC
SONY
SAMSUNG
No 212/3, Airtel Market, Main Street, Colombo - 11
Tel: 011-2445513, Fax: 011-2445513
Email: neweasywaytechnologies@gmail.com

# நினைவுகளும் கனவுகளும்

வே. சு. கருணாகரன்


Easyway
Importers & Distributors Brand New Computers, Laptops
Computer Accessories, CCTV Camera, Phone Accessories,
Digital Devices & Electronic Items.
ASUS Canon
AOC

நூலின் பெயர் : நினைவுகளும் கனவுகளும்

ஆசிரியர் : வே. சு. கருணாகரன்

முதற்பதிப்பு : 2013

பதிப்புரிமை : கருணாகரன் குணாளன்

வெளியீடு : சூழலியல் மேம்பாட்டு அமைவனம் (சூழகம்)

வாசகர்கள் தொடர்பு கொள்ள வேண்டின்
: soozhagam@gmail.com
Tel: 0778945856

அச்சுப் பதிப்பு : சன் பதிப்பகம்
இல. 44A, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13.

# என்னுரை

நான் மெத்தப் படித்தவன் அல்ல. ஆனாலும் நல்லவற்றை நாடித் தேடி படித்திடும் வழக்கமுண்டு. கற்றது, கேட்டது, பட்டது பார்த்தறிந்தது. வாழ்வின் சூழல் எனப் பல்வகை காரணங்களால் எழுந்த எண்ணக் கருக்களை இளஞ் சந்ததியினரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ண அவாவினால் எழுந்ததே இச்சிறிய நூல். இச்சிறிய நூலானது வாசிப்போரை செயலூக்கம் பெறவைக்க வேண்டுமென்பது என் விருப்பம். அச்செயலுக்கு இந்நூலிலுள்ள பல கட்டுரைகள் பயனுள்ளதாகும் என்பது என் நினைப்பு. இந்நூலில் தரப்பட்டுள்ள ஆலமரம், தாய்மொழித்தினம், பாரதியார், பாரதிதாசனார், திருக்குறள் போன்ற கட்டுரைகள் உட்பட இன்னும் சில கட்டுரைகளும் எமது இளைய மாணவ சமுதாயத்தினருக்கு பயனுள்ளதாக வேண்டுமென்பது எனது எண்ணம். ஒன்றே செய்யினும் நன்றே செய்ய வேண்டும் என்ற ஆசையோடு இந்நூலை எழுதினேன். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தானே" எனினும் வாசகர் கருத்து எதுவாயிருக்கும் என்பதை நான் அறிகிலேன். எப்படியிருப்பினும் அவர்கள் கருத்தை விருப்பமுடன் பரிசீலிப்பேன்.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது திருக்குறள் தந்த கருத்து. "ஆளைப்பார்க்காதே ஆட்டத்தைப் பார்" என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. இக்கருத்துக்களின்படி என்னுடைய இந்நூலையும் வாசிப்பதில் தவறேதும் ஏற்படாது என்று எண்ணுகிறேன். இந்நூலைப் பெற்றுக் கொள்ளும் பெருந்தன்மையுடையோரிடம் என் பணிவான வேண்டுகோள். இந்நூலிலுள்ள கட்டுரைகள் அனைத்தையும் ஓய்வாய் இருக்கும் வேளைகளில் தயவுசெய்து வாசியுங்கள். பயனுள்ளவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளும் உரிமை உங்களுடையதே. உங்களின் கருத்துப்படி பயனுள்ளவை எவை பயனற்றவை எவை என்பதை அறியும் ஆசையும் உரிமையும் எனக்குமுண்டு. உள்ளதை உள்ளபடி அறிந்து கொள்ளும் வாய்ப்பை தயவு செய்து எனக்கும் அறியத் தந்துதவும்படி இரந்து வேண்டுகிறேன்.

இவ்வண்ணம்

**வே. சு. கருணாகரன்**

# அறிமுக உரை

திரு. வே. சு. கருணாகரன் அவர்கள் புங்குடுதீவின் புகழ்பெற்ற வர்த்தகர். சுப்பிரமணியம் மாணிக்கம் தம்பதிகளின் மூன்றாவது பிள்ளை. இவர் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையிலும், புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் தனது கல்வியைப் பெற்றுக் கொண்டார்.

தனது தந்தையின் வர்த்தகத்திற்கு தகுந்த துணை இல்லாத காரணத்தால் தனது கல்வியை இடைநிறுத்திவிட்டு வர்த்தகத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று. ஆனாலும் பொது அறிவுத்தேடல் காரணமாக பத்திரிகைகளையும், கிடைத்த நூல்களையும் வாசிக்கும் வழக்கம் இவரிடம் தொடர்ந்து இருந்து வந்ததால் பொது வாழ்விலும் இவருக்கு தொடர்பு ஏற்பட்டது.

திருமணமாகாத இளவயதுக் காலத்திலேயே (1964) புங்குடுதீவு கிராமசபைக்கு ஓர் உறுப்பினராக தேர்வாகி உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். அக்கால கட்டத்தில் புங்குடுதீவுக் கிராமசபையில் நானும் ஓர் ஊழியராக கடமையாற்றியதால் கிராமசபையில் ஏனையோரால் பாராட்டக் கூடியதாக திரு. கருணாகரன் அவர்களின் செயற்பாடுகள் இருந்ததை அறியக் கூடியதாய் இருந்தது. 1970ல் இருந்து 1981வரை புங்குடுதீவு 1ம், 2ம், 3ம் வட்டாரப் பிரதேசத்தை உள்ளடக்கியதான பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக தொடர்ந்து பணியாற்றினார். இக்காலகட்டத்தில் முதல் நான்கு வருடங்கள் திரு. தாமோதரம்பிள்ளை ஆசிரியர் அவர்களும் அடுத்து மூன்று வருடங்கள் நானும் (சி. மு. நாகரெத்தினம்), அதை அடுத்து மூன்று வருடங்கள் திரு. நா. தர்மலிங்கம் (அதிபர்) ஆசிரியர் அவர்களும் அக்கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்களாக பணியாற்றியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1984 தொடக்கம் 1989 வரை ஐந்து வருடங்கள் தொடர்ந்து புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக திரு. கருணாகரன் அவர்கள் பணியாற்றியதோடு, பலநோக்கு கூட்டுறவுச்சங்க பணியாளர் சங்கத்தினதும், பொதுச்சபை உறுப்பினர்களதும் பாராட்டையும் பெற்றவர்.

1991ல் இருந்து 1994 வரை புங்குடுதீவு மகாவித்தியாலத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும் பணியாற்றியும் உள்ளார். இவருடைய பொது வாழ்வுக்காலத்தில் பல நூற்றாண்டு காலமாக ஒழுங்கைகளே இல்லாது இருந்த நடுவுத்துருத்தி என்னும் குறிச்சியில் இளைஞர்களின் உதவியோடு இரண்டு ஒழுங்கைகளையும் புதிதாக திறந்து வைத்ததோடு இக்குறிச்சியின் வடக்குப் புறமாக உள்ள கடற்கரைப் பாதைக்கும் பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டை பெற்று வீதி அமைக்கப்பட்டதும் இவரது முதற் பணியாகும்.

1971ல் பொது மக்களின் உதவியோடு 1ம் வட்டாரத்திலும், 3ம் வட்டாரத்திலும் இரண்டு ஒழுங்கைகளை கல்போட்டு சீர் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 1972ல் இரண்டு குளங்கள் தூர்வாரப்பட்டதோடு ஒரு குளம் விரிவாக்கப்பட்டதும், புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் தென்புறத்தில் புதிதாக ஒரு குளம் வெட்டப்பட்டதும் குறிப்பிடக் கூடிய சிறப்புடைய செயல்கள். இக்காலத்தில் நானும் (சி.மு. நாகரெத்தினம்) பெருங்காடு அபிவிருத்திச் சபையின் செயலாளராய் இருந்தேன்.

1980ல் புங்குடுதீவு 2ம் வட்டாரத்தில் ஒரு ஒழுங்கையும், 3ம் வட்டாரத்தில் ஒரு ஒழுங்கையும் கிறவல்மண் போட்டு சீர்செய்யப்பட்டது. இக்கால வேளையில் நா. தருமலிங்கம் (அதிபர்) ஆசிரியர் அவர்கள் புங்குடுதீவு பெருங்காடு கிராம அபிவிருத்திச் சபையில் செயலாளராக பணியாற்றியுள்ளார்.

1987க்கு முன் புங்குடுதீவில் செய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு இவரின் தனிப்பட்ட நிதி உதவிகளும், பங்களிப்பும் கிடைத்தது உண்டு. அவற்றில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு 1972ம் ஆண்டு செய்யப்பட்ட மின்சார இணைப்புக்குரிய செலவை இவர் ஏற்றுக் கொண்டதையும் நான் அறிவேன். இப்படி பல அபிவிருத்திப் பணிகளை முன் எடுத்து செயல்பட்டு உழைத்த கருணாகரன் அவர்கள்

நிழல் மரங்களை நட்டு வளர்ப்பதிலும் நாட்டம் உள்ளவராக இருந்தார். புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நிழல் பரப்பி நிற்கும் பல வேப்பமரங்கள் இவருடைய பெயரை நினைவூட்டி நிற்கின்றன.

அபிவிருத்தியில் அதிக நாட்டமுடைய திரு. வே. சு. கருணாகரன் அவர்களால் எழுதப்பட்ட இந்நூலானது எமது தேசத்தின் சூழல் பாதுகாப்புப் பற்றியும் அழகாக விபரித்துள்ளது. அத்துடன் எமது கிராமமாகிய புங்குடுதீவின் முந்நாள் நினைவுகளையும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் நினைவூட்டத் தவறவில்லை.

இந்நூலின் வெளியீட்டு விழா சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனின் கருணை இவர் பக்கம் சேர வேண்டுவதோடு மக்களின் பேராதரவு கிடைக்கவும் இறை அருளை வேண்டி இந்நூல் ஆசிரியரைப் பற்றிய அறிமுக உரையை எழுதக் கிடைத்தமைக்கு எனது மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"வாழ்க வையகம் வாழ்க வளமுடன்"**

*நன்றி*
**சி. மு. நாகரெத்தினம் JP**
புங்குடுதீவு
கொழும்பு-14

# வாழ்த்துரை

புங்குடுதீவின் சிறப்புமிக்க புதல்வர்களில் ஒருவராகக் கருதப்படும் திரு. வே. சு. கருணாகரன் அவர்களின் சிந்தனையில் உதித்த "நினைவுகளும் கனவுகளும்" என்னும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலாசிரியரை புங்குடுதீவில் அறியாதோர் யாருமிலர் எனக் கூறலாம். அந்நாட்களில் "மணியம் கடை" என்றால் புங்குடுதீவு மக்கள் யாழ் நகர் செல்லாமலே என்ன பொருட்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரபலமான ஒரு வர்த்தக நிலையம். இந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர்களாக இருந்த நூலாசிரியரின் பெற்றோர் கடின உழைப்பு, விடாமுயற்சி, அத்துடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உன்னத கோட்பாடுகளுக்கு அமைய வாழ்ந்து தொழிலில் வளர்ச்சி கண்டவர்கள். இது போன்றே அவர்களின் பிள்ளைகளும் தொடர்ந்து பெற்றோர் வழி நடந்து வணிகத் துறையில் சிறப்படைந்து இருந்தார்கள். அத்துடன் நின்றுவிடாது இவர்கள் சமூகப்பணி, அரசியல், கலை இலக்கியத் துறைகளிலும் தீவரமாக ஈடுபட்டு மக்கள் மனங்களில் இடம்பெற்றார்கள். இந்த வகையில் நூலாசிரியரின் சகோதரர் அமரர். வே. சு. வில்வரெத்தினம் அவர்கள் ஒரு சிறந்த கவிஞராக இலங்கையிலும், தமிழகத்திலும் புகழ்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

"நினைவுகளும் கனவுகளும்" என்னும் இந்த நூலின் வெளியீடு காலத்தின் தேவை எனக் கருதலாம். ஏனெனில், யுத்தம், இடம்பெயர்வு, ஆக்கிரமிப்பு, மேற்கத்திய நாடுகளின் கலாச்சாரம் ஆகியவற்றின் அழுத்தங்கள் காரணமாக எமது மக்கள் காலம் காலமாக பேணிவந்த

சமூக ஒருமைப்பாடு, வரலாற்றுப் பதிவுகள், பண்பாடு, கலாச்சார விழுமியங்கள், மொழிப்பற்று, சமயப்பற்று என்பன படிப்படியாக மழுங்கடிக்கப்பட்டு வரும் வேளையில், இவ்வகையான நூல்கள் எமது மக்களுக்கு குறிப்பாக வளர்ந்து வரும் இன்றைய எதிர்கால சந்ததியினருக்கு ஒருவகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த முடியும் என கருதுகின்றேன்.

அழிவுற்று வரும் எமது கலாச்சாரம் பண்பாட்டு விழுமியங்களுக்கு புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். அவற்றின் இனிமை, சிறப்பு, புனிதத்தன்மை, தனித்துவம் என்பனவற்றை உணர்ந்து எம்மக்கள் தங்கள் இன அடையாளத்தை, தனித்துவத்தை இழந்துவிடாமல் வாழ வேண்டும் என்பதே நூலாசிரியரின் கனவும் எதிர்பார்ப்பும் ஆகும். இந்த முயற்சியின் மூலம் எம் சமூகத்தை விழிப்படையச் செய்து எங்கள் பிறந்த மண்ணை வளம் பெறச் செய்து மக்களின் இருப்பினை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்ற அவரின் உள்ளக் குமுறல் இந்த நூல் மூலம் வெளிக் கொணரப்படுவது பாராட்டிற்குரியது.

இயற்கை வளங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். வாழ்வு இயன்ற அளவு இயற்கையோடு இணைந்ததாகவும் இருக்க வேண்டும். மழை வீழ்ச்சி குறைவான எம் பிரதேசங்களில் கிடைக்கும் மழை நீரை எப்படிச் சேமிப்பது, கூடிய மழை வீழ்ச்சி கிடைக்க எம் பங்களிப்பு என்ன என்பது பற்றி கூறப்பட்டுள்ளது.

மணல் போர்த்த வீதிகள் எங்கும் நிழல் போர்க்கும் வகையில் மரங்கள் நிறைந்திட வேண்டும். எங்கள் மண்ணிற்கென்றே இயற்கை தந்த பனை, தென்னை வளம் யாவும் கவனிப்பார் இன்றி அருகி வருவது கவலைக்குரிய விடயம். எமது மூதாதையர் காலத்தில் பனம் பண்டங்களே உணவின் முக்கிய மூலாதாரமாக இருந்தது. அத்துடன் சிறு தானியங்களும் கடல் உணவுகளும் முக்கிய பங்கு வகித்தன. உடல் உழைப்புக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். இதனால் நோயற்ற வாழ்வு பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள் என்ற முக்கிய விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இங்கு, குறிப்பாக புங்குடுதீவு அதைச் சூழ உள்ள தீவுகளின் வளங்கள் பற்றி குறிப்பிடப்பட்டு இருந்தாலும் இவை வடக்கு, கிழக்கு பிரதேசம் முழுமைக்கும் ஏற்புடையதாக உள்ளமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

வட கிழக்கில் கிடைக்கும் இயற்கை வளங்கள் அனைத்தும் இனங்காணப்பட்டு பொருளாதார அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கைவிடப்பட்ட துறைகளில் நவீன தொழில் நுட்பங்களை புகுத்தி, பொருண்மிய வளர்ச்சி காண வேண்டும். புலம்பெயர் மக்கள் இதில் முக்கிய பங்கு ஆற்ற முடியும்.

புலம்பெயர் மக்கள் பொருளாதாரம், கல்வி, தொழில் நுட்பம் என்பவற்றில் சிறந்து விளங்குவது மகிழ்ச்சி தருகின்றது. அவர்கள் இவ்விடயத்தில் தரும் ஆக்கமும் ஊக்கமும் எதிர்பார்க்கும் அளவுக்கு இல்லை என்றே கூறலாம். பெரும்பாலானவர்களிடம் இன உணர்வு, மொழிப்பற்று, ஊர்ப்பற்று அருகி வருவது காணக் கூடியதாக உள்ளது. குடும்பங்கள், உறவுகள் மத்தியில் தொடர்பாடல் அருகி வருகின்றது. புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்களின் இன்றைய தலை முறையினருக்கு தமிழ் மொழியில் தேர்ச்சி இன்மை மேலை நாட்டு கலாச்சாரத்தின் மீது உள்ள நாட்டம் காரணமாக எதிர்காலத்தில் தாயகத் தமிழரிடம் இருந்து இவர்கள் தனிமைப்பட்டுவிடக் கூடிய நிலைக்கு உள்ளாகலாம்.

இந்நிலை ஏற்படாமல் இருக்க நாங்கள் எல்லோரும் தீர்க்கதரிசனத்தோடு சிந்தித்து செயற்பட வேண்டும். தமிழ்மொழியை தனியார் கல்வி நிலையங்களூடாகவேனும் ஒரு கட்டாய பாடமாக கற்பிக்க வேண்டும். உலகெங்கும் உள்ள தமிழர்கள் தமிழில் தொடர்பு கொள்ளவும் தமிழ் கலாச்சாரம், பண்பாடு அழியாமல் இருக்கவும் ஆவன செய்ய வேண்டும்.

இப்போ புலம்பெயர்ந்த எம் மக்களில் சிலரைச் சந்திக்கும் வேளைகளில் தம் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியில் தேர்ச்சி இல்லை என்று கூறுகின்றார்கள் இப்படிச் சொல்வதில் அவர்கள் பெருமைப்

படுகிறார்களா அல்லது கவலைப் படுகிறார்களா என்று தெரியவில்லை. எப்படி இருப்பினும் இந் நிலையில் மாற்றம் வேண்டும். தாய் மொழியை மறப்பது தகாத செயல் தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தம் தனித்துவத்தை இழந்திடாமல் தாய் மண்ணை நேசித்து உறவுப் பாலங்களை அமைத்து வாழ்ந்திட வேண்டும் என்பது இந்நூலின் ஆசிரியரினதும் எங்களினதும் கனவுகளாகும். இக்கனவுகள் நடைமுறைச் சாத்தியமாக வேண்டும்.

திரு. வே. சு. கருணாகரன் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் மக்களின் வரவேற்பை பெறும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இந்நூலின் வெளியீட்டு விழா பெரியளவில் வெற்றி பெற இறையருளும் கிடைக்க வேண்டுவதோடு எனது வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சபா. திருச்செல்வம்**
*புங்குடுதீவு-2*
*ஓய்வு நிலை சிரேஸ்ட முகாமையாளர்*
*இலங்கை வங்கி,*
*முகாமையாளர்*
*சென்றல் பினான்ஸ் கொம்பனி.*

# வாழ்த்துரை

இந்நூலின் ஆசிரியர் திரு. வே.சு. கருணாகரன் அவர்கள் எம்மைப் பெற்று பாலூட்டி சோறூட்டி வளர்த்தெடுத்து ஆளாக்கிய எமது சொந்த மண் புங்குடுதீவிலேயே பிறந்து வளர்ந்தவர். புங்குடுதீவு மக்களால் அதிகம் அறியப்பட்டவர். அயல் கிராமத்தவர்களுக்கும் அறிமுகம் உள்ளவர். இவரால் ஆக்கப்பட்ட இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன். திரு. கருணாகரன் அவர்கள் சில பொது அமைப்புக்களின் தலைமைப் பொறுப்புக்களில் இருந்து பணிகள் பல செய்து அனுபவ அறிவைப் பெற்றுக் கொண்டவர். ஆதலால் இந்நூல் பல பொது நலன்கள் பற்றியெல்லாம் பேசுகிறது. குறிப்பாக என்னைப் போல் பலருக்கு விருப்பம் உடைய சூழல் பாதுகாப்பு பற்றிய கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளது. எமது முன்னோர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், பண்பாடு பற்றியும் கூறுகிறது. இந் நூல் மக்களால் வரவேற்கப்படுவதோடு நூலின் வெளியீட்டு விழாவும் வெற்றியடைய வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

*இப்படிக்கு*
**செ. யுகேந்திரன்**
*தலைவர்,*
*புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய*
*பரிபாலன அறங்காவலர் சபை.*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| எனது தாய் மண் | 01 |
| இயற்கையோடு இணைந்த வாழ்வு | 06 |
| வயலில் விளைந்த உழைப்பின் விளைச்சல் முன்றலில் அனைவர்க்கும் | 09 |
| எமது கிராமத்தின் இயற்கை வளம் | 16 |
| மணல் போர்த்த வீதிகள் தோறும் நிழல் போர்க்கும் மரங்கள் நிறைந்திட வேண்டும் | 24 |
| பொருளாதார வளத்தை தரும் மரங்கள் | 35 |
| பனைகளை வளர்ப்பது காலத்தின் கட்டாய தேவை | 38 |
| கடற் தாவரங்கள் | 41 |
| நிலம் வளமடைய நீர் வளம் வேண்டும் | 44 |
| வடக்கிலுள்ள ஆற்று வாய்க்கால்கள் | 48 |
| கல், மண் அகழ்வது தவிர்க்கப்படல் வேண்டும் | 49 |
| சிறுகக்கட்டி பெருக வாழ வேண்டும் | 51 |
| முத்துச்சுடர் போல நிலா ஒளி முன்பு வரவேண்டும் | 52 |
| வீட்டுத் தோட்டம் | 54 |
| உழுதுண்டு வாழ்வோர்க்கு ஒப்பில்லை | 56 |
| நாட்டின் உணவுப் பொருள் உற்பத்திக்கு முன்னுரிமை அளித்திட வேண்டும் | 59 |
| இயற்கை வளம் நிறைந்திருந்த நெடுந்தீவு | 62 |
| அலைகடல் நடுவிருக்கும் அழகிய அனலைதீவு | 65 |
| அம்பாள் வீற்றிருந்து அருள் சுரக்கும் நயினாதீவு | 67 |
| மண்கும்பான் | 70 |
| 1990க்கு முன் வடக்கிலும், கிழக்கிலும் இயங்கிய தொழிற்சாலைகள் | 72 |
| காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை | 73 |
| மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலை | 75 |
| மஸ்கன்ஸ் கூரைத் தகடுகள் | 76 |
| பாடும் மீன் நாட்டின் பன்னுமல்களும், புற்பாய்களும் | 79 |
| சகல பிரதேசங்களுக்கும் கல்விக்கான வளம் சமநிலைப்பட வேண்டும் | 80 |
| உடலினை உறுதி செய்யும் விளையாட்டு | 81 |

சகல பிரதேசங்களுக்கும் சுகாதார சேவை கிடைக்க வேண்டும் 83
வாசிப்பதால் மனிதன் முழுமை அடைகின்றான் 87
பாட்டுக்கொரு புலவன் பாரதி 89
புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் 93
திருக்குறள் ஓர் உலகப் பொதுமறை நூல் 96
தாய்மொழித் தினம் 98
தமிழே தமிழருடைய சின்னம் 100
மரண அஞ்சலி செலுத்துவதற்கு பொதுவான நூலொன்று தேவை 104
சமயப் பணியுடன் சமூகப் பணியும் இணைந்திட வேண்டும் 106
அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 107
அன்பே உருவாய் அமைந்த துறவி யோகர் 109
எமது ஊரில் வாழ்ந்து மறைந்த திருத் தொண்டர் 112
எமது சமய வழிபாட்டு முறைகள் அனைத்தும் தாய் மொழியில் அமைந்திட வேண்டும் 114
நன்றியுரை 120

# காணிக்கை



## கவிஞர் சு. வில்வரெத்தினம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 07-08-1950 | 09-12-2006 |

உனது கவிதைகளால் கவரப்பட்ட ஈழமும்

தமிழ்நாடும் உன்னைப் பற்றி பேசியபின் தான்

உன் பெருமையை நான் உணர்ந்தேன்

என் உடன்பிறப்பே பேரன்புக்கும்

பெருமைக்கும் உரிய சகோதரனே

இந்நூல் உனக்கு காணிக்கை.

# எனது தாய் மண்

இந்நூலை எழுதத் தொடங்கும் வேளையில் நான் பிறந்து வளர்ந்த எனது தாய் மண் புங்குடுதீவின் நினைவுகளே என் மனக்கண்முன் வந்து நின்றன.

என்னைப் பெற்றெடுத்துப் பெயரிட்டு பேணி வளர்த்த எந்தையும் தாயும் பிறந்து வளர்ந்து மகிழ்ந்து குலாவி வாழ்ந்ததும் இம்மண்ணிலேதான்.

அவர்தம் முன்னோர்களும் பிறந்ததும் வளர்ந்ததும் வாழ்ந்து மடிந்ததும் இம்மண்ணிலேயேதான். இந்தமண் எங்களின் சொந்த மண். இந்த மண்ணின் முன்னைய கால நினைவுகளை இந்நூலில் கொஞ்சம் சொல்ல வேண்டிய கடமையும் தேவையும் உண்டு.

18ம் நூற்றாண்டின் இறுதிக்கால எல்லைவரை பெரிதும் சிறிதுமான காடுகள் இம்மண்ணிலே பல பிரிவுகளாக இருந்துள்ளன. இக்காடுகளில் மான், மரை போன்ற சிறிய மிருகங்களும் முயல் போன்ற சிறு பிராணிகளும் பல்லினப் பறவைகளும் வாழ்ந்துள்ளன என்று வழி வழியாக வாழ்ந்து வந்த எமது முன்னோர்களால் சொல்லக் கேட்ட கதையை எனது பெற்றோர்கள் வாயிலாக நான் கேட்டதுண்டு. இரண்டு பெரிய

காடுகளையும், சில சிறிய காடுகளையும், மான், மரை போன்ற மிருகங்களைத் தவிர முயல் போன்ற சிறு பிராணிகளையும் மயிலினம் உட்பட பல்லினப் பறவைகளையும் சிறுவயதில் நானும் பார்த்ததுண்டு.

எமது முன்னோர்கள் காலத்தில் ஊர்களினதும், குறிச்சிகளினதும் வளங்களையும் வடிவமைப்புக்களையும் பார்த்து பெயர்கள் வழங்கி வந்துள்ளன. புங்குடுதீவு மேற்குப் பிரதேசத்திலுள்ள துறைமுகப் பகுதியாகிய கடற்கரை வெளி கொண்ட இடம் ஏனைய தீவுகளுக்குரிய திசைகளை குறிகாட்டுவதால் அந்தப் பகுதிக்கு "குறிகாட்டுவான்" என்னும் பெயர் வழங்கலாயிற்று. பெரிய காடுகளை கொண்டிருந்த இடப்பகுதிக்கு "பெருங்காடு" எனும் பெயர் வழக்கத்திற்கு வந்தது.

இதைப் போலவே இம்மண்ணில் வேரூன்றி வளர்ந்து மறைந்து போன காடுகளில் புங்கு மரங்கள் அடர்த்தியாகவும் ஏனைய இடங்களில் பரவலாகவும் காணப்பட்டதால் புங்குடுதீவு (Pungudutheevu) எனும் காரணப் பெயர் இப்பிரதேசத்திற்கு உண்டாயிற்று. புங்குடுதீவு என்ற பெயரில் குறையொன்று மில்லை. புங்குடுதீவு என்று உரத்துச் சொல்வோம். பிறந்து வளர்ந்த மண்ணுக்கு வளம் சேர்த்து புகழ் சேர்ப்போம்.

இப்பிரதேசத்தில் 1940களிலும் இரு பெரிய காடுகளும் ஆங்காங்கே சிறிய காடுகளும் பரவலாக மரங்களும் செடி, கொடிகளும் தழைத்திருந்தன. வான்முகில் படிந்து மழை பொழிய மறுக்கவில்லை. குடிநீருக்கும் குறையிருக்கவில்லை. பனை, தென்னை வளங்களும் செறிந்திருந்தன. உணவுப் பயிர்கள், அனைத்தும் பயிரிடப்பட்டன. மந்தைகளும் அதிகளவில் வளர்க்கப்பட்டதால் பாலுணவும் போதியளவாய் இருந்தது. ஊரைச் சுற்றி நாற்புறமும் கடல் சூழ்ந்திருந்ததால் கடலுணவும் நிறைவாயிருந்தது. ஆதலால் உள்ளூர் வளத்தைக் கொண்டே

மக்கள் திருப்தியுடன் தங்கள் வாழ்வை நிறைவு செய்தனர். ஆனாலும் யாழ்ப்பாணப் பட்டினத்திற்கும் எமது ஊரிற்கும் தரை வழித் தொடர்பு இருக்கவில்லை. கடல் வழியாகவே போக்குவரத்து நடைபெற்றது.

### அம்பலவாணர் (பெரியவாணர்) எனும் பெருந்தகையாளர்

எங்கள் ஊரில் பிறந்து வளர்ந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்று மலாயா (சிங்கப்பூர்) தேசத்திற்கு சென்று வளம் பலவும் பெற்று பெரும் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த பெரியவாணர் எனும் பெருமகனின் அயராத தொடர் முயற்சியினால் 1940களில் புங்குடுதீவிற்கும் - வேலணைக்கும் இடையிலுள்ள கடலிற் கூடாக மூன்று மைல் நீளத்திற்கு பாலம் அமைப்பதற்குரிய முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இப்பாலத்திற்கான பணிகள் பெரிவாணரின் சகோதரரான சின்னவாணர் (அம்பலவாணர்) அவர்களால் செய்து முடிக்கப்பட்டது. இத்தோடு மேலும் பல செயற்கரிய பணிகளை செய்த இவ்விருவரின் நினைவை நெஞ்சில் நிறுத்தி இந்நூலுக்கான கட்டுரைகளை தொடர்கிறேன்.

### எமது கிராமத்தவர்களின் சுயதொழில்கள்

எமது கிராம மக்களின் சுயதொழில்களில் முக்கியமானது விவசாயம். நூற்றுக்கணக்கானோர் தென்னிலங்கை சென்று வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் பணியாளர் களாகவும் பல நூற்றுக் கணக்கானோர் பணி புரிந்தனர். அரச பணியிலும் அநேகமானோர் பணியாற்றினார்கள். அவர்களில் அதிகமானோர் ஆசிரியர்கள் ஆவர். நூற்றுக்கணக்கானோர் "மலாயா" தேசத்திற்குச் சென்று அரச பணியிலும், வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்தனர். இன்னுமொரு பகுதியினர்

தச்சுத் தொழிலையும், இன்னும் சிறுதொகையினர் மீன்பிடித் தொழிலையும் மேற் கொண்டனர். தொழிலேதும் செய்யாமலும் தொழிலேதும் இல்லையென்ற நிலையிலும் எவரேனும், இருந்ததில்லை.

**மலாயா வில் (சிங்கப்பூர் - மலேசியா) எம்மவர்கள்**

பொருள் வளத்தைத் தேடுவதற்காக மலாயா தேசத்திற்கு சென்றிருந்தோரில் பெரும்பாலானோர் ஊரிற்கு திரும்பிவிட்டனர். ஒரு சிலர் குடியுரிமை பெற்று அங்கேயே நிரந்தரமாகிவிட்டனர். ஊரிற்கு திரும்பியவர்களில் சிலர் அந்நாட்டின் ஓய்வூதியத்தை பெறுபவர்களாகவுமிருந்தனர். மலாயாவில் குடியுரிமை பெற்றவர்களில் சிலர் 1950-1960களில் ஊருக்கு வந்து போய்க் கொண்டுமிருந்தார்கள். 1970களுக்குப் பின்னர் ஊருக்கு வந்து செல்வதை நிறுத்திக் கொண்டனர். இன்று அவர்களின் தொடர்புகள் முற்றாக அற்றுப் போய்விட்டது.

1956க்கு பின் இனமுறுகல் ஏற்படத் தொடங்கிற்று. பேரினவாதம் பெருக்கெடுத்தது. போர் நெருக்கடி அதிகரித்த காலமாகிய 1991ல் ஊரில் வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பிறந்து வளர்ந்த ஊரைவிட்டு விழி வழிந்த கண்ணீருடன் வேதனையை சுமந்து கொண்டு விருப்பமின்றி வெளியேறினர். அப்படி வெளியேறியவர்களில் பல ஆயிரக் கணக்கானோர் பனையில் இருந்து வெட்டி வீழ்ந்த நுங்குக் குலையில் இருந்து கழன்று திசை திசையாக உருண்டு போன நுங்குகள் போல் ஊர் ஊராக தேசம் தேசமாக இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் போய்விட்டார்கள். ஆனாலும் பிறந்து வளர்ந்த மண்ணை அவர்கள் மறக்க வில்லை. மீண்டும் ஊருக்கு வந்தும் போய்க்

கொண்டிருக்கிறார்கள். இது பாராட்டுக்குரியது. புங்குடுதீவு எமது சொந்தமண் என்று சொல்வதற்கு அவர்கள் பின் நிற்பதில்லை. புங்குடுதீவு எமது சொந்த மண் என்று பெருமை பேசுபவர்களோடு உடன்பாடு உடையவர்களில் நானும் ஒருவன்.

**எமது ஊரின் இன்றைய நிலை**

ஊரை விட்டு இடம்பெயர்ந்து வன்னியில் வாழ்ந்தவர்களில் ஒரு பகுதியினர் திரும்பி வந்து ஊரில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எமது முன்னோர்களால் வளர்க்கப்பட்ட பனைகளும், தென்னைகளுமே அவர்களுக்கு உதவு கரங்களாயுள்ளன. தற்பொழுது புங்குடுதீவு வாழ் மாணவர்களின் கல்வி நிலை மிகவும் தாழ்ந்த நிலையிலே காணப்படுகின்றது. இங்குள்ள பாடசாலைகளில் சகல வளங்களையும் கொண்ட தன்னிறைவு பெற்ற பாடசாலையாக ஒன்றேனும் இல்லாமையே இதற்கான முக்கிய காரணமாகும். போதிய ஆசிரிய வளம் இல்லாமையால் மாணவர்களின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. போதிய ஆசிரிய வளத்தை பெறமுடியாததற்கு மாணவர்களின் சராசரி குறைவு இன்னொரு காரணமாகின்றது. இங்கு வாழும் மக்கள் தொகையோ குறைவு. அதற்கேற்ப மாணவர்கள் தொகையும் மிகக் குறைவு. இச்சிறிய தொகையிலான மாணவர்களை பல பாடசாலைகள் பகிர்ந்து கொள்வதும் இதற்கான இன்னொரு முக்கிய காரணமாகும். இக் காரணங்களை ஆசிரியர் பலர் அறிவர். ஆனால், அதிபர் பதவியை பெறுவதற்காகவும், இருக்கும் பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் மக்களிடம் குறுகிய பிரதேச வாதத்தை பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இவர்களின் சுயநலமும் குறுகிய பிரதேசவாதமும் பெற்றோரின் விளக்கமின்மையும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் அவர்களின் எதிர்காலத்தையும் பாழடிக்கின்றது.

07-06-2009

# இயற்கையோடு இணைந்த வாழ்வு

நான் முன்பு குறிப்பிட்டது போல 1950களுக்கு முன் எங்கள் கிராமத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பெரிய, சிறிய காடுகள் இருந்தன. மரங்கள், செடி கொடிகளெல்லாம் தளைத்தும் இருந்தன. கருமுகில் தாழப் படிந்து தவறாது மழையைப் பொழிந்தது. வயல் நிலங்களெல்லாம் தவறாது வரப்புகள் கட்டப்பட்டிருக்கும். மழை நீர் தேங்கி நிலத்தடிக்கு ஊறிச் சென்று கிணறு, குளங்களெல்லாம் நீர் ஊற்றுப் பெருகி உயரும் நிலையிருந்தது. தண்ணீர்ப் பஞ்சம் இருந்ததில்லை. இயற்கை வளமும் செறிந்திருந்தது. தோட்டச் செய்கைக்கும் மந்தை வளர்ப்பிற்கும் குடிநீருக்கும் ஏனைய தேவைகளுக்கும் போதியளவு நீர் கிடைத்தது. தோட்ட நிலங்களில் பணப்பயிரான புகையிலையே அதிகம் பயிரிடப்பட்டது. சிறிதளவில் மரக்கறி வகைகளையும் பயிர் செய்தார்கள்.

வீட்டு நிலப்பரப்பை சுற்றி வேலி அடைக்கப்பட்டிருக்கும். வீட்டின் முன்புறம் முற்றத்திற்கான நிலம் நீங்கலாக பனை மட்டைகளால் "சீமால்" வேலி அடைத்திருப்பார்கள். சீமால்

வேலிகளில் பயிற்றம் கொடிகள், பாவற் கொடிகள், அவரைக் கொடிகள் எனப் பலதும் படர்ந்து தளைத்துப் பூத்துக் காய்த்திருக்கும். வீட்டைச் சுற்றியுள்ள வேலிகளில் முசுட்டை, முல்லைக் கொடிகள் படர்ந்து தளைத்திருக்கும். வேலிகளுக்கு தடிகளாகப் போடப்பட்டிருக்கக் கூடிய முருங்கைகளும் காய்த்திருக்கும். வீட்டின் நிலப்பரப்பிலுள்ள இன்னொரு பக்கத்தில் போடப்பட்டிருக்கும் பந்தலில் பாகற்காய், புடலங்காய்களும் காய்த்துத் தொங்கும். சிலருடைய வீட்டுச் சீமால் வேலிகள் முற்றுமுழுதாக செம்பருத்தி செடிகளால் அடைக்கப்பட்டிருக்கும். இச் செடிகளின் பூக்கள் சம்பல் செய்து சாப்பிடவும் மருத்துவத் தேவைகளுக்கும் பயனுள்ள தாயிருந்தது. இச்செடிகளின் இலைகளை அரைத்து தலையில் தேய்த்து குளிக்கும் வழக்கமிருந்தது. பச்சை நிறத்திலான இலைகளைக் கொண்ட இச்செடிகளிடையே பூத்திருக்கும் சிவப்பு நிறத்திலான செவ்வரத்தம் பூக்கள் வேலியையும் முற்றத்தையும் அழகு செய்து கொண்டிருந்தது.

செவ்வரத்தம் பூச்செடிகளில் சின்னஞ்சிறிய சிட்டுக் குருவிகளும் தத்தித் தாவி குந்தியெழும்பி பறந்து திரிந்து முற்றத்திற்கு அழகைச் சேர்த்திருந்தன. அதிகாலைப் பொழுதில் முற்றத்து வேப்பமரக் குயில் கூவி துயிலெழுப்பியது. வண்ணத்துப் பூச்சிகளும் சுற்றிச் சுழன்று பறந்து திரிந்து முற்றத்தின் அழகை மேலும் அதிகரித்திருந்தன. அன்றைய காலத்தில் சிறுவர்களாயிருந்தவர்களுக்கு இந்த அழகிய காட்சிகளைப் பார்த்து ரசித்து மகிழும் வாய்ப்பிருந்தது. இன்று எங்கள் கிராமத்தில் சிட்டுக் குருவிகளுமில்லை. குயில் கூவித் துயில் எழுப்புவதுமில்லை. அந்தக் குயில் தரும் கீதமினிய

குரலோசை கேட்பதுமில்லை. தூக்கணாங் குருவிகளுமில்லை. அக்குருவிகளின் அதிசயமிக்க கூடுகள் ஊஞ்சலாடும் அழகிய காட்சியுமில்லை. எங்கே போனது இந்த ஆனந்தம்? வெடிகுண்டு ஓசையைக் கேட்டு வெருண்டு இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் போன பறவைகள் ஏன் இன்னும் எங்கள் வீட்டு முற்றங்களுக்கு திரும்பி வரவில்லை. கொஞ்சும் மைனாக்களெல்லாம் எங்கள் வீட்டு முற்றங்களில் கூடிக் குலாவிய காலமெல்லாம் எங்கே போயிற்று? எப்படியில்லாமற்போனது இந்த இன்ப நிலை? வீட்டு முற்றங்களில் பூச்செடிகள், பூமரங்கள் இல்லாமற் போனதாலா?

வீட்டு முற்றங்களில் பூச்செடிகள், பூமரங்கள் மீண்டும் தளைக்க வேண்டும். வேப்ப மரம், மாமரச் சோலைகளும் உருவாக வேண்டும். இடம்பெயர்ந்த குருவி இனங்கள், பறவைகள் மீண்டும் திரும்பி வந்து மரச் சோலைகளிலும் வீட்டு முற்றங்களிலும் வாழ வேண்டும். அன்றைய கால இன்பநிலை மீண்டும் மலர்ந்து மனங்கள் மகிழ்ந்திட வேண்டும்.

09-06-2009

# வயலில் விளைந்த உழைப்பின் விளைச்சல் முன்றலில் அனைவர்க்கும்

எமது முன்னோர்கள் உழுது பயிர் செய்து வாழ்வதிலும் ஒரு பண்பாட்டை பேணி வளர்த்தார்கள். விதைத்து உழுது பயிர் செய்து விளைந்ததும் தைத் திருநாளன்று புதிர் கொய்யப்படும். கொய்த புதிரின் நெல்லைக் குற்றி பருப்பும், பாலும், சர்க்கரையும், நெய்யும் சேர்த்து பொங்கல் செய்வர். இறக்கிய பொங்கல், பழங்களுடன், கரும்பும், இளநீரும் சேர்த்து எழுவான் கதிரவனுக்கு இலை போட்டு மடை விரிப்பது எமது முன்னோர்களின் வழக்கம். மடை குலைத்து இன சனம், சுற்றம் சூழவிருந்து பொங்கல் சாப்பிடுவதும் கொண்டாடி மகிழ்வதும் வருடாந்தம் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாயிருந்தது. விவசாயிகளின் வீடுகளில் இப்பொங்கல் விழா தவறாது இடம்பெறும். பொங்கல் விழா நடைபெற்று மூன்றாவது நாள் ஏரிழுத்த எருதுகளுக்கும், பால் கறந்த பசுக்களுக்கும் பொங்கல் செய்து படைப்பதும் வழக்கமாயிருந்தது. இவ்விழாவினை "பட்டிப் பொங்கல்" என்று அழைப்பர். விளைச்சலைக் கொடுத்த வயல் மண்ணுக்கும் பொங்கல் செய்து மடை விரிப்பதும் எமது முன்னோரின் பண்பாடாயிருந்தது.

"வயலில் விளைந்த உழைப்பின் விளைச்சல் முன்றலில் அனைவர்க்கும்" என்று சு.வி. யின் பாடல் வரி ஒன்று கூறுவது போல் விளைந்த நெல்லை முற்றத்தில் காயவைத்து உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்க் கெல்லாம் ஊதியமாய் வழங்கிடுவர் விவசாயிகள். வருடத்தின் இடைப்பட்ட காலத்தில் ஒடியல், பனாட்டு போன்ற பொருட்களையும் உதவியாகக் கொடுத்துதவுவதும் அக்கால வழமையாயிருந்தது.

**சித்திரைக் கதை**

ஒவ்வொரு வருடமும் சித்திரையில் வரும் முழுநிலா (பௌர்ணமி) நாளன்று வைரவர், ஐயனார் மற்றும் அம்மன் கோயில்களில் சித்திரைக் கதை படிப்பது வழமை. இக் கதையில் சொல்லப்படும் கருத்துக்கள் எவ்வாறிருந்த போதிலும் இக்கதைக்கு மக்கள் செவிமடுத்த காலத்தில் பாவம், பழிக்கு அஞ்சி வாழ்ந்தார்கள்.

சித்திரை விழாவன்று பெரிய அண்டாக்களில் கஞ்சி காய்ச்சுவார்கள். அத்தோடு பொங்கல் பலகாரங்களும் செய்வார்கள். இவ்விழாவிற்கு கோயில்களுக்கு அயலில் உள்ளவர்களின் பங்கு இயன்றளவிலிருக்கும் விழாவிற்கான பணிகளை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் சேர்ந்தே செய்வர். விழா முடிந்ததும் கஞ்சியும் பொங்கல் பலகாரங்களும் விழாவிற்கு சமூகமளித்த அனைவர்க்கும் வழங்கப்படும். பனையோலையில் தயாரித்த பிளாக்களில் ஒரே சோலையிற் பூத்த மலர்கள் போல எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்திருந்து கஞ்சி குடிப்பர். மிஞ்சிய கஞ்சியும் பொங்கலும் பலகாரங்களும் விழாவிற்கு சமூகமளித்த எல்லோருக்கும் பொருள் கொடுத்தவர், கொடுக்காதவர் என்ற பாகுபாடில்லாமல் அவரவர் குடும்ப நிலையையும் உறுப்பினர் எண்ணிக்கை

யையும் கருத்திற் கொண்டு பகிர்ந்தளிக்கப்படும். இந்நாள் எல்லோர்க்கும் மகிழ்ச்சி கொள்ளும் திருநாளாயிருந்தது. பொங்கல், அவல், கடலை, மோதகம் என எல்லாவிதமான பலகாரங்களோடும் நுங்கும், இளநீரும் சாப்பிட்டு வயிறும் மனமும் குளிர்ந்திருக்கும். இனிய நன்னாளாயும் இருந்தது.

**கூடிப் பணி செய்தல்**

சித்திரை விழாவில் ஒன்று கூடிப் பணி செய்வது போல் ஒவ்வொரு வீட்டிலும் நடைபெற்ற வீடு வேய்தல், வேலியடைத்தல், விழாக்களுக்கான பந்தல் அமைத்தல், மரண நிகழ்வுகள் எல்லாவற்றிலும் உறவினர்கள், அயலவர்கள் எல்லோரும் பங்குகொண்டு பணி செய்வது அக்கால வழமையாயிருந்தது. இவ்வாறு ஒவ்வொரு வீட்டு வேலைகளும் பணச் செலவின்றி நன்றாய் நடைபெற்றது. அன்றைய கால மக்களின் ஒருமைப்பாட்டினால் "ஊர் திரளத் தேர் உருளும்" என்பது போல எல்லோருடைய வாழ்க்கைத் தேரும் நன்றாகவே உருண்டு கொண்டே இருந்தது. அது ஒரு காலம். அக்கால நிகழ்வுகளின் நினைவுகளை கவிஞர் சு.வி.யின் பாடல்கள் பலவற்றில் காணலாம். அதிலொரு பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**அது ஒரு காலம்**

*அது ஒரு காலம் ஆமாம் அது ஒரு காலம்*
*அது ஒரு காலம் ஆமாம் அது ஒரு காலம்*

*எங்கள் மண்ணில் நாங்கள் மன்னர்கள்*
*எங்கள் வாழ்வில் குறுக்கிட எவருமில்லை.*

*வாழ்வில் இனிமை வழியும் கனவை*
*வறுமை கூட தடுக்கவில்லை.*
*அது ஒரு காலம் ஆமாம் அது ஒரு காலம்*

*வரண்ட மண்ணில் வாழ்வை விளைத்தோம்*
*வாய்க்கால் ஓரப் புல்லுக்கும் வாழும் முறைமை காத்தோம்*
*வியர்வை சொரிந்த உழைப்பின் விளைச்சல்*
*முன்னறில் அனைவருக்கும்*
*வண்டி மாட்டின் சதங்கைகளாய் கலகலவென்று*
*குலுங்க நடந்த அது ஒரு காலம் ஆமாம் அது ஒரு காலம்.*

*எங்கள் வயல்கள் எங்களுடையவை*
*எங்கள் தெருக்கள் எங்களுடையன*
*இனியது இரவு இனியது நிலவு*
*இனியன எங்கள் காலை ஒவ்வொன்றும்*
*வாழ்வொரு காதல் தேன் வதையாக சுவைத்த*
*அது ஒரு காலம் ஆமாம் அது ஒரு காலம்.*

எமது முன்னோர்களின் வாழ்வின் சுவையை இனிய கவிதை வடிவில் வரைந்துள்ளார் சு. வில்வரெத்தினம்.

**தோட்டச் செய்கை**

தோட்டப் பயிர்களைப் பொறுத்தளவில் புகையிலைச் செடியே முக்கிய பணப்பயிராக இருந்தது. தோட்டச் செலவு களுக்குரிய பணச் செலவுகளை தோட்ட உரிமையாளரே பொறுப்பேற்றுக் கொள்வார். புகையிலை விளைந்து விலை போனதும் விற்கப்பட்ட பெறுமதியில் ஐம்பது வீதம் தோட்ட உரிமையாளருக்கு உரியதாயிருந்தது. ஏனைய பங்கு தோட்டச்

செய்கையில் உதவியாளர்களாயிருந்த மூவருக்கு கொடுக்கப்படும். தோட்டத்தில் புகையிலையோடு சிறிய அளவில் மரக்கறிகளும் விளைவிக்கப்படும். விளைவிக்கப்பட்ட மரக்கறிகளை தோட்ட உரிமையாளரும், தோட்டத் தொழிலாளரும் தங்கள் வீட்டுத் தேவைகளுக்கு பகிர்ந்தெடுத்துக் கொள்வது வழக்கமாயிருந்தது. இவ்வழி முறைகளால் தரமான உற்பத்தியும் தொழிலாளர் களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியமும் கிடைத்தது. தோட்ட உரிமையாளர்க்கும் பணியாளர்களுக்குமிடையில் நல்லுறவும் தொடர்ந்திருந்தது.

## ஒரு ரூபாயின் உயர்ந்த பெறுமதி

தோட்ட உரிமையாளரிடம் புகையிலையை கொள்வனவு செய்ய வரும் வர்த்தகர் புகையிலைக்குரிய விலையை பேசி முடிவு செய்ததும் தரகர் மூலம் ஒரு ரூபா நாணயத்தை அடையாள முற்பணமாகக் கொடுப்பார். புகையிலைக்குரிய பெறுமதியை சில நாட்களோ, சில மாதங்களோ கடந்து தவணை முறையில் பகுதி பகுதியாக சிலவேளை ஒரே தடவையிலும் வர்த்தகரால் கொடுக்கப்படும். இரு பகுதியினர்க்கும் இடையில் தகராறு எதுவும் ஏற்பட்டதுமில்லை. இத்தனைக்கும் முற்பணமாக கொடுக்கப்பட்ட ஒரு ரூபா மட்டுமே அடையாள மாகவும் ஒப்பந்தமாகவுமிருந்தது. வாய்ப்பேச்சிற்கு உயர்ந்த மதிப்பும் பெறுமதியுமிருந்தது அது ஒரு காலம். மனிதர்கள் வாய்மை தவறாது வாழ்ந்த காலம் அது.

## சிறிய பண்ணையாளர்

மூன்று அல்லது நான்கு ஏக்கர் நெல் வயல்களும் ஓரிரு ஏக்கர் மேட்டுக் காணியும் ஓரிரு பனை, தென்னங் காணிகளும் சில காளை மாடுகளும், பசுக்களும் செம்மறியாடுகளும்

பயிர்ச்செய்கைக்கான தளபாடங்களையும் பொருட்களையும் உடையவர்கள். சிறிய பண்ணையார் போல் வாழ்ந்தார்கள். இத்தகைய நூற்றுக்கணக்கானோர் எங்கள் ஊரில் வாழ்ந்ததுண்டு. இவர்களை மக்கள் "கமக்காரர்" என்று அழைத்தனர். இவர்களுடைய வாழ்விலே ஏனைய சில மக்களின் வாழ்வும் தங்கியிருந்தது. இப்பண்ணையாளர்களிடம் விவசாயத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களு மிருக்கும். இப்பொருட்களையும், காளை மாடுகளையும் தேவைக்கேற்ற விதத்தில் சிறிய விவசாயிகளுக்கு கொடுத்துதவும் வழமையுமிருந்தது. பொருள் வளத்தோடு நல்ல மனவளமும் இருந்ததால் மக்களிடத்தில் இவர்களுக்கு உயரிய மதிப்பும், மரியாதையும் விளங்கியது.

### அன்றைய கால உணவு முறை

பழஞ்சோறும் மோரும் அல்லது ஒடியல் மா பிட்டும் மீன் குழம்பும் காலையுணவாக இருக்கும். கமத்தொழிலாளர்கள் காலையுணவைப் பெரிதுபடுத்தமாட்டார்கள். பனங்கள்ளே அவர்களின் காலை உணவாக இருந்தது. பசியையும், தாகத்தையும் தீர்க்கும் வலிமை இப்பனங்கள்ளிற்குண்டு. பனங்கிழங்கும் தேங்காய்ச் சொட்டும் சிறுவர்களின் விருப்பமான உணவாயிருந்தது. பனங்கிழங்கு இல்லாத காலத்தில் புளுக்கொடியலும் தேங்காயும் சிறாரின் விருப்பமான தேர்வு. தீயில் சுட்டெடுத்த பனங்கிழங்கும், தேங்காயுமென்றால் சிறுவர்க்கு மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் அதில் அலாதி விருப்பம். மீன்குழம்பும் சோறும் முருங்கையிலை வறையும், முசுட்டை இலையில் சொதியும் மதிய உணவாயிருக்கும். மீன் கிடைக்காத வேளைகளில் முருங்கைக்காயில் குழம்பும், முசுட்டை இலையில் சொதி அல்லது முல்லை இலையில்

குழம்பும், முசுட்டை இலையில் வெள்ளைக் கறியும் சோறும் என்ற வகையில் மதிய உணவு நிறைவேறிவிடும். இவைகளில் மீனுக்கு மட்டுமே பணம் செலவிடப்படும். மீன் அல்லது நண்டு, இறால் என்றவாறு கடலுணவு அதிகமாயிருந்தால் இவைகளுடன் சோற்றுக்குப் பதிலாக ஒடியல் மாப்பிட்டு அல்லது கூழ் என்று மதிய உணவில் மாற்றம் ஏற்பட்டு விடும். கடல்த் தாமரை, சங்குச் சதை, மட்டிச் சதை, இறால், நண்டு போன்றவை விருப்பத்திற்குரிய கடலுணவுகளாயிருந்தன.

விவசாயிகளின் வீடுகளில் சிறுதானியங்கள் கூடுதலாக இருந்ததால் எள்ளு அல்லது பயறு போன்றவற்றில் தயாரிக்கப் பட்ட உணவுப் பொருட்கள் பிற்பகலின் உணவாயிருக்கும். அயலவர், உறவினர் வீடுகளில் உணவுப் பற்றாக் குறையிருந்தால் உள்ளவர்கள் இல்லாதோருக்கு உணவைப் பகிர்ந்தளிக்கும் வழமையிருந்தது. அன்றைய காலங்களில் பால்த் தேவைக்கு மட்டுமல்லாமல் பசளைத் தேவைக்காகவும் மந்தைகளை அதிகமாக வளர்த்தார்கள். விவசாயிகளின் வீடுகளில் அவர்களுடைய தேவைக்கு அதிகமாக பசுப்பால் கிடைக்கப் பெற்றதனால் பாலைக் காய்ச்சி தயிர் போட்டு மோர் கடைவர். கடைந்த மோரை தங்கள் தேவை போக மீதியை அயலிலுள்ளவர்களுக்கு கொடுத்துதவுவது அன்றைய காலத்தின் வழமை.

விவசாயிகள் அல்லாதோரும் ஓரிரு பசுமாடுகளையும் சில வெள்ளாடுகளையும் வளர்ப்பார்கள். எனவே அன்று பாலுக்கும், மோருக்கும் பஞ்சமிருக்கவில்லை, உணவுக்கும் பஞ்சமிருக்க வில்லை, உறவுக்கும் பஞ்சமிருந்ததில்லை, பொய், களவு, கொலை என எதுவும் இருந்ததில்லை. மக்கள் எந்தப் பயமுமின்றி மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள். அது ஒரு பொற்காலம்.

18-06-2009

# எமது கிராமத்தின் இயற்கை வளம்

**1950**க்கு முன் புங்குடுதீவின் தென்மேற்குத் திசையிலும் வடமேற்குத் திசையிலுமாக இரு காடுகள் காணப்பட்டன. ஏனைய இடப்பரப்புகளிலும் குடிமனையை நெருங்கி சிறிய பல காடுகளைக் காணக் கூடியதாயிருந்தது. தென்மேற்குத் திசையில் காணப்பட்ட வனத்திற்கு "மலைச் சரிவு" என்று பெயர் வழங்கிற்று. அவ்வனப் பகுதியைச் சிலர் மலைச்சாரல் என்றும் இன்னும் சிலர் மலைச்சேரி என்றும் அழைத்தனர். இவ்வனம் நெடிந்துயர்ந்த மரங்களை உடையதாக இல்லாத போதிலும் ஆல், அரசு, புங்கு, புன்னை, திருக் கொன்றை, விளாத்தி, இலந்தை, ஆவரை, நொச்சி எனப் பலதரப்பட்ட மரங்களை உடைய அடர்த்தியான வனமாய் இருந்தது. புங்குடுதீவிற்கு தென்திசையிலுள்ள கடலின் கிளையொன்று தென்மேற்குத் திசையிலிருந்து வடக்குத் திசை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றது. இக்கடல் முனைப் புலத்திற்கும் நடுவுத் துருத்திக்கும் இடையில் ஊடறுத்துச் செல்கின்றது. இக்கடலுக்கு கிழக்குத் திசையில் "புதுக்குளம்" என்றும் "மண்டப குளம்" என்றும் பெயர் கொண்ட இரண்டு குளங்களும் உண்டு. மேய்ச்சல் தரை ஒன்றும் காணப்பட்டது. மழை வெள்ளம்

தேங்கும் தாழ்வு நிலப் பகுதியும் அத்தாழ்வு நிலப் பகுதியில் பல திட்டுக்களும் இருந்தன. இவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து அமைந்திருந்த பகுதிகளின் நடுவே வனப்பு மிகுந்து வளம் நிறைந்த அழகிய இச்சோலை வனம் அமைந்திருந்தது. இத்தாழ்வு நிலப்பகுதியில் உள்ள திட்டுக்களில் கற்றாளைகள் தளைத்துப் பூத்திருக்கும். இன்னும் சில திட்டுக்களில் ஆவரைச் செடிகளில் கொத்துக் கொத்தாக மஞ்சள் நிறப் பூக்கள் பூத்துக் குலுங்கும். தாழ்வு நிலப் பகுதியில் மழை வெள்ளம் நிறைந்திருக்கும் அவ்வேளைகளில் அங்கு ஓர் நன்னீர் ஏரியைக் கண்டோம். பூக்களாலும், ஈச்சங்காய் குலைகளாலும் நிறைந் திருக்கும் பொழுது அங்கு ஓர் அழகிய பூங்காவைப் பார்த்தோம்.

மாரி காலத்தில் இச்சோலை வனத்திற்கு வெளிநாடு களிலிருந்து வரும் பெரிய இனப் பறவைகள் கூட்டம் கூட்டமாக நிறைந்திருக்கும். உள்ளூர் பறவை இனங்களும் இவ்வனத்தில் குடியிருக்கும். கிளிகள் கதை பேசும். கீதமினிய குயில்கள் இசை யெழுப்பும். ஏனைய பறவைகள் பாட்டுப் பாட வண்டினங்கள் வீணை மீட்டும். இக்கால வேளைகளில் இச்சோலை வனம் ஓர் அழகிய பறவைகள் சரணாலயமாக காட்சி தந்திருந்தது. வெளிநாடுகளிலிருந்து வரும் பறவைகளுக்கு வருடத்தில் ஆறு மாதகாலம் தற்காலிக வாழ்விடமாகவும் உள்ளூர் பறவை களுக்கு நிரந்தர வாழ்விடமாகவுமிருந்தது இவ்வனச்சோலை.

**தூக்கனாங் குருவிக் கூடுகள் தொங்கக் கண்டோம்! இவ்வனத்தினிலே**

இவ்வனத்தில் நின்ற நெடிதுயர்ந்த மரங்களின் கிளைகளில் தூக்கனாங் குருவிக் கூடுகள் தொங்கும். தென்றல் வந்து தாலாட்ட இவ்வழகிய கூடுகள் ஊஞ்சலாடும். இச்சின்னஞ் சிறிய குருவிகளின் ஆச்சரியம் மிக்க அழகிய கூடுகள் ஓர் உலக

அதிசயமே! இன்று இவ்வழகிய கூடுகளைக் காண முடிவ தில்லை. இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் தேசத்தின் வளமும், அழகும் அழிந்து போய்க் கொண்டிருக்கின்றது.

**தோகை விரித்தாடும் நீல வண்ண மயில்**

வான்முகில் நிறம் மாறும் பொழுது தோகை விரித்தாடும் ஆடற்கலையை உலகிற்கு அறிமுகப்படுத்திய நீல வண்ணத் தோகை மயில். வனத்தின் பக்கத்தேயிருந்த பசும் புற்தரை தோகை மயிலின் சதுர் ஆட்டத்திற்கு மேடையாய் அமைந்திருந்தது. சற்றுத் தூரத்தில் நின்ற பருத்த மரங்களின் மறைவில் நின்று அழகு மயிலின் பரதம் பார்த்திருந்தோம். அது ஓர் காலம். ஆடிப்பாடி மகிழ்ந்திருந்த இளவயது காலம் அது. அக்காலத்தின் நினைவுகள் இன்றும் எமது மனசைவிட்டு மறையவில்லை.

**கார்த்திகைப் பூ**

பச்சைப் பசேலென இருந்த இச்சோலை வனத்திடையே கிளைக்கொரு பூவாக பூத்திருக்கும் கார்த்திகைப் பூ. இப்பூ கண்ணில் தென்பட்டதும் காலமிது கார்த்திகை மாதம் என நினைவில் வரும். வருடத்திற்கொருமுறை கார்த்திகை மாதத்தில் மாத்திரமே இப்பூ மலரும். இப்பூவிற்கும் வானவில்லுக்கும் சில பொருத்தங்களுமுண்டு. வானவில்லின் நிறத்திற்கும் கார்த்திகைப் பூவின் நிறத்திற்கும் ஓரளவு ஒற்றுமையுண்டு. மண்ணில் மலரும் மலர்களில் கார்த்திகைப் பூவே மிகவும் அழகானது. வானில் தோன்றும் காட்சிகளிலும் வானவில்லே அதி சிறந்த அழகுடையது. வண்ண வண்ண நிறம் காட்டுவதிலும் இவ்விரண்டிற்கும் நிகரேதுமில்லை.

இன்றைய காலங்களில் எமது தேசத்தில் கார்த்திகைப் பூக்களை காண்பதரிது. சிறிய காடுகள் அழிக்கப் பட்டதே இதற்கான காரணம். நுளம்பின் பெருக்கத்தை அழிக்கும் நோக்குடன் அழிவிலிருந்து தவறித் தழைத்திருந்ததும், அரிய மூலிகை வளங்களை கொண்டிருந்ததுமான சிறிய காடுகளும் அழிக்கப்பட்டுள்ளன. இது அறியாமையின் விளைவே. நுளம்புகள் உற்பத்தியாவது மரங்கள், செடிகளில் அல்ல. நீர் தேங்கும் குட்டைகள், சேறு சகதிகள் நிறைந்த இடங்கள், இளநீர்க் கோம்பைகள், நிலத்தில் காணப்படும் தென்னம் பாளைகள், பனங் கொக்கரைகள் (பாளை), சிரட்டைகள், பேணிகள், தகரங்கள், ரயர்கள், பொலித்தீன், பைகள் போன்றவற்றில் தேங்கிய மழை நீரில் உற்பத்தியாகும். நுளம்புகளில் ஒருபகுதியே செடிகளைச் சென்றடைகின்றன. நுளம்புகள் உற்பத்தியாகும் இடத்தை விட்டு விட்டு பயன் பல தரும் செடிகளை அழிப்பதால் அரிய மூலிகை வளங்களை இழந்து விடுகின்றோம்.

மலைச்சரிவென்னும் இவ்வனத்தின் பக்கத்திலிருந்த புற்தரையில் மாடுகளை மேய்த்திடும் பையன்களின் புல்லாங்குழல் இசையும் காற்றோடு கலந்து வந்து காதில் தேனாய் இனித்திடும். புற்தரையில் மேய்ந்திடும் பாற்பசுக்கள் கன்றுகளைத் தேடி கதறியழைத்திடும் பொழுது எழுந்திடும் "அம்மா" எனும் ஓசை நயம் எங்கள் தாய்மொழியாம் தமிழின் நினைவைக் கிளறும். உயிரினங்கள் பேசக் கற்றுக் கொண்ட காலம்முதல் தோன்றியது தமிழ் என்பர் மொழியியல் ஆய்வாளர்கள். இயல்பாகவே தோன்றிய மொழி தமிழ் என்ற உண்மையை எங்களுக்கும் புரிய வைத்தது பாற்பசுக்களின் குரலோசை.

**இவ்வனத்தில் கிடைக்கப்பெற்ற மூலிகைகளும், கனிகளும்**

இவ்வனம் பல்வகை வளங்களும், வனப்பும் உடையதாயிருந்தது. புங்கு, புன்னை, இயங்கு, கற்றாளை, ஆடாதோடை, தூதுவளை, மொசுமொசுக்கை, நாகதாளி, சீந்தில், வாதமடக்கி, முடக்கொத்தான், தூத்துவக் கொத்தான், பெருமருந்து, குப்பிளாய், உத்தமாகாணி என நூற்றுக்கணகான மூலிகைச் செடி கொடிகளும் இவ்வனத்திற் காணப்பட்டன.

நாவற்பழம், ஈச்சம்பழம், இலந்தைப் பழம், வில்வம் பழம், விளாம்பழம், கொவ்வைப் பழம் என விந்தைமிகு சுவை தரும் கனிகளையும் தந்து கொண்டிருந்தது இவ்வனம்.

அன்று மரக்கறி வகைகளை விளைவிக்காதோர் தங்கள் கறித் தேவைக்காக கருணைக் கிழங்கு, தும்பங்காய், காத்தோட்டியங்காய் போன்ற காய்களையும், கிழங்குகளையும் முல்லை, முசுட்டை, மொசுமொசுக்கை போன்ற இலை குழைகளையும் கற்றாளம் பூவையும் இவ்வனத்திலிருந்தே பெற்று வந்தனர். தேன் எடுக்கும் திறனுள்ளோர் இவ்வனத்திலிருந்து தேன் வதைகளையும் எடுத்தார்கள். ஊரின் தேன் தேவையினை இவ்வனமே ஓரளவு நிறைவு செய்தது. பற்பல அழகியலையும் கொண்டிருந்த இவ்வனச்சோலையில் கிளிகளின் கதைகள் கேட்டது குயில்கள் கீதமிசைத்தன. ஏனைய பறவைகள் பாட்டோசை எழுப்பின. பூவில் தேன் தேடும் வண்டினங்கள் இன்னிசை பரப்பின. இசை கேட்டு இன்புற்றிருந்தோம். தோகை விரித்தாடும் அழகு மயில்களின் ஆடற்கலையையும் கண்டு களித்தோம்.

சுவைமிகு கனிகளின் இனிமை சுவைத்தோம். உணவுத் தேவைக்குரிய இலை, குழைகளையும் கிழங்குளையும் இவ்வனத்திலிருந்து பெற்று வந்தோம். நோய் தீர்க்கும் மூலிகைகளையும் வனத்திலிருந்த செடி, கொடிகளில் இருந்து

பறித்தெடுத்தோம். இனிய தேனும், இளந்தென்றலும் இவ்வனச் சூழலில் கிடைத்தது. வனத்தின் அருகேயிருந்த நீலக் கடலின் அழகை ரசித்தோம். அந்திப் பொழுது நேரங்களில் அடிவானத்தின் அழகையும் பார்த்து ரசித்திருந்தோம். இத்தனை விதமான அழகியலையும் இன்ப சுகத்தையும் தந்திருந்ததோடு மனித வாழ்வின் உயிரோட்டமாயிருந்த கடல் சார்ந்து வனப்பு மிகுந்து வளம் பலவும் பொருந்திய இச்சோலை வனம் இப்பொழுது அங்கில்லை. விறகுத் தேவைக்காக வெட்டி அழிக்கப் பட்டுவிட்டது. வனம் மட்டுமல்ல மனித வாழ்வின் தேவைக்குரிய அளப்பெரிய செல்வங்களும் சேர்த்தே அழிக்கப்பட்டுவிட்டது.

**கேரதீவு காடு**

புங்குடுதீவின் வடமேற்குத் திசையில் கடல் சார்ந்து மண் வளமுடைய நிலப்பரப்பில் இக்காடு அமைந்திருந்தது. 1970களில் இந் நிலப்பரப்பிலிருந்த காடு அழிக்கப்பட்டு நிலமற்றோரின் குடியிருப்புக்காக பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்நிலப்பரப்பு காடாய் இருந்த பொழுது பல சுவை தரு கனி மரங்களும், வேறு பல பயன் தரு மரங்களும் நிறைந்து காணப்பட்டன. இவ்வனத்தின் அயற் சூழலில் ஏராளமான ஈச்சம் செடிகளையும் காணக் கூடியதாக இருந்தது. தற்பொழுதும் இவ்வனமிருந்த அயற் சூழலில் ஈச்சம் செடிகளைக் காணக் கூடியதாயுள்ளது. கோயில் திருவிழாக் காலங்களில் இவ்வனப் பகுதியிலிருந்து தாழை மரங்களையும், ஈச்சம் பழக் குலை களையும் வெட்டியெடுத்துக் கொண்டுபோய் விழாப் பந்தல்களை அலங்கரிப்பார்கள். தாழை மரங்களும் அதன் காய்களும், ஈச்சம் பழக் குலைகளும் விழாப் பந்தல்களை மிகச் சிறப்பாக அழகு செய்யும்.

இவ்வனத்தின் அயலில் வசித்தோர் ஈச்சம்பழக் குலைகளை வெட்டியெடுத்துச் செல்வது வழமை. விந்தை மிகு சுவைதரு கனிகளில் ஈச்சம்பழமும் ஒன்று. வனத்தின் உள்ளே நுழையக் கூடியவர்கள் விளாத்தி, இலந்தை, நாவல் போன்ற கனிகளைப் பறித்துக் கொண்டு போவதும் வழக்கமாயிருந்தது. இந்நிலப்பரப்பு மண் வளம் உடையதாக மட்டுமல்லாமல் ஓரளவு நன்னீர் வளத்தையும் கொண்டுள்ளது.

கேரதீவு பிரதேசத்தில் காணிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அவற்றை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தென்னைச் செய்கைக்கேற்ற இந்நிலப்பரப்பில் மா, பலா, கொய்யா, நெல்லி, லாவுளு போன்ற கனிமரங்களையும் வளர்த்து வந்தால் அதிக பயனைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்விடத்தில் காணி பெற்றவர்களில் பலர் தற்போதும் அங்கு வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் மிகவும் வறுமை நிலையிலே உள்ளார்கள். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி இங்கு வசிப்போருக்கு மிகவும் அவசியம். வேலணை பிரதேச சபை புங்குடுதீவின் அபிவிருத்திக்கு முன்னுரிமை யளிப்பது அவசியமாகும்.

**கள்ளி ஆறு என்றழைக்கப்படும் மழை நீரோரி**

கேரதீவு எனும் மண்வளம் கொண்ட நிலப்பகுதிக்கு தென் புறமாகவும் நான்காம் வட்டாரத்திற்கு வடக்குத் திசையிலும் அமைந்துள்ள பரந்த வெளிகொண்ட தாழ் நிலப் பகுதியை "கள்ளியாறு" என்றழைப்பர். மாரிகாலங்களில் மேட்டு நிலப் பகுதிகளிலிருந்து வழிந்து வரும் மழை வெள்ளத்தால் இத்தாழ்வு நிலப்பகுதி நிரம்பியிருக்கும். இக்காலங்களில் இக்கள்ளியாற்றைப் பார்க்கும் பொழுது திருக்கேதீச்சரத்தில் உள்ள பரியதிரை எறியாது காணப்படும் பாலாவி ஆறு நினைவில்

வரும். அழுக்குகளோ, பாசி படர்ந்தோ காணப்படாத இவ்வாற்றில் எப்பயமும் இன்றி நீச்சலடித்து மகிழலாம். வெளித் தேசங்களிலிருந்து வரும் தாரா, நாரை, கோட்டான் மற்றும் சில வெளியுலகப் பறவைகளையும் மாரி மழை காலங்களில் இங்கே காணலாம். இவ்வாற்றிலும் இதனருகேயுள்ள கடலிலும் தாராப் பறவைகள் கூட்டம் கூட்டமாக நீந்தும் அழகை ரசிக்கலாம். நீந்திடும் தாராக்களில் ஒரு தாரா சுற்றிச் சுழன்று காவல் புரிவது அலாதியான அழகாயிருக்கும். இக்கள்ளி ஆறு எனும் மழை நீரேரியும் இதன் சுற்றுச் சூழலும் எல்லோரும் பார்த்து இன்புற்று மகிழ வேண்டிய இடங்களாகும். பசுமை நிறைந்த அழகிய காட்சிகள் நிறைந்திருக்கும். மார்கழி, தை, மாசி மாதங்களே இச் சூழலைப் பார்த்து மகிழ்வதற்கேற்றகால மாகும்.

இச்சூழல் மட்டுமல்லாமல் இதன் அயலிலுள்ள ஐயனார் கோயிலும், அழகிய இயற்கைச் சூழல் நிறைந்திருக்கும் பாணாவிடை சிவன் கோயிலும், ஐந்தாம், ஆறாம் வட்டாரப் பகுதிகளில் குடிகொண்டு அருளும் பிள்ளையார் கோவில்களும் அவற்றை அண்டிய சூழலும், பெருங்காடு மாரியம்மன் கோயிற் சூழலும் புங்குடுதீவு சர்வோதய அமைப்பும் அதன் சுற்று வட்டமும், அழகிய கோபுரங்களும், மணி மண்டபமும், யாத்திரிகள் தங்கு மடங்களோடு அமைந்து அருள் பாலித் திருக்கும், கண்ணகை அம்மன் கோயிலும் அதன் சுற்றுப் புறமும் அதிலிருந்து சற்றுத் தூரத்திலுள்ள “கோரியா வடி” கலங்கரை விளக்கமும் பார்த்து மகிழ வேண்டிய இடங்களாகும்.

25-06-2009

# மணல் போர்த்த வீதிகள் தோறும் நிழல் போர்க்கும் மரங்கள் நிறைந்திட வேண்டும்

ஓ மனிதா! நிழலின்றித் தவிக்கின்றாயா? பூமாதேவிக்கும் நிழல் தந்த மரங்கள் நின்ற வாழ்விடம் நீள்பாலை வெளியாகிப் போமா?

மேலே தரப்பட்ட தலைப்பும், கவிதை வரிகளும் கவிஞர் சு. வில்வரெத்தினத்தின் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. நமது தேசம் நிழல் தரு மரங்களில்லாது வெயில் போர்த்த வெளியாகிப் போச்சு. காலத்தின் கோலத்தினால் அனல் சுட்டெரிக்கின்றது. உடல் தீய்ந்து காய்ந்து போகின்றது. வியர்வையும் ஓய்வதில்லை. மனம் நிழலைத் தேடும். மரத்தின் கீழ் நின்று இளைப்பாற மனம் ஏக்கமுறும். நிழலோ எட்டிய தூரத்தில் கிடைப்பதில்லை. வெயில் குளிப்பதைத் தவிர வேறு வழியில்லை. மரங்கள் தளைத்திடாத இடங்களில் நிழலேது? குளிர் தென்றற் காற்றேது?

### இனிய சுகம் தரும் தென்றற் காற்று

சிந்தை ஒவ்வொன்றும் சிலிர்க்கச் செய்யும் அதன் பெயர் தென்றற் காற்று. இது பாரதிதாசனாரின் பாடல் வரிகளில் ஒன்று.

மரங்களில்லாத இடங்களில் நிழலும் கிடைக்காது. இளம் தென்றற் காற்று வந்தெம்மை தழுவிச் செல்லவும் மாட்டாது. "நிழலின் அருமை வெயிலில் தெரியும்" என்பது முதுமொழி. வெயில் சுட்டெரிக்கும்போது நினைவில் வரும் இம் முதுமொழி மழை காலம் வந்ததும் நினைவில் நிற்காது மறந்து போய்விடும். நிழல்தரும் மரங்களில் அல்லது கனி தரும் மரங்களில் சிலவற்றையேனும் நட்டு வளர்க்கமாட்டார்கள் நம்மவர். கடலிலிருந்து எழுந்து கானலுடன் கலந்து வரும் காற்று மரங்களைத் தழுவி உறவாடி குளிர்ந்து வரும்பொழுது தென்றலென்று மறுபெயர் பெறுகின்றது. தென்றற்காற்று பட்டதும் இதமான இனிய இன்ப சுகம் கிடைக்கிறது. காய்ந்து கறுத்திருந்த மேனியும் மினுமினுப் படைகிறது. இந்த இன்ப சுகத்தை பெறுவதற்கு நம் தேசம் நிழல் தரும் மரங்களால் நிறைந்திட வேண்டும்.

## மண் வளமடைய மழை வேண்டும்

மழை பெய்தால்தான் மண் வாசம் தரும். மரங்கள் அடர்த்தியாக தழைத்திருந்தால்தான் மழை பெய்யும். மண் வாசமடைவதற்கு மழை அவசியம். மழை வீழ்ச்சியை சீராக பெறவேண்டுமானால் மரங்கள், செடிகள், கொடிகளெல்லாம் தழைத்து நிறைந்திருக்க வேண்டும். மரங்கள் அடர்த்தியாக தழைத்திருக்கும் இடங்களிலே மழை முகில் படிந்து சீராக மழை பொழிவதை காணலாம்.

இன்றைய காலங்களில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் இடம்பெறும் வேளைகளிலேயே நம் தேசம் மழையை பெறுவதை காணக் கூடியதாகவுள்ளது. அதுவும் ஒரு சில நாட்களில் மழை கொட்டிவிட்டு போய்விடும். பெய்யும் மழை நீரை பயன்படுத்தும் வழியறியாது வாழாதிருந்திடுவோம். வீடுடைய நிலங்களுக்கும் மற்றும் காணி நிலங்களுக்கும்

வரப்புகளை சுற்றி வரக் கட்டி மழை நீரைத் தேக்கினால் பனைகள், தென்னைகள் மற்றும் பலன் தரும் மரங்கள் எல்லாம் தழைத்துக் காய்த்து காய் கனிகளை நிறைவாய் தரும். அதில் கவனம் கொள்ள மாட்டோம். தொட்டிகளைக் கட்டி மழை நீரைத் தேக்கினால் குடி நீர்ப் பிரச்சனையையும் தீர்க்கலாம். அதையும் செய்ய மாட்டோம். பெய்யும் மழை நீர் வீணே வழிந்தோடி கடலை நாடிப் போய்விடும். 1950களுக்கு முன் மாரி காலம் ஆறுமாதம் வரை நீடித்தது. சித்திரை, ஆடி மாத காலங்களிலும் சிறந்த மழை பெய்யும் வழக்கமிருந்தது. தற்பொழுது இந்நிலை பொய்த்துவிட்டது. மாரிமழை காலம் இரண்டு மாத கால எல்லைகளுக்குள் குறுகிவிட்டது. காடுகள், மரங்கள் அழித்தொழிக்கப் பட்டதே இதற்கான காரணமாகும்.

உண்ண உணவுமின்றி குடிநீருமில்லாது செத்து மடிகின்றன. உயிரினங்கள், பறவைகளும் இடம்பெயர்ந்தும், புலம் பெயர்ந்தும் போய்விட்டன. மரங்கள் தரும் இலைச்சருகுகளில்லாது, மந்தைகள் தரும் எருப்பசளைகளு மில்லாது மண்வளமற்றுப் போகின்றது. நாட்டின் வளம் அருகிச் செல்வதை உணர்ந்தவர்களாய் நாமில்லை. உணர்வுள்ள விவசாயிகளுக்கு உடலில் வலுவுமில்லை. அவர்களிடம் பொருளாதார வளமுமில்லை. மரங்களை வளர்த்து தேச வளத்தைப் பெருக்க வேண்டிய கடமை நல்ல மனவளம் உள்ளவர்களை நோக்கி காத்திருக்கின்றது.

### வீதிகள் தோறும் மரங்களை வளர்ப்போம்

நமது சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக்குவதற்கு ஒவ்வொரு மரமும் உதவுகின்றது. மரங்கள் வெளியிடும் பிராண ($O_2$) வாயு சூழல் மாசடைவால் ஏற்படும் நச்சுக் காற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துகின்றன. சூழலியலாளர்களும் மரங்கள் காற்றை வடிகட்டுகின்றன என்று கூறுகின்றனர்.



சூழகம் அமைப்பினரால்
புங்குடுதீவில்
நடுகை செய்யப்பட்ட மரக் கன்றுகள்.

மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பது நிழலை மாத்திரம் பெறும் நோக்கோடு மட்டுமல்லாமல் சுவைதரு கனிகளைப் பெறுவதும் பசித்திருப்போரின் பசியையும் போக்கும் நோக்க முடையதாகவும் இருத்தல் வேண்டும். ஏழைச் சிறுவர்களின் நலன் கருதி சுவைமிகு கனிகளைத் தரும் நாவல் மரக் கன்றுகளையும், புளிப்பு கசப்பில்லாது காய்களாகவே பறித் துண்ணக் கூடிய மாங்காய்களையும், கனிகளையும் தரும் பாண்டி, சேலம் (கிளிச்சொண்டு), வெள்ளைக் கொழும்பான் போன்ற மாமரக் கன்றுகளை பொது மைதானங்கள், கோயில் வீதிகள் எங்கும் நட்டு வளர்த்தால் ஏழைச் சிறுவர்கள் தங்கள் பசியைத் தீர்ப்பதற்கு பயனுடையதாயிருக்கும். நிழலும், தூய காற்றும் கிடைத்திடும்.

பரந்து விரிந்து நிழலை தரும் மரங்களான வேம்பு, வாகை, இலுப்பை, மருத மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதும் பொருத்தமுடையது. பரந்த வெளிகொண்ட இடப்பரப்புள்ள இடங்களில் ஆலமரத்தை வளர்த்திடுவதும் போதிய நிழலைப் பெறுவதற்கு பொருத்தமுடையது.

நாம் கொண்டாடும் விழா ஒவ்வொன்றும் கருத்துடைய தாயிருக்க வேண்டும். ஊரின் வளர்ச்சிக்கும் வித்திடுவதாகவும் அமைய வேண்டும். நாம் செலவழிக்கும் பணமும், பொருளும் நாட்டுக்கும் பயனுடையதாய் அமைய வேண்டும். குறைந்தபட்சம் ஊத்தைகளை உணவாக்கி குளத்தைச் சுத்தம் செய்யும் மீன் போலவாவது எமது செயற்பாடுகள் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவருடைய பிறந்த நாள் விழாவன்றும், மறைந்தோர் ஞாபகார்த்த தினமன்றும் வருடமொருமுறை குறைந்தபட்சம் ஒவ்வொரு மரக் கன்றுகளையாவது நட்டு வளர்ப்போம். பிறந்தவர்கள் இறந்தவர்கள் பெயரை நட்டு வளர்த்த மரங்கள் பறைந்து கொண்டிருக்கும். ஊரும் உலகும் மரங்களை நட்டு வளர்த்தவர்கள் பேரை பேசிக் கொண்டிருக்கும். தர்மமும் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கும்.

## மரங்களின் ஆக்கத்திற்கு பங்களிப்புச் செய்யும் பறவைகள்

எமது தேசத்தில் நின்று அழிந்து போனதும், அழியாதும் நிலைபெற்றிருக்கும் மரங்களில் பனை, தென்னை, மருது, வாகை, இலுப்பை, மாமரம் நீங்கலாக ஆல், அரசு, நாவல், இத்தி, இலந்தை போன்ற மரங்களில் அநேகமானவை பறவைகளால் வித்திட்டு வளர்க்கப்பட்டவைகளே. இச்செயல் மூலம் எமது தேச வளத்திற்கு பறவைகள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. பறவைகளால் வித்திட்டு வளர்ந்த மரங்களிலிருந்து மனிதர்கள் பெரும் பயனைப் பெற்று வந்தனர். கனி தரும் மரங்களை மனிதர்கள் வளர்த்திடாத காலத்தில் பறவைகளால் வித்திடப்பட்டு வளர்ந்த மரங்கள், செடி கொடிகளிலிருந்தே மனிதர் இலை, குழைகள், காய்கள், கனிகளை தமது உணவுத் தேவைக்கு பெற்று வந்தார்கள். மரங்கள் தரும் கனிகளை உண்டு வாழும் பறவைகள் மீண்டும் மீண்டும் மரஞ் செடி கொடிகளை வித்திட்டு வளர்க்கத் தவறியதில்லை. இச்செயல் இன்றும் தொடர்கிறது. மரங்களும் இலை, குழைகளையும், காய் கனிகளையும், நிழலையும் தரவுந் தவறவில்லை. ஆனால் மனிதர்கள் மரங்களின் அழிவிற்கு காரண மாயுள்ளார்கள்.

## பறவைகள் விவசாயிகளின் நண்பர்கள்

பயிர்களின் அழிவிற்கு காரணமான புழுப் பூச்சிகளை கொக்கு, மைனா, புறா, செண்பகம் போன்ற பறவைகள் கொத்தித் தின்று உணவாக்கியதன் மூலம் அவற்றின் பரம்பலை குறைத்து வந்தன. வேலிகளில் தத்தித் திரிந்த செண்பகங்கள் மயிர் கொட்டிப் புழுக்களை கொத்தித் தின்று அப்புழுக்களின் பரம்பலையும் மிக மிகக் குறைந்திருந்தன. இதை உணராத

மனிதர்கள் பூச்சி, புழுக்களை அழிப்பதற்கு கிருமிநாசினிகளை பயன்படுத்தி வருகின்றனர். கிருமி நாசினிகளின் பயன்பாட்டினால் "செண்பகம்" போன்ற அரிய பறவையினங்கள் அழிவடைந்து அருகிச் செல்கின்றன. வேலிகள் இல்லாது போனதும் இப்பறவைகளின் அழிவிற்கு இன்னொருகாரணம் நச்சு மருந்துகளின் பாவனையால் பறவையினங்களின் பரம்பல் குறைந்து போய்விட்டது. ஆனால் எதிர் விளைவாக புழு, பூச்சிகளின் பரம்பல் அதிகரித்துவிட்டதே தவிர குறைவடைய வில்லை.

## ஆலமரம்

இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கப்போகும் மணமக்களை "ஆல் போல் தழைத்து வாழ்வீர்" என்று வாழ்த்துவார்கள் பெரியோர்கள். வையத்துள் வாழவேண்டிய வர்களை வாழ்த்துவதற்கு ஆலமரம் முன்னுதாரணமாக கொள்ளப்படுகின்றது. கடுகிலும் சிறிய விதையிலிருந்து முளைத்து வேரூன்றித் தளைத்து விழுதெறிந்து பரந்து ஆலமரம் பெருவளர்ச்சியடைகின்றது. வேரூன்றிய விழுதுகளில் சில பருத்து பெரிய கொப்புகளை முறிந்து விடாமல் சுமந்து நிற்கின்றன. சிறிய விழுதுகள் வேரூன்றியதும் சிறிய கொப்புகளை சுமந்து நிற்கின்றன. விழுதுகள் கொப்புகளை சுமந்து நிற்பதனாலேயே தாய் மரம் தொடர் வளர்ச்சியைப் பெற முடிகின்றது. மந்தைகளும் வாகனங்களும் நடமாடாத இடமாக இருந்தால் வேரூன்றும் விழுதுகளின் எண்ணிக்கை அதிகமாயிருக்கும். தாய்மரமும் பரந்து தளைத்து விரிவடையும். பரந்து விரிந்து தளைத்த ஆலமரம் வித்திட்டு முளைத்து வளரக் காரணமாயிருந்த பறவையினங்களுக்கு பல்லாயிரக்கணக்கான பழங்களை உணவாகத் தருகின்றது. உதிர்ந்த இலைகளை

மண்ணுக்கு பசளையாகத் தந்து மண்ணின் வளத்தைப் பெருக்குகின்றது. பறவையினங்கள் குடிகொள்ளவும் இடமளிக்கின்றது. வான்முகில் படிந்து மழை பொழியவும் காரணமாகின்றது. ஆலமரத்தை பார்த்து அறிய வேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு. அதனாற் போலும் சிந்திக்க தெரிந்த மனிதர்கள் "ஆல்போல் தளைத்து வாழ்வீர்" என்று வாழ்த்துதலுக்குரிய பொருளாக ஆலமரத்தை தேர்வு செய்தனர். சிந்தனையற்ற சில மனிதர்கள் மரங்களைத் தறித்தழித்து விடுகின்றனர். இதனால் மரங்களை நம்பி வாழும் பறவை யினங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து போகின்றன. ஒட்டு மொத்தமாக நம் தேசம் வளத்தை இழந்து போகின்றது.

## வீட்டு நிலப்பரப்புக்கேற்ற மரங்கள்

வீட்டுக்கொரு வேப்ப மரக்கன்றை நட்டு பாதுகாத்து வளர்ப்பது எமது முன்னோரின் முக்கிய குறிக்கோளாயிருந்தது. இம்மரம் பல நோய்களைத் தீர்க்கும் சக்தியுடையது. வேம்பின் இலை, தளிர் இலையின் காம்பு, மரத்தின் பட்டை, பழம், விதை, விதையிலிருந்து பெறப்படும் எண்ணெய் என இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோய்களைத் தீர்ப்பதற்குரிய மருத்துவ குணமுடையவை. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு வேப்பம் மரமாவது வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு அல்லது மூன்று மாமரங்களும் அவசியம். இவை "கறுத்தக் கொழும்பான்", "அம்பலவி" மாமரங்களா யிருந்தால் சுவைதரு மாங்கனிகளைப் பெறுவதற்கு ஏற்புடையதாயிருக்கும். வீட்டிற்கு கிழக்கிலும், மேற்குத் திசையிலும் மரங்கள் தளைத்து நின்றால் சூறைக்காற்று, வீட்டின் கூரையை அள்ளிச் சென்றிடாமல் பாதுகாக்கும் அரணாக இருக்கும். நிழலையும் நல்ல

காற்றையும் பெறவும் வாய்ப்பும் கிடைக்கும். அவரவர் வீட்டில் மாமரங்கள் நின்றால் அடுத்த வீட்டில் காய்த்த மாமரங்களிற்கு கல்லெறிய வேண்டிய தேவை வராது. பிறரிடம் கையேந்த வேண்டிய தேவையும் இல்லை.

**நாவல் மரங்கள்**

நாவல் மரத்தின் உருவாக்கத்திற்கு பறவைகளே காரணமாயிருந்தன. மனிதர்களின் பங்களிப்பு இருக்கவில்லை. நாவல் பழத்தினதும் விதைகளினதும் மருத்துவ பயன்களை எம்மவர்களில் பெரும்பாலானோர் அறிந்துமிருக்கவில்லை. ஆனாலும் நாவல் மரத்தின் கீழ் வைரவர் சூலத்தை நாட்டி வழிபட்டு வந்தார்கள். வைரவர் வாழும் இடம் நாவல் மரம் என்பது எமது சமூகத்தில் குடிகொண்டிருக்கும் எண்ணத்தின் பிரதிபலிப்பு. ஆதலால் ஒரு சில இடங்களில் இம்மரங்கள் அழிந்து போகாமல் காப்பாற்றப்பட்டது. நாவல் பழங்கள் விந்தையான இனிமைச் சுவையுள்ளவை. இப்பழங்களை அளவுக்கதிகமாகச் சாப்பிட்டாலும் திகட்டாது. தீமையும் விளையாது. இப்பழங்களுக்கும் அவற்றின் விதைகளுக்கும் நீரிழிவினை தடுக்கும் சக்தியுண்டென சித்த வைத்திய நூல்கள் கூறுகின்றன.

நாவல் மரங்கள் எவ்வித நிலப்பரப்பிலும் தளைத்து வளரும் தன்மை உள்ளவை. இதன் கன்றுகளை மழைக் காலங்களில் நட்டு விட்டால் போதுமானது. நீர் ஊற்றத் தேவையில்லை. நிழலின் தேவை கருதியும் சுவைதரும் கனிகளை உண்டு மகிழவும் நாவல் மரக் கன்றுகளை நட்டு வளர்த்திடல் வேண்டும்.

## மஞ்சவண்ண (மஞ்சவண்ணா) மரம்

எமது தேசத்தில் மாட்டு வண்டிகளைச் செய்வதற்கு பலவிதமான மரங்களையும் பயன்படுத்துவார்கள். மாட்டு வண்டியின் பிரதான பாகமாகிய துலாவிற்கு வைரம் பொருந்திய பனைமரமும், வண்டியின் தட்டுக்கு மாம்பலகையும், தட்டைச் சுற்றி நான்கு பக்கத்திற்கும், வண்டியின் சில்லுக்கும் பூவரசு மரத்தையும் வண்டியின் பின்பக்கத் துலாவிற்கு கீழ்ப்பக்கமாக தொங்கிக் கொண்டிருக்கும் குத்துக் கட்டைக்கு பட்டுப்போன (முருக்கஞ் செத்தல்) முருக்க மரத்தையும், வண்டியை இழுத்து செல்வதற்கு மாடுகளை பூட்டும் நுகத்திற்கு மஞ்சவண்ண மரத்தையும் பயன்படுத்துவார்கள். மஞ்ச வண்ணாவில் செய்யப்படும் நுகம் அழுத்தமாகவும், பாரங் குறைந்ததாகவும், முறிந்து போகாமலும், வெயிலுக்கு வெடித்துப் போகாமலும் இருக்கும் எனும் காரணங்களுக் காகவே இம்மரத்தினை நுகத்துக்கு பயன்படுத்துவது வழக்கம். வேறு தேவைகளுக்கு இம்மரத்தினை பயன்படுத்தும் வழக்கமிருக்கவில்லை.

முந்திய காலங்களில் வேப்ப மரங்கள் வீட்டுக்கு வீடு அதிகமாக காணப்பட்டதால் வீட்டுக்குரிய நிலைகளுக்கும், கதவுகளுக்கும் மற்றும் வாங்குகளைச் செய்வதற்கும் வேப்ப மரங்களையே பயன்படுத்தினார்கள். இன்றைய காலத்தில் வேப்ப மரங்கள் அரிதாகிவிட்டதால் ஏனைய மரங்களை பயன்படுத்த வேண்டிய நிலையாயிற்று. ஆகவே மஞ்ச வண்ணா மரத்தில் நிலைகளை செய்வதற்கு வாய்ப்பில்லை யென்றாலும் நன்றாக பருத்த இம்மரத்தின் பலகையில் வீட்டுக்குரிய கதவுகளையும் ஏனைய தளபாடங்களையும் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே முறையாக நேர் சீராக வளரும் மரங்களை தறித்தழித்துவிடாது வளர்த்தெடுக்க வேண்டும்.

**மூங்கில் மரங்கள்**

தென்னிலங்கையில் மூங்கில் மரங்களை பரவலாக காணலாம். வன்னிப் பிரதேசத்திலும், கிழக்கு மாகாணத்திலும் மிகக் குறைந்தளவிலேயே மூங்கில் மரங்களைக் காணக்கூடியதாகவுள்ளது. யாழ் மாவட்டத்தில் சிறிதளவிலாவது இம்மரங்களைக் காணமுடியவில்லை.

பனை மரங்களையும் பனஞ் சிலாகைகளையும் பெறுவது கடினமான இக்கால கட்டங்களில் மூங்கில் மரக் கன்றுகளை உருவாக்குவது எதிர்காலத்திற்கான விரைவான தேவை யாயுள்ளது. தென்னிலங்கையில் சிறிய வீடுகளை அமைப்பதற்கு காலம் காலமாக மூங்கில் மரத்தையே பாவிக்கின்றனர். அதைப்போல எமது பகுதிகளிலும் தற்காலிகமாக சிறிய வீடுகளை அமைப்பதற்கும், மந்தைகளுக்குரிய தொழுவங்களை அமைப்பதற்கும் மூங்கில் மரத் தடிகளைப் பயன் படுத்தலாம். முற்றிப் பருத்த மூங்கில் மரத்தை கிழித்து பனஞ் சிலாகை களுக்குப் பதிலாகவும் பயன்படுத்தலாம். மூங்கில் மரத்தின் நாரில் இருந்து நாற்காலிகளையும் செய்யலாம். கூடையும் பின்னலாம். வெயில் நெருப்பாய் எரியும் இன்றைய காலத்திற்கேற்ப வீட்டுக்கு புறம்பாக தென்னங் கிடுகுகளால் வேயப்பட்ட தலைவாசல் தேவை. இல்லையேல் இளைப் பாறுவதற்கு சற்றுத் தூரத்தில் கொட்டிலொன்றாவது அவசியம். இவைகளுக்குரிய கூரைகளையும் மூங்கில் தடிகொண்டு அமைத்திடலாம். பனை மரத்திற்கும் பனஞ்சிலாகைகளுக்கும் பதிலாக பாவிப்பதற்கு மூங்கில் மரங்களை வளர்ப்பது எதிர்காலத்திற்குரிய கட்டாய தேவையாய் உள்ளது.

**அரிதாகி வரும் ஆவரை**

எங்கள் பிரதேசங்களில் மஞ்சள் வண்ணப் பூக்களை கொத்துக் கொத்தாக பூத்துக் குலுங்கி நின்ற ஆவரை இன்று அரிதாகி வருகின்றது. இதன் இலையை எமது முன்னோர்கள்

அரைத்து தலையில் தேய்த்து நீராடுவர். தென்னிலங்கை மக்கள் ஆவரம் பூவை தேநீருக்கு பதிலாக அவித்து குடிப்பார்களாம். பல நோய்களை தீர்க்கும் சக்தி ஆவரம் பூவிற்கு உண்டு என்று கூறுவர். சின்னமுத்து, சின்னம்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவரை இலையை தேய்த்து குளிப்பது அவசியமானது. எனவே பல மருத்துவ குணமுள்ள இம்மரச் செடியை அழிந்து போகாமல் பாதுகாத்திட வேண்டும். பூமரச் செடிகளுக்குப் பதிலாக வீட்டு முற்றத்தில் வளர்த்து வந்தால் இச்செடி பூத்துக் குலுங்கி முற்றத்தை அழகு செய்யும். மருத்துவத் தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## காணாமல் போய்க் கொண்டிருக்கும் கற்றாளை

ஆவரையை போலவே எங்கும் பரவலாக காணப்பட்ட கற்றாளைச் செடியும் இன்று அரிதாகிவிட்டது. முறிவு நோய்களுக்கு கற்றாளை நல்ல மருந்தாகும். வயிற்றுப் புண் நோய்க்கும் இது நல்ல மாமருந்து என்றும் கூறுவர். தீப்பட்ட புண்ணுக்கு கற்றாளைச் சோற்றை அரைத்து பூசிவிட்டால் தீக்காயம் மாறிவிடும். எங்கள் பிரதேசங்களிற்கு வரும் தென்னிலங்கை மக்கள் கற்றாளையை பிடுங்கிக் கொண்டு போய் வீட்டு முற்றங்களில் நட்டு அழகு படுத்துவதோடு மருத்துவத் தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர். இச்செடியின் பயன்களை தென்னிலங்கை மக்கள் அறிந்திருப்பது போல் இதன் பயனையும், அருமையையும் எம்மவர்கள் அறிந்திருக்கவில்லை. பல தரப்பட்ட அழகு சாதனப் பொருட்களின் தயாரிப்புகளுக்கும் கற்றாளை மிக முக்கியமாக பயன்படுத்தப் படுகின்றது. ஆகவே இச் செடியினை வீட்டின் பின்புற வளவுகளில் ஏராளமாக நட்டு வளர்த்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோருக்கு விற்றுப் பயனடையலாம்.

# பொருளாதார வளத்தை தரும் மரங்கள்

தேக்கு, யாவரணை, சமண்டலை போன்ற மரங்கள் அதிக பெறுமதியுடையவை. முன்னொரு காலத்தில் பர்மா தேசம் தேக்கு மரத்தை ஏற்றுமதி செய்து பொருளாதார வளத்தைப் பெற்றுக் கொண்டது. நன்றாகப் பருத்த தேக்கு மரமொன்று (30 வருடங்கள்) அண்மையில் கிளிநொச்சியில் ஒரு இலட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது. தேக்கு மரங்கள் நெடிதுயர்ந்து வளரும் தன்மை கொண்டவை. எனவே 8 அடி இடைவெளி தூரத்திற்குகொன்றாக ஒரு ஏக்கருக்கு 150 மரக் கன்றுகளை நட்டு வளர்க்க முடியும். முப்பது வருட காலத்திற்குள் முழுமையான பயனைப் பெற்றுக் கொள்ளலாம். தேக்கு மரம் போலவே யாவரணை மரங்களையும் நட்டு வளர்த்திட்டு பயனைப் பெற முடியும்.

**சமண்டலை**

சமண்டலை எனும் மரம் மிகப் பெறுமதி வாய்ந்தது. சந்தன மரத்தைக் கண்டாலும் சமண்டலை மரத்தை

காணமுடியாது என்பர். காடுகளில் சமண்டலை மரம் மிக அரிதாகவே கிடைத்தது. இம்மரத்தின் பலகைகள் பளிங்கு போல அழகுடையது. இம்மரப் பலகைகளை அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டியிருந்ததால் சித்திரை வேலைப் பாடுகளுக்கும் அழகிய பேழைகளை செய்வதற்கும் மாத்திரமே பாவித்து வந்தார்கள். பல வருடங்களுக்கு முன்பு இம்மரக் கன்றுகளை வாங்க முடியவில்லை. இன்றைய காலங்களில் இம்மரக் கன்று களை விவசாய நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடிகின்றது. தேக்கு மரங்களைப் போலவே சமண்டலை மரங்களும் நெடிந்துயர்ந்து வளரும் தன்மையுடையவை. இரண்டு ஏக்கர் காணியில் 400 மரங்களை நட்டு வளர்க்க முடியும். பொருளாதார வளமுடையோர் இம்மரங்களை வளர்ப்பதில் தமது முதலீட்டை நம்பிக்கையுடன் மேற்கொள்ளலாம்.

**சந்தன மரம்**

சந்தன மரம் தென்னிந்தியாவிலும், அவுஸ்திரேலி யாவிலும் மாத்திரமே உண்டு. இலங்கையில் வெண் சந்தன மரங்கள் சிறியளவில் காணப்பகின்றன. தென்னிந்தியாவில் கிடைக்கப் பெறும் சந்தன மரங்களே அதிக நறுமணமுடையதும், பெறுமதியுடையது மாகும். இச்சந்தன மரங்களை எமது தேசத்திலும் வளர்த்திட முயற்சிக்க வேண்டும்.

**சவர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு**

எமது தேசத்தில் சவர் நிலப்பகுதிகள் பரந்து காணப்படுகின்றது. இந்நிலப்பகுதிகளில் தளைத்திடக் கூடிய சவுக்கு, நொச்சி போன்ற மரங்களை வளர்ப்பதன் மூலம் காடுகளை உருவாக்கலாம். சவுக்கு மர விதைகளை வித்திட்டால் போதுமானது. விதைகள் முளைத்து தாமே

வளர்ந்திடும். முளைத்து வளர்ந்த சவுக்கு மரங்களிலிருந்து வேர் மூலமாகவும் கிளைகள் தோன்றிப் பரவி வளரும் தன்மை கொண்டது. இம்மரக்கன்றுகள் சிலவற்றை நட்டு வளர்த்திட்டால் வேர் மூலமும் பரவி வளர்ந்து காலகெதியில் காடுகள் உருவாகிவிடும். வேறு எதற்கும் பயன்படாத சவர்நிலப் பகுதிகளில் இம்மரக் கன்றுகளை நட்டு வளர்த்திட வேண்டும்.

**நொச்சி**

நொச்சி மரத்தடிகளை வெட்டி மழைகாலங்களில் நட்டு வளர்த்திட்டால் விரைவாக தளைத்திடும். இதற்கும் சவர் நிலப் பகுதிகளைப் பயன்படுத்தலாம். இம்மரம் வேர் மூலமாக பரவித் தளையும் தன்மை கொண்டது. எங்கும் எந்நிலப்பரப்பிலும் நொச்சி தளைத்திடும். இம்மரத்தின் இலையை வீட்டு வைத்தியத்திற்கு பயன்படுத்துவார்கள். வீட்டுக்கு ஒவ்வொரு மரம் அவசியமானது. வேறு தேவைக்கு பயன்படாத நிலங்களில் இம்மரத்தின் சில தடிகளை வெட்டி நட்டுவிட்டால் வேர் மூலமும் தளைத்து காடு போல் உருவாகிவிடும். எதிர்காலத்தின் விறகுத் தேவைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

# பனைகளை வளர்ப்பது காலத்தின் கட்டாய தேவை

உலகம் நாகரீக வளர்ச்சி அடைந்திராத காலத்திலேயே பனை ஓலை கொண்டு வேலியடைத்து பண்பாடு காத்து வாழ்ந்தவர்கள் எமது முன்னோர்கள். எமது தேசத்தில் பஞ்சம் ஏற்பட்ட முன்னைய காலங்களில் பனம் பண்டங்களே பசிதீர்த்து உயிர்காத்தன. பனையின் அருமை, பெருமைகளை உணர்ந்த முன்னோர்கள் "கற்பகதரு" எனும் பெயர் கொண்டும் அழைத்தனர். அமிழ்தினும் இனிய நுங்கையும், பதநீரையும், பண்டங்களையும் தரும் பனைமரத்திற்கு கற்பகதரு எனும் பெயர் மிகப் பொருத்தமானது.

எமது முன்னோர்கள் எதிர்காலத்தின் தேவைகளை நன்கு உணர்ந்து வாழ்ந்தவர்கள். எதிர்காலத்தவரின் தேவை களுக்காகவும் பனைகளை வழி வழியாக தவறாது வளர்த்து வந்தார்கள். அமிழ்தினும் இனிய நுங்கையும், பதநீரையும், பனங்கிழங்கையும், கருப்பட்டியையும், பனை ஓலையையும்,

ஓலையிலிருந்து இழைக்கப்படும் கடகம், பெட்டி, சுளகுகள் எனப் பல்வேறு பொருட்களையும் மக்கள் பெற்று வாழ்வதற்கு பெரும் துணையாயிருந்தது பனைமரம். வீடு கட்டுவதற்கும் இன்றியமையாத தேவைக்குரியதாயும் இருந்தது. இன்றைய காலகட்டத்தில் வீடு கட்டும் தேவைக்காக பனை மரங்களைப் பெறுவது முடியாத காரியமாயுள்ளது. எமது தேசத்தின் எதிர்கால நலன் கருதி பனைகளை வளர்த்திட வேண்டும். பனம் விதைகளை வித்திடுவது மிகச் சுலபமான செயல். மழைகாலத்தில் மண்வெட்டியின் துணையுடன் ஒரு நாளில் ஒருவரால் 500க்கு மேற்பட்ட விதைகளை வித்திட முடியும். நீர் ஊற்ற வேண்டிய தேவையில்லை. பத்து வருடத்தில் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம். கொக்கைத் தடி மூலம் வடலியிலிருந்து நுங்கை பறித்து வெட்டிக் குடிக்கலாம். பனங் கிழங்கையும், தகணை (பூரான்)யும் சாப்பிடலாம். பனை ஓலை மட்டை கொண்டு வேலியும் அடைக்கலாம்.

**ஒடியல் மா கிடைப்பதற்கு அரிதான பொருளாகிவிட்டது**

ஒடியல் மாவில் பிட்டு அவித்து சாப்பிடவும், கூழ் காய்ச்சி குடிக்கவும் அனைவருக்கும் அலாதி விருப்பம். ஆனால் அரிசி மாவிலும் பார்க்க ஒடியல் மாவின் விலை பல மடங்கு அதிகமாயுள்ளது. இடைப்பட்ட காலத்தில் பனம் பொருள் உணவை மறந்திருந்தவர்கள் இன்று அதன் தேவையையும், தரத்தையும், சுவையையும் உணர்ந்துள்ளனர். எனினும் சாமானிய மக்களால் ஒடியல் மாவைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையாய் உள்ளது. அன்று ஏழைகளின் உணவாயிருந்த

பனம் பொருள் உணவு வசதி படைத்தோரின் உணவாய் இன்று மாறிவிட்டது.

புலம் பெயர்ந்தவர்களுக்கு இங்கிருந்து அனுப்பப்படும் பனம் பொருளின் தரத்தையும், சுவையையும் மேற்கு நாட்டவர்களும் ஓரளவு அறிந்துள்ளதால் மேற்குலகுக்குரிய ஏற்றுமதிப் பொருளாயும் ஆகிவிட்டது. ஆகவே பனம்பொருள் உற்பத்தியைப் பெருக்க முயற்சிக்க வேண்டும். எமது தேசத்தின் பொருளாதாரத்தை வளர்த்திட பனம் விதைகளை பல்லாயிரக்கணக்கில் வித்திட்டு பனை உற்பத்தியைப் பெருக்க பொருள் வளம் படைத்தோர் முன்வர வேண்டும். பனை உற்பத்தியைப் பெருக்குவதற்கு விதைகளை வித்திட்டு ஐந்து வருடங்கள் வரை வேலியடைத்து பாதுகாத்தால் போதுமானது. எக்கால நிலையிலும் வடலிகள் தளைத்து வளர்ந்திடும்.

# கடற் தாவரங்கள்

எமது தேசம் கடலால் சூழப்பட்டது. விவசாயமும், மீன்பிடித் தொழிலுமே தேசத்தின் வளமாயுள்ளது. கடல் வளத்தை பாதுகாப்பதற்கு கண்டல் மரங்களையும், கண்ணாச் செடிகளையும், பொங்கி வரும் பெரும் அலையின் வேகத்தை தவிர்த்திடும் கடல் அரணையும் (சல்லி), கற்பாறைகளையும் கடற்கரையை பாதுகாக்க முள்ளிச் செடிகளையும் இயற்கை அன்னை படைத்திட்டாள். கடற்கரையின் அண்மையாக நீர் ஆழம் குறைந்த பகுதியில் கண்டல் மரங்கள் அல்லது கண்ணாச் செடிகள் தளைத்திருக்கும். இச் செடிகள் உள்ள இடங்களில் இறால், நண்டு போன்றவை அதிகமாக காணப்படுகின்றன. பெரிய மீன்களுக்கு இரையாகாமல் தப்பி மறைந்து வாழ்வதற்கு சிறிய மீனினங்கள் இச்செடிகள் உள்ள இடத்தை நோக்கி வருகின்றன. கருத்தரிக்கும் காலங்களிலும் மீன் இனங்கள் இச்செடிகள் உள்ள இடத்தை பயன்படுத்துகின்றன. இச்செடிகளின் கழிவுகள் கடல் வாழ் உயிரினங்கள் சிலவற்றுக்கு உணவுமாகின்றது.

பெரிய கற்பாறைகள் பெரிய மீன் இனங்கள் வாழ்வதற்கும், சிறிய கற்பாறைகள் சிறிய மீன்கள், நண்டுகள் வாழுமிடமாகவும் உள்ளது. கற்பாறைகளும், கண்டல் மரங்களும் கடல் சீற்றத்தை தடுத்து கடல் அலைகளின் வேகத்தையும் குறைத்திடுகின்றன. கடற் பாறைகள் உடைக்கப்படுவதாலும் கண்டல் மரங்கள் வெட்டப்படுவதாலும் மீனினங்கள் இனப்பெருக்கம் செய்திடவும், மறைந்து வாழ்வதற்குமான இடங்களையும் உணவையும் இழந்து போகின்றன.

இன்று சிறிய மீன் இனங்களிற் சிலதும், நண்டு இனங்களிற் சிலதும் மறைந்து போய்விட்டன. குறிப்பாக "தேறகை" எனும் சுவைமிக்க சிறிய மீனினம் முற்றாக இல்லாமற் போய்விட்டது. கடற்தாமரையும், குசளையும் மிக அரிதாகிவிட்டன. காலச் சூழலின் மாற்றமும் கடலில் கலந்திடும் எண்ணெய் கழிவுகளும், நைலோன் இழுவை வலை மீன்பிடியும் இதற்கான காரணங்களாகின்றன என்று மீனவர்கள் கூறுகின்றார்கள்.

**கடற்கரையை பாதுகாத்திடும் முள்ளிச் செடி**

கடற்கரையின் மேற்பரப்பில் அருகம்புல்லைப் போல் வேரூன்றி மண்ணை இறுகப் பற்றிப் படர்ந்திருக்கும் கடற்கரையின் மண்ணை அலை அரித்திடாமலும், காற்று மண்ணை அள்ளிச் செல்லாமலும் பாதுகாத்திடும் இயற்கை அன்னையின் ஓர் அற்புதப் படைப்பு முள்ளிச் செடி.

இச்செடிக்கு "இராவணன் மீசை" என்றும் பெயருமுண்டு. கண்டல் மரங்களும், கண்ணாச் செடிகளும் அழிக்கப்பட்டு அரிதாகிப் போனது போல் முள்ளிச் செடிகள் முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டது. தீப்பந்தத்தின் துணையுடன் இரவில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் மீண்டும் கரையேறி வந்ததும் எரிந்து

கொண்டிருக்கும் தீப்பந்தத்தின் மீதிப் பாகத்தை முள்ளிச் செடிமீது எறிந்து விட்டுச் சென்ற வழக்கத்தால் இச்செடிகள் இன்று இல்லாது அழிந்து போய்விட்டன. கடற் தாவரங்களினதும், முள்ளிச் செடிகளினதும் பெரும்பயனை எம்மவர்கள் அறிந்திராததும் இதற்கான காரணமாயிருக்கலாம். ஆனாலும் இதற்கான காரணத்தை எமது தேசத்தில் ஓரிருவர் அறிந்திருந்தார்கள். அவர்களில் புங்குடுதீவைச் சேர்ந்த "சவரிமுத்து" எனும் சவரத் தொழிலாளி இதற்கான சில அறிவுரைகளை பலரிடம் கூறி யிருந்தார் என்று எமது முன்னோர்கள் வாயிலாக அறிய முடிந்தது.


**அவ் அறிவுரைகள் பின்வருமாறு**

கடலும், காடுமே எம்மை வாழவைத்துக் கொண்டிருக் கின்றது. காட்டையும் மரங்களையும் அழித்து விடாதீர்கள். மழையே பெய்யாது பொய்த்து விடும். பனங்காயை காலால் தட்டாதீர்கள். பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் பல தடவை பனம் பொருட்களே பசி தீர்த்து உயிர் காத்தன என்று இவ்வாறான பல பொன்மொழிகளை படிக்காத மேதையான இந்த அனுபவச் சித்தர் கூறிய அறிவுரைகளை கேட்டு நடந்தவர்களும் உண்டு. இவ் அறிவுரைகளை கேள்விப்படாதவர்களும் இருந்திருக்கலாம். இவ் அறியாதவர்களின் செயற்பாடுகளே "கடற்கரை மண்ணை காற்று அள்ளிச் செல்லாமல்" பாதுகாத்திருக்கும் முள்ளிச்செடி அழிந்து போக காரணமாயிற்று. "ஊரைச் சிதைத்திட ஒரு சிலர் போதும் ஆனால் ஊர் ஒன்று சேர்ந்தால்தான் ஊரை வாழவைக்க முடியும்.

15-07-2009

# நிலம் வளமடைய நீர் வளம் வேண்டும்

**கா**டுகள், மரங்கள், செடிகள் எல்லாம் தளைத்திருந்த காலத்தில் மழைவீழ்ச்சி அதிகமாயிருந்தது. பிற்காலங்களில் காடுகள், மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டதால் மழைவீழ்ச்சி சரிவடைந்துவிட்டது. குடிநீருக்கும் தட்டுப்பாடு ஆயிற்று. தேவையான கால வேளைகளில் தேவைக்கேற்ற மழை கிடைப்பதில்லை. வருடத்தில் ஓரிரு மாதங்களில் மட்டும் அதுவும் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படும் காலவேளைகளில் மழை கொட்டிவிட்டுப் போய்விடும். கொட்டிய மழை நீரும் வயல் வரப்புகள் கட்டப் படாததாலும், குளங்கள் தூர்வாரப்படாததாலும், போதிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப் படாமையினாலும் வடிகால் மதகுகளிற் கூடாகச் சென்று கடலுடன் கலந்து விடுகின்றது. முறையான மழைவீழ்ச்சிக்கு நாடு நிறைந்த மரங்கள் வேண்டும். வயல் வரப்புகள் மட்டுமல்லாமல் வளவுகளுக்கும் வரப்புகள் கட்டப்படவேண்டும். குளங்கள் தூர்வாரப் படுவதோடு நீர் நிலைகளை அதிகளவில் அமைத்திட வேண்டும். இவ்வழிமுறைகள் தொடரப்படுமானால் பெய்யும் மழைநீர் கடலுக்குள் வழிந்து செல்லாமல்



மீன் வேட்டைக்காக கடற்தாவரங்களின்
மீதமர்ந்து காத்திருக்கின்ற
வெள்ளைக் கொக்குகள்.

தடுத்திடலாம். மழை நீர் தேக்கமடைந்து நிலத்தடிக்கு ஊறிச் சென்று கிணறு, குளங்களின் ஊற்று பெருக்கெடுத்து நீர் வளம் பெருக வாய்ப்புண்டாகும்.

**நீர்த்தேக்கங்களை உருவாக்க வேண்டும்**

குடியிருப்புக்கும், விவசாயத்திற்கும் தேவையற்ற மழைநீர் தேங்கும் தாழ்வு நிலப்பகுதிகளை மேலும் சிறிது ஆழப் படுத்தினால் தற்பொழுது தேங்கும் நீரின் கொள்ளவிலும் பார்க்க கூடுதலான மழைநீர் தேங்கும் வாய்ப்பு ஏற்படும். இந்நிலப் பகுதிகள் சவர்த்தன்மை யுடையதாயிருப்பினும் அதிக மழைநீர் தேக்கமடைந்தால் காலகெதியில் சவர்த்தன்மை நீங்கி நன்னீர் வளப் பகுதிகளாக மாற்றமடைந்திடும். நீர்த்தேக்கங்கள் அதிகரிக்கப்படும் பட்சத்தில் மழைநீர் வெள்ளம் கடலினுள் சென்றுவிடாமல் முடிந்தளவில் தடுத்திடலாம்.

**புங்குடுதீவில் உள்ள தாழ்வு நிலப் பகுதிகள்**

புங்குடுதீவிலுள்ள மூன்றாம் வட்டாரத்தில் ஒரு சில தாழ்வு நிலப் பகுதிகளும், நான்காம் வட்டாரத்தின் மத்திய பகுதியிலும், ஏழாம் வட்டாரத்தின் தென்புறத்திலும், பதினொன்றாம் மற்றும் பன்னிரெண்டாம் வட்டாரங்களுக்கு வடக்கு (குறிச்சிக்காடு) பகுதியிலும் மழை நீர் தேங்கும் தாழ்வு நிலப்பகுதிகள் உள்ளன. இத்தாழ்வு நிலங்களையெல்லாம் மேலும் சிறிது ஆழப்படுத்தினால் நன்னீர் ஏரிகளாக மாற்றம் பெற வாய்ப்புக்கள் ஏற்படலாம். ஒன்பதாம் வட்டாரத்திலுள்ள "பெரிய கிராய்" எனும் பரந்த குளமும் இன்னும் ஒரு சில குளங்களும் ஆழப்படுத்த வேண்டிய அவசிய தேவையுண்டு.


வேலணை பெருங்குளத்தைப் போல பெரிய கிராய் குளமும் நில ஊற்று மட்டம் வரை ஆழப்படுத்தப்பட வேண்டும். அதைவிட அதிகளவில் ஆழப்படுத்தினால் உவர் நீர் ஊற்றெடுக்க வாய்ப்புள்ளது.

கடல் நீர் உள்வரும் பகுதிகளுக்கு நில மட்டத்திலிருந்து மூன்று அடி ஆழத்திற்கும், நிலமட்டத்திலிருந்து நான்கு அடிவரை உயரமாகவும் பொலித்தீன் தாளை பயன்படுத்தி "மண் அணை" மூலம் தடுப்பு செய்யப்பட வேண்டும். இப்படி தடுப்புச் செய்யப்பட்டால் மழைநீர் கடலினுள் வழிந்து செல்லாமலும் கடல்நீர் நிலத்தடிக் கூடாக ஊறி உள்வராமலும் தடுத்திட முடியும். மாரிகாலங்களில் இத்தடுப்புச் சுவர் உடைக்கப்படாமலும் பாதுகாக்க வேண்டும்.

※ **முக்கிய குறிப்பு :** இவ்வேலைத்திட்டம் தீவுப்பகுதிகளிலுள்ள கடல்நீர் உள்வரக்கூடிய அனைத்துப் பிரதேசங்களிற்கும் பொருந்தும்.

**வேலணை பெருங்குளம்**

வேலணை பெருங்குளம் என்பது மிகப் பாரியளவில் மழை வெள்ளம் வந்து சேரும் நீரேரி ஆகும். இக்குளத்தில் காணப்பட்ட திட்டுக்கள் வெட்டி அள்ளப்பட்டுள்ளதாக அறியக் கூடியதாயுள்ளது. இச்செயல் பாராட்டுக்குரியது. ஆனாலும் இக்குளம் மேலும் நிலத்தடி நீர் ஊற்று மட்டம்வரை ஆழப்படுத்தப்பட வேண்டும். இது நடைமுறைப்படுத்தப் படுமானால் இப்பகுதியில் பெய்து வழிந்துவரும் மழைநீர் முழுவதையும் இந்நீரேரி உள்வாங்கிக் கொள்ளும் வாய்ப்புண்டு. அயலிலுள்ள சாட்டி நிலப் பகுதி கிணறுகளின் நீர் ஊற்றுக்கள் பெருகிடும் நிலையும் உருவாகும்.



"கோயிலும் குளமும் மரங்களுமாய்
கண் குளிர்ந்த காட்சி" -
வேலணை பெருங்குளம் அம்மன் கோயில்.

**வடிகால் மதகுகள்**

முன்னைய காலங்களில் மழைவீழ்ச்சி அதிகமாயிருந்த காரணத்தினால் பெருந் தெருக்களின் மேற்பரப்பை மழை வெள்ளம் அரித்து அள்ளிக் கொண்டு போய்விடாமல் பாதுகாப்பதற்காக வடிகால் மதகுகள் அமைக்கப்பட்டன. மழைவீழ்ச்சி குறைவடைந்து நீர் வளம் மிகவும் குன்றியுள்ள இக்காலத்திற்கு இவ்வடிகால் அமைப்புக்கள் பொருத்தமற்றதாயுள்ளது. இக்காலங்களில் பெய்யும் மழையோ மிகக் குறைவு. அதுவும் வருடத்தின் ஓரிரு மாதங்களில் சில நாட்கள் மட்டும் கொட்டிவிட்டு போய்விடுகிறது. மழைவெள்ளம் மதகுகளிற் கூடாக கடலினுள் கலந்துவிடுகிறது. புயற்காற்று வீசும் காலங்களில் கடல்நீர் மதகுகளிற்கு ஊடாக ஊருக்குள் வந்தும் விடுகின்றது. மழைவீழ்ச்சி குறைந்து குடிநீருக்கே தட்டுப்பாடாயுள்ள இக்காலங்களில் இவ்வடிகால் மதகுகளை முற்றுமுழுதாக இல்லாமற் செய்ய வேண்டும். இல்லையேல் போதியளவு தடுப்புப் பலகை போடப்பட வேண்டும். மழை வெள்ளம் கடலினுள் போய்ச் சேராமலும் கடல்நீர் உள்வராமலும் இருப்பதற்கு இது மிகவும் அவசியம். தீவகத்தை பொறுத்தளவில் வடிகால் மதகுகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

# வடக்கிலுள்ள ஆற்று வாய்க்கால்கள்

வடக்கிலுள்ள பாலி ஆறு, நாயாறு, பறங்கி ஆறு, நெத்தலி ஆறு என சொல்லப்படும் ஆற்று வாய்க்கால்களால் கடலில் வீணே சென்றடையும் நீரை திசைதிருப்பி இரணைமடு குளத்திற்கும் வவுனிக் குளத்திற்கும் ஏனைய சில குளங்களிற்கும் முடிந்தளவு கொண்டு வரப்பட வேண்டும். இதற்கான வழி செய்யப் படுமானால் வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள விளை நிலங்களுக்கு போதியளவு நீரை வழங்க முடியும். இப்பிரதேசங் களிற்கான இரண்டு போகப் பயிர்ச்செய்கையும் வளப் படுத்துவதற்குரிய வாய்ப்பு அதிகரிக்கும்.

இப்பிரதேசங்களின் தேவை போக ஓரளவு நீரை பாரிய குழாய்கள் மூலம் யாழ் மாவட்டத்தின் குடிநீர்த் தேவைக்கு கொண்டு செல்லலாம். இக்குளங்கள் இன்றிருக்கும் நிலையிலும் பார்க்க அதிகளவு நீரை உள்வாங்கக் கூடியதாக விரிவாக்கப் பட்டால் மட்டுமே இவ்வேலைத் திட்டம் சாத்தியம் ஆகலாம். அதுவும் போதிய மழைவீழ்ச்சியைப் பெறமுடியாத காலங்களில் யாழ் மாவட்டத்திற்கு இரணைமடு குளத்து நீரை கொண்டு செல்வதென்பது முடியாத காரியமே. மகாவலி ஆற்று நீரும் இரணைமடுக் குளத்திற்கு கொண்டு வரப்பட்டால் யாழ் மாவட்டத் திற்கான குடிநீர்த் தேவையை ஓரளவு நிறைவு செய்யலாம்.

25-09-2009

# கல், மண் அகழ்வது தவிர்க்கப்படல் வேண்டும்

வட துருவப் பகுதிகளில் பனிமலைகள் உருகி வருவதால் கடல்நீர் மட்டம் உயர்ந்து வருவதாக ஊடகங்கள் கருத்து தெரிவிக்கின்றன. உலகிலுள்ள தாழ்வுநிலப் பகுதி களெல்லாம் காலகெதியில் கடலினுள் அமிழ்ந்து போய்விடலாம் எனவும் கருதப்படுகின்றது. ஆகவே எமது பிரதேசங்களுக்கும் இந்நிலையேற்படலாம் எனக் கருதுவதற்கு காரணங் களில்லாமலில்லை.

எமது தேசத்தின் பாதுகாப்பு கருதி கடற்கரையை அண்டிய பகுதிகளில் கல், மண் அகழ்வது முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும். மரங்களாலும், பலகைகளாலும் வீடுகளை அமைக்கும் முறையை வழமைக்கு கொண்டு வரவேண்டும். அல்லது தென்னிலங்கையிலிருந்து கல்லையும், மண்ணையும் கொண்டு வரவேண்டும். கூடுதலாக செங்கல்லை கொண்டு கட்டடங்களை அமைப்பது நன்மை பயக்கும். இதற்குரிய மண்ணையும் தென்பகுதியிலிருந்து கொண்டு வருவது உகந்தது. குறைந்தளவு வீட்டின் வெளிப்புறச் சுவர்களை

செங்கல்லாலும் உட்புறச்சுவர்களை (குறுக்குச் சுவர்) பலகை களால் அமைத்திடுவதன் மூலம் நில அதிர்வுகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்திடலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர். இவ்வேலைக்குரிய பலகைகளை பெறுவதற்கேற்ற பொருத்தமான மரங்களை இப்பொழுதிருந்தே வளர்த்திட வேண்டும். வீட்டைச் சுற்றிவர உள்ள மூன்று பக்கங்களை யாவது பனை ஓலைகளை அல்லது பனை மட்டைகளைக் கொண்டு வேலிகளை அடைத்திட வேண்டும். வீட்டின் முன்பக்கத்திற்கு மட்டும் சுவர் (மதில்) கட்டுவதோடு மட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும். கதியால்களை கொண்டு வேலிகளை அடைப்பதால் இயற்கை வளத்தைப் பேணி வரலாம்.

புதிதாக கோயில்களை கட்டுவதும், கோபுரங்களை அமைப்பதும் இன்றைய காலத்திற்கு பொருத்தமற்ற செயல். மட்டுப்படுத்தப்பட்ட அளவு திருத்த வேலைகளை செய்வது தவிர்க்க முடியாததே பொதுக் கட்டடங்களை அமைப்பதும் அளவுக்கு மீறியதாயிருத்தலாகாது. கல்லையும், மண்ணையும் கொண்டு கட்டடங்களுக்கு அலங்காரம் செய்வதும் தேவையற்ற செயலே.

# சிறுகக் கட்டி பெருக வாழ வேண்டும்

உவர்த்தன்மையற்ற மண்வளம் கொண்ட நீள் சதுரமான காணியில் வீடு அமைவது சிறப்புடையதாயிருக்கும். "காணி பெரிதாயிருந் தாலும் வீடு சிறியதாயிருக்க வேண்டும்" என்பது முதுமொழி. வீட்டைக் கட்ட முன்பு வேலி அடைத்திட வேண்டும். அத்துடன் கிணறும், கழிவறையும் அமைந்திட வேண்டும். அதன்பிறகு வீட்டினை அமைப்பதே சாலப் பொருத்தமானது. காற்றும் வெளிச்சமும் வீட்டின் மாடத்துக்கும், அறைகளுக்கும் உள்வர போதியளவு ஜன்னல்களும், கதவுகளும் அவசியமானவை. வீட்டின் தாழ்வாரத்திலிருந்து பதினைந்து அடி தூரத்தில் ஒரு வேப்பமரமும் இரண்டு அல்லது மூன்று மாமரங்களும் சில தென்னை மரங்களும் வேண்டும்.

# முத்துச்சுடர் போல நிலா ஒளி முன்பு வரவேண்டும்

திருமண விழா போன்ற நிகழ்வுகள், கிடுகு பின்னுதல், பாய் இழைத்தல், குழந்தைகளுக்கு நிலாச்சோறு ஊட்டுதல், குழந்தைகள் ஓடி விளையாடுதல் போன்ற தேவைகளுக்கும் விளைதானியங்களை களப்பாய் விரித்து காயவைப்பதற்கும் போதியளவு இடைவெளி கொண்ட நீள் சதுரமான முற்றம் வேண்டும். முற்றத்தை மரங்கள் மறைத்திடக் கூடாது. முத்துச் சுடர் போல நிலா ஒளி முன்பு வரவேண்டும் என்று பாரதியார் கூறியது போல் விண்ணில் உலா வரும் வெண்ணிலவின் ஒளி வீட்டு முற்றத்தில் வந்து விழ வேண்டும். இத்தேவைகளை எமது முன்னோர்கள் தெளிவாக அறிந்திருந்தனர். குழந்தை களுக்கு உடல் முழுவதும் எண்ணெய் பூசி காலை வெயில் படுவதற்காக மாடத்தில் பாய் விரித்து படுக்க வைத்திருப்பார்கள். இக்கருத்தை சு.வி.யின் பாடல் வரிகளும் நினைவூட்டுகின்றன.

அதோ ஒளிக்குழந்தை தொற்றித் தவழ்கிறது. ஒற்றிக்கொள் உன்னிரு கண்களிலும் கதவின் இடுக்கின் ஊடாக உட்செல்லத் துடிக்கின்றது. திறந்து விடு உன் வீட்டின் கதவை உனதகம் ஒளிப்பெறப்படும்.

சு. வில்வரெத்தினத்தின் பாடல் வரிகள் கூறுவதுபோல் கதவுகளை மட்டுமல்லாது ஜன்னல்களையும் அகலத் திறந்துவிட வேண்டும். காலைக் கதிரொளியுடன் தூய காற்றும் வீட்டின் உள்வரவேண்டியது அவசியம். வீட்டில் உள்ளோர் அனைவரும் காலை வெயிலில் குளித்திட வேண்டும். நல்ல காற்றையும் சுவாசித்திட வேண்டும்.

**நறுமணம் தரும் மலர்ச்செடிகள்**

வீட்டின் முன் தாழ்வாரப் பகுதிகளில் துளசி, மனோரஞ்சிதம், திருநீற்றுப் பச்சை, மல்லிகை போன்ற மலர்ச் செடிகளை எமது முன்னோர்கள் நட்டு வளர்த்தார்கள். மல்லிகை மலரில் நறுமணம் அதிகமுண்டு. துளசி, மனோரஞ்சிதம், திருநீற்றுப் பச்சை போன்ற செடிகளில் பூவிலும் நறுமணமுண்டு. இலைகளிலும் நல் வாசனை உண்டு. இம்மலர்ச் செடிகள் பூத்தாலும் பூக்காவிட்டாலும் இச்செடிகள் தரும் வாசனை வீட்டு முற்றத்தோடு நின்றுவிடாது. காற்றோடு கலந்துறவாடி வீதிவரை வீசிவரும். கற்பூரவல்லி, துளசி, திருநீற்றுப் பச்சை போன்ற செடிகளின் இலைகள் சளித் தொல்லையை தீர்த்திடும் என்று சிலர் இவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வளர்த்ததுமுண்டு.

நறுமணத்துடன் கூடிய காற்று உடலுக்கு நல்ல மருந்தாகிறது. காற்று வருகிறான் அவன் வரும் வழியில் நல்ல நீர் தெளித்து வைத்திடுவோம். அவன் வரும் வழியில் கற்பூரம் முதலிய வாசனைப் பொருட்களை கொழுத்தி வைப்போம். அவன் மருந்தாக வருக. காற்றை வழிபடுவோம்! என்று உரைத்திட்டார் பாரதியார்.

இயற்கையோடு இசைந்த வாழ்வும் தூய்மையான காற்றும் வாழ்நாளை இன்புறச் செய்து ஆயுளையும் அதிகரித்திடும்.

# வீட்டுத் தோட்டம்

எமது தேசத்தின் அனைத்து இடங்களிலும் அநேகமாக வீட்டிற்கு வடகிழக்கு பகுதியில்தான் கிணறுகள் அமைந்திருக்கும். கிணற்றுக்கு அண்மையிலுள்ள நிலப்பகுதியே வீட்டுத் தோட்டம் செய்வதற்கு பொருத்தமான இடமாகும். நன்னீர் கிணறுகள் உள்ள வீட்டுக் காணிகளில் கிணற்றுக்கு அண்மையில் நெல்லி, கொய்யா, லாவுளு, மாதுளை போன்ற கனிமரங்களை நட்டு வளர்த்திடுவது பொருத்தமுடையது. வாழைகள் சிலவற்றையும் நட்டு வளர்த்திடலாம். வாழையின் அடிப் பாகத்திலுள்ள மண்ணில் கத்தரி, மிளகாய், வெண்டி, கொத்தவரை, தக்காளி போன்ற மரக்கறிச் செடிகளை நட்டு வளர்க்கலாம். வீட்டு நிலப்பரப்பில் உள்ள மரங்கள், செடிகள் உதிர்த்திடும் இலைச் சருகுகளையும், வீட்டில் சேரும் மாட்டெருவையும் வாழையின் அடிப்பாகத்து மண்ணுக்கு பசளை யாக்கலாம். வாழைக்கு இடும் பசளை மரக்கறிச் செடிகளுக்கும் மரக்கறிச் செடிகளுக்கு ஊற்றும் நீர் வாழைக்கும் பயனுள்ளதாகும். நாளாந்தம் குளிக்கும் நீரை வாய்க்கால் மூலமாக ஏனைய கனிமரங்களுக்கு ஓடவிடலாம்.

மரக்கறிச் செடிகளுக்கு கிருமித் தொற்று ஏற்படாதிருக்க சாம்பலை பயன்படுத்தலாம். வேப்பிலையை அரைத்து கரைத்துத் தெளிக்கலாம். நாளாந்தம் செடிகளை பார்வையிட்டு கிருமித் தொற்று இருக்கும் இலையை மட்டும் பிடுங்கி எரித்துவிட்டால் கிருமித் தொற்று ஏற்படாது தவிர்த்திட முடியும். நிலத்தையும், நீரையும் நச்சுத்தன்மை ஏற்படாது தவிர்த்திடவும் இவ்விதிமுறையே நல்வழி முறையாகும். அதிக காய்கனிகளை பெறவேண்டும் எனும் ஆசையை தவிர்த்து மாசடைவற்ற காய்கறிகளையும், கனிகளையும் பெறுவதே எமது குறிக்கோளாய் இருக்க வேண்டும். வீட்டுத் தேவைக்கான மரக்கறிகள், கனிவகைகள் போக மீதியை விலையாக்கி விடலாம். வாழ்க்கைச் செலவையும் குறைத்திடலாம். ஓய்வு நேரத்தில் மரக்கறிச் செடிகளோடும், கனி மரங்களோடும் உறவாடும் நேரம் மகிழ்ச்சியுடைய பொழுதாயிருக்கும். அத்தோடு வாழ் நாளையும் இன்புறச் (செய்யும்) செய்திடும்.

07-10-2009

# உழுதுண்டு வாழ்வோர்க்கு ஒப்பில்லை

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியார் பாடல் வரியொன்றில் கூறுகிறார். "உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வர்" என்றுரைக்கிறது உலகப் பொது மறையான திருக்குறள். "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு" இது ஔவையாரின் தேனமுத திருவாக்கு.

உழுது பயிர் செய்து வாழும் தொழிலை தவிர வேறெந்த தொழிலிலும் ஏதோ ஒரு பழுதிருக்கும் என்பது மேற்கண்ட வாக்கியத்தின் கருத்தாகின்றது.

"பழுதில்லா வாழ்வு எமக்கு அந்தப் பச்சை வயல் அன்னை தந்தாள்" என்று சு.வி.யின் பாடல் வரியொன்றும் சொல்கிறது. எமது முன்னோர்கள் விவசாயத்தையே பெரிதாகவும், விவசாயம் செய்து வாழ்வோரே உயர்வானவர்கள் என்ற பெருமையுடனும் விவசாயத்தை விருப்பமுடன் செய்து வந்தார்கள். ஏனையோர் அவர்களைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலை அன்றிருந்தது. ஊரும், உலகும் உழவர்களுக்கு மதிப்பளித்தது. இது 1950க்கு முற்பட்ட காலம். வெளியுலகி

லிருந்து இறக்குமதி செய்யப்பட்டு குறைந்த விலையில் விற்கப்பட்ட கோதுமை மாவும், அரிசியும் இப்பெருமையை குறைத்துவிட்டன. முன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டது போல் 1950க்கு முன் காடுகள், மரம், செடிகள் எல்லாம் மிக அதிகமாக தளைத்திருந்தன. வான்முகில் படிந்து மழை பொழிந்தது. வரப்புகள் எல்லாம் கட்டப்பட்டு நெற்பயிர் செய்யப்பட்டது. மேட்டு நிலங்களில் வரகு, உழுந்து, பயறு, எள்ளு, கொள்ளு போன்ற தானியங்களெல்லாம் விளைவிக்கப்பட்டன.

**சித்திரை மழை**

முன்னைய காலங்களில் ஒவ்வொரு வருடமும் சித்திரையில் மழை பெய்வது வழக்கம். சித்திரை மழையை கண்டதும் வயலை உழுது கிளறி விடுவார்கள். வயல் நிலத்தில் காணப்பட்ட களைகள் காய்ந்து மண்ணுக்கு பசளையாகிவிடும். சித்திரை மழை சிலவேளை பெய்யத் தவறலாம் அல்லது குறைவாக பெய்யவும் கூடும். ஆடி மாதமளவில் மழைபெய்யும் என எதிர்பார்த்திருப்பார்கள். மழை பெய்யாது பொய்த்துவிட்டால் உழவர்கள் மனதில் வேதனை பெருக்கெடுத்திடும். தங்கள் குலதெய்வத்திடம் மழை வேண்டி வேண்டுதல் வைப்பார்கள். அதன் பிற்பாடு மழை பெய்யுமாக இருந்தால் பொங்கல் படைத்து வேண்டுதலை நிறைவேற்றி விடுவர். மழையை கண்டதும் மகிழ்ச்சியடைந்திடும் உழவர்களின் மனநிலையை அழகிய வரிகளில் பாடலொன்றை தந்துள்ளார். கவிஞர் வில்வரெத்தினம். அப்பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

## வான் மழை சுரந்தது

*வான் மழை சுரந்தது வையம் அருந்திற்று ஓ வான் மழையே வந்தனை மாரி வாழி வரண்டெரிந்து தீக்குளித்த நில மகளை மழை முழக்காட்ட வந்தனை நீ மாரி வாழி வறண்டெரிந்து வாய்பிழந்த பூமி வருந்தி அழைத்த குரல் உனக்கு எட்டிற்றோ இரங்கினை அதனால் எம் இதயம் குளிர்கிறது.*

சு.வி.யின் பாடல் கூறுவது போல் மழையைக் கண்டதும் உழவர் இதயமும் குளிர்ந்திடும். நேர்த்திக் கடனும் நிறைவேறும். ஓய்ந்திருந்த கலப்பை உழவர் தோளிலேறும். மீண்டும் ஒருமுறை கோடை உழவைச் செய்து களைகளை அழித்திடுவார்கள். பின்னர் மாரிமழை வந்ததும் வயலுக்கு வரப்பை கட்டி உழுது விதைத்து பயிரை வளர்த்திடுவர். கோடை உழவு செய்து களைகள் அழித்தொழிக்கப்பட்டதால் பயிரோடு சேர்ந்து மீண்டும் களைகள் வளர்வதில்லை. இதனால் களைகொல்லி மருந்து தெளிப்பதும் தேவைப்படவில்லை. மந்தைகளின் எருவையும், குப்பைகளையும் வயலுக்கு பசளையாக பயன்படுத்தினார்கள் அன்று. அதனால் செயற்கை இராசயனப் பசளையும் தேவைப்படவில்லை. பயிர் அறுவடை முடிந்ததும் மீண்டும் உழுது அறுவடை செய்யப்பட்ட பயிரின் அடிப்பாகத்தை வயல் நிலத்திற்கே பசளையாக்கி விடுவார்கள். குறைந்த அளவிலான நிலப்பரப்பில் அதிக கவனமெடுத்து பயிர் செய்து கூடிய விளைச்சலைப் பெற்றார்கள். எமது முன்னோரின் விவசாய செய்முறைகளைப் பின்பற்றி பயிர் செய்தால் தூய உணவு தானியங்களை பெற்றுக் கொள்ளலாம். நிலத்தையும், நீரையும் நச்சு மருந்துகளின் மாசடைவிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

13-10-2009





வானம் அழுதது!
வயலில் உழவன் இறங்கினான்
மண்வளம் கொழித்தது.

# நாட்டின் உணவுப் பொருள் உற்பத்திக்கு முன்னுரிமை அளித்திட வேண்டும்

தொழிற்சாலைகளை அதிகரித்திட வேண்டும் என்ற எண்ணமும் செயற்பாடும் ஆள்வோரிடம் அதிகரித்து வருகின்றது. பெரு முதலீட்டாளர்களால் அரசியல்வாதிகள் ஆட்கொள்ளப்படுகிறார்கள். விவசாயத்திற்கும் - குடியிருப்புக்கும் உரிய தேவைக்கு போதியளவு நிலம் இல்லாதிருக்கும் நிலையில் பாரிய தொழிற்சாலைகளுக்கு விவசாய குடியிருப்பு நிலங்களை சுவீகரிப்பது குடிமக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயலாயுள்ளது. இப்பாரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் பல்வேறு வழிகளில் சூழல் மாசடைகின்றது. சூழலுக்கு மாசடைவை ஏற்படுத்தாத சிறிய தொழிற்சாலைகளை அமைத்திடுவது தவறாகாது. அதுவும் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதாகவும் அப்பகுதி யிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதாகவும் இருந்திட வேண்டும். மக்களின் வாழ்வாதாரத்திற்கு நேரடித் தேவையான நிலங்களில் பெரும் தொழிற்சாலைகளை அமைத் திடுவது மக்களுக்கான உண்மையான அபிவிருத்தியுமாகாது. இச்செயலானது நாட்டை நேசிக்கும் நலன்விரும்பிகளால் ஏற்றுக் கொள்ளத் தக்கதுமல்ல.

எமது நாட்டின் உணவுப் பொருள் உற்பத்திக்கு முன்னுரிமை யளித்திட வேண்டும். உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நாடுகள் ஆயுதங்களையும், வாகனங்களையும் அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடுகளாய் மாறி வருகின்றன. அந்நாடுகளிலிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்யமுடியாத காலம் நெருங்கி வருகின்றது. ஆகவே நெல்லைப் போன்று ஏனைய சிறுதானியங்கள் அனைத்தையும் எமது பிரதேசங்களிலேயே விளைவிக்க வேண்டும்.

### சிறு தானியங்கள்

சில ஆண்டுகளுக்கு முன்பு எமது தேசத்தில் விளைவிக்கப்பட்டு நாடு முழுவதும் தன்னிறைவு பெற்றிருந்த உழுந்து, பயறு, எள்ளு, தட்டாப் பயறு (கௌபி) போன்ற உணவுப் பொருட்களெல்லாம் தற்பொழுது வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. அப்பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் இப்பொருட்களின் விலை எங்கு போய் நிற்குமோ? நெற்செய்கைக்கு கொடுக்கப்படும் ஊக்குவிப்பு போல சிறுதானிய செய்கைக்கும் பரவலான முறையில் வங்கிக்கடன் வசதியும், பசளைக்கு மானியமும் கொடுத்து உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிசெய்யப்படல் வேண்டும். சகல விவசாயிகளுக்கும் வர்க்க வேறுபாடில்லாது போதிய ஓய்வூதியமும் வழங்கப்பட வேண்டும்.

1970களில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் உழுந்து, பயறு, எள்ளு, கௌபி, மிளகாய், வெங்காயம் போன்ற உணவுப் பொருட்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டன. இத்தானியங் களின் விளைச்சல் பெருக்கத்தால் நாடு தன்னிறைவு பெற்றிருந்தது. விவசாயிகளும் வாழ்வில் உயர் நிலையை எட்டியிருந்தார்கள். இந்நிலை யாழ். மாவட்டத்திலும் காணப்பட்டது.

1977க்கு பின்னர் பின்பற்றப்பட்ட தாராளமயமாக்கல் கொள்கை யினால் விவசாயிகளின் வாழ்வு மட்டுமல்லாது முழு இலங்கைக்குமான பொருளாதார முன்னேற்றமும் வீழ்ச்சியடைந்தது. 1983க்கு பின் பேரினவாதமும் விவசாயப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றும் தொடர் தடையாய் உள்ளது.

**பால் வளம் பெருக வேண்டும்**

உடல் வலுப்பெறுவதற்கு ஊட்டச்சத்துள்ள பாலுணவு தேவை. ஓரளவு வசதியுள்ளவர்கள் ஓரிரு நல்லினப் பசுக்களை வாங்கி வளர்த்திடலாம். வசதி குறைந்தவர்கள் உள்ளூரில் உள்ள பசுமாடுகளில் ஒன்றிரண்டை வாங்கி ஊசி மூலம் கருத்தரிப்புச் செய்து வளர்த்து வந்தால் அப்பசுக்கள் ஈனும் பசுக்களின் பரம்பரை கூடுதலான பாலைத் தரும் பாலினமாக மாறிடும். இரண்டாவது மூன்றாவது வழிவந்த பசுமாடுகள் நல்லின பசுக்களாய் மாற்றமடைந்திடும். இவைகளின் வழிவந்த மாடுகள் அதிக பாலை தருவதோடு எங்கள் தேச காலநிலைக்கு ஏற்றவைகளாய் வளர்ந்திடும். எமது தேசத்தின் இயற்கை உணவான செருக்கிய புல், பனை ஓலை (பச்சை), பிண்ணாக்கு, தவிடு போன்றவற்றை உண்டு வாழும். பழக்கம் வழக்கத்தில் வந்துவிடும். நோய்த் தாக்கத்திலிருந்து தற்காத்துக் கொள்ளும் வலிமையும் சேர்ந்திடும். பொருள் வளமுடையோர் உள்ளூர் பசுமாடுகளை நூற்றுக் கணக்கில் வாங்கி ஊசி மூலம் கருத்தரிப்புச் செய்து வளர்க்கும் முறை மூலம் பாற் பண்ணைகளை அமைத்து பால் வளத்தைப் பெருக்கி முன்னேற்றம் காண்பதோடு பால்மாவை பதனிடும் தொழிற்சாலைகளை அமைத்து தொழிலதிபர்களாக உருவாகி தேசத்தின் பொருளாதாரத்தையும் பெருக்கிட வேண்டும்.

18-10-2009

# இயற்கை வளம் நிறைந்திருந்த நெடுந்தீவு

முன்னைய காலங்களில் நெடுந்தீவினை "பசுத்தீவு", "பசுந்தீவு" என்னும் பெயர் கொண்டும் அழைத்தார்கள். பனைகளையும், தென்னைகளையும் மிகவும் அதிகமாகவும் காடுகள், மரங்கள், புல்வெளி களையும் உடையதாகவும் இப்பிரதேசம் காணப்பட்டது. ஆகவே மந்தைகளை அதிகளவில் வளர்க்கக் கூடியதாக இருந்தது. இதனால் "பசுந்தீவு" என்னும் பெயர் பெற்றது நெடுந்தீவு.

ஆங்கிலேயர் காலத்துக்கு முன்பும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரைக்கும் நெடுந்தீவிலிருந்து தென் தமிழகத்திலுள்ள கோயில் களுக்கு பசும்பாலை தோணிகளில் எடுத்துச் சென்றதாக எமது முன்னோர் கூறுவர். இக்கூற்றில் உண்மையில்லாமலில்லை. நெடுந்தீவுக்கும் தமிழ் நாட்டுக்கும் சில மைல் கடல் வழித்தூரமேயுள்ளது. இத்தீவில் உள்ளோர்க்கும் தென் தமிழ் நாட்டிலுள்ளோர்க்கும் மனித உறவுகளும் இருந்துமுள்ளன. இங்கிருந்து தமிழ்நாட்டுக்குச் செல்லவும் - வரவும் எந்த அனுமதியும் தேவையற்றிருந்த

காலத்தில் இக்காரியம் ஒன்றும் புதுமையானதல்ல. தென் தமிழ்நாட்டிலும் பார்க்க தீவுப்பகுதிகள் வளமுடையதாயிருந்ததும் இன்னுமொரு காரணம். இத்தீவு புல்வெளிகளும், காடுகளும் நிறைந்து பசுமையாயிருந்த காலத்தில் கடல் வழியாக இங்கு வந்த ஒல்லாந்தர் (நெதர்லண்ட் நாட்டவர்கள்) குதிரைகள் சிலவற்றை இங்கு கொண்டு வந்தனர். தமது பாதுகாப்பிற்கென கடற்கோட்டைகள் சிலவற்றையும் அமைத்திட்டனர். அவற்றின் எச்சங்களை இன்றும் காணக் கூடியதாகவுள்ளது. அதேபோன்று ஊர்காவற்றுறையிலும் காணலாம். ஒல்லாந்தரால் நடுகை செய்யப்பட்ட பெருக்கு மரத்தையும் (Baobab Tree) நெடுந் தீவிலும், புங்குடுதீவிலும், மன்னாரிலும் மாத்திரமே இன்றும் காணக் கூடியதாகவுள்ளது. இலங்கையை ஆட்சி செய்த மேலைத்தேய நாட்டவர்கள் இப்பிரதேசத்திற்கு அவுஸ்ரேலி யாவிலுள்ள "டெல்ப்ற்" (Delft) எனும் புல்வெளியின் பெயரினை சூட்டினர். எனவே இத்தீவு வளம் செறிந்து பசுமை பொருந்தியதாக இருந்ததென்பது தெளிவாகின்றது.

இத்தீவிலிருந்து யாழ் நகருக்கு போக்குவரத்து செய்வது கடினமாயிருந்தபடியால் கற்றோர்கள் இடப்பெயர்வுக்கு உள்ளாக நேர்ந்தது. இவ் இடப்பெயர்வுக்குமுன் இத்தீவு கற்றோர்களால் நிறைந்திருந்தது. கற்றோர்கள் வரிசையில் முதன்முதலாக உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை மலேசியாவில் நடத்த காரண கர்த்தாவாயிருந்த தமிழ் கூறும் நல் உலகினரால் "தமிழ்த் தூது" என்று மதிப்போடும், உயர்வாகவும் அழைக்கப்படும் வணக்கத்திற்குரிய தனிநாயகம் அடிகளார் வாழ்ந்த பெருமையும் இவ்வூர்க்குண்டு.

**மந்தை வளர்ப்பு**

மந்தைகள் அதிகமாக இங்கு வளர்க்கப்பட்டதால் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த விவசாயிகள் தங்கள் விவசாயத் தேவைகளுக்காக காளை மாடுகளையும், செம்மறி ஆடுகளையும் அதிகமாக இங்கிருந்து வாங்கிச் சென்றிருந்தனர். வரகும், சாமையும், மொண்டியும், பயறும், உளுந்தும் ஆகிய சிறு தானியங்கள் இங்கிருந்து வெளிப் பிரதேசங்களிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. தேங்காயும், ஒடியலும், பனாட்டும் கூட இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டதுண்டு. வெளிப் பிரதேசங்களிற்கு இன்றும் ஒடியல் இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டாலும் முன்னைய காலங்களைப் போல் உற்பத்திப் பெருக்கமில்லை. தேங்காய் உற்பத்தியும் பெருமளவில் குறைந்துவிட்டது. மந்தை வளர்ப்பும் அரிதாகி விட்டது. மந்தைகளையும், சிறுதானியங்களையும், பனம் பண்டங்களையும் உற்பத்தி செய்து ஏற்றுமதியில் முன்னணி வகித்திருந்த இத்தீவு இன்று வளம் குன்றி வரண்டு போய்விட்டது. மழைவீழ்ச்சி குறைந்து போனதும் 1950களில் விவசாயிகளின் வன்னிக்கான இடப்பெயர்வும் இதற்கான காரணங்களாகின்றன. கற்றோரின் இடப்பெயர்வும் இன்னு மொரு காரணமாகும். தற்பொழுது இங்கு வசிப்பவர்களின் வாழ்வுக்கு மீன்பிடித் தொழிலே ஆதாரமாயுள்ளது. அதிகளவில் மரங்களை வளர்த்தல், தென்னை மற்றும் பனைச் செய்கை இங்குள்ள பசுமாடுகளை செயற்கை முறையில் சினைப்படுத்தி நல்லினப் பசுக்களாய் மாற்றியமைத்தல் போன்ற உற்பத்தி வழிமுறைகளால் இத்தீவுப் பிரதேசத்தை வளப்படுத்த முடியும்.

25-10-2009



# அலைகடல் நடுவிருக்கும் அழகிய அனலை தீவு

அலைகடலால் சூழப்பட்டிருக்கும் அனலைதீவானது ஏனைய தீவுகளிலும் பார்க்க ஓரளவு நீர் வளமும், நில வளமும் உடையது. இத்தீவின் மக்கள் விவசாயத்திற்கே முன்னுரிமை அளித்து வந்தார்கள். 1980களுக்கு முன் இங்கு விளைந்த நெல், சிறுதானியங்களால் இத்தீவின் உணவுத் தேவை தன்னிறைவு பெற்றிருந்தது. உழுதுண்டு வாழ்வதையே பெருமையாக கருதியவர்கள் இக்கிராம மக்கள்.

வையகம் காப்பவரேனும் சிறு வாழைப்பழக் கடை வைப்போரேனும் பொய் அகலத் தொழில் செய்தே பிறர் போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர் என்ற பாரதியாரின் பாடலுக்குரிய பொருளாக இத்தீவு மக்களின் வாழ்க்கை முறைமை அமைந்திருந்தது.

விவசாயமும், மந்தை வளர்ப்பும் கடகங்கள், களப்பாய்கள் பின்னுதல் போன்ற கைத்தொழில்களும் இம்மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெருந்துணையாய் இருந்தன. நார்க் கடகங்களை திறம்பட இழைத்து சந்தைப்படுத்துவதில் முன்னோடிகளாய் விளங்கினர். அதிகளவில் புகையிலை பயிர்ச்

செய்கையிலும் ஈடுபாடு உடையவர்களாயும் இருந்தார்கள். ஏனைய தீவுப் பிரதேசங்களின் புகையிலைப் பயிர்ச் செய்கைக்கும் இவ்வூர் மக்களே வழிகாட்டிகள். இவ்வூரில் சிலர் புகழ்பெற்ற புகையிலை வர்த்தகர்களாகவும் இன்னும் சிலர் பெரிய வத்தை (படகு)களை உடைமையாகக் கொண்ட கடலோடிகளாகவும் விளங்கினர்.

உழைத்து வாழ்வதில் ஊக்கமும் வாய்மையும் உடைய இக்கிராம மக்களிடம் பண்டமாற்றை வழக்கமாகக் கொண்டிருந்த முன்னைய காலங்களிலேயே ஓரளவு பணப் புழக்கமும் காணப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நயினாதீவிற்கு நாகம்மாள் கோயில் போல கோபுரத்துடன் அழகிய சித்தி ரத் தேரையும் கொண்டு விளங்கும் அழகே உருவாய் அமைந்த ஐயனார் கோயிலும் இக்கிராமத்திற்கு மேலும் பெருமை சேர்க்கிறது. 1980களுக்கு முன் அயல் கிராமத்து மக்களும் இக்கோவிலின் வருடாந்த திருவிழாவுக்கு தவறாது போய் வந்தார்கள்.

1980களில் இக்கிராமத்து இளைஞர்களே முதன்முதலில் புலம்பெயர்ந்து மேற்கு நாடுகளுக்கு சென்றவர்கள். ஏனைய கிராமத்து இளைஞர்களும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அனலைதீவு இளைஞர்களே வழிகாட்டிகள். இளைஞர்களதும், கல்விமான்களினதும் இடப்பெயர்வு இக்கிராமம் வளம்குன்றி வருவதற்கு முக்கிய காரணமாயிற்று.

இக்கிராமம் வளம் குன்றி அழகொழிந்து செல்வதைப் பார்த்துக் கொண்டு வாழாதிருப்பது முறையாகாது. கைத்தொழில்களை ஊக்குவிப்பதோடு விவசாயத்தையும், மந்தை வளர்ப்பையும் வளப்படுத்தி வீதிகளெங்கும், வீடுகள் தோறும் நிழல், பயன்தரும் மரங்களையும் நட்டு வளர்த்து இக்கிராமத்தின் வளத்தை உயர்த்திட வேண்டும். இச்செயற்பாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழும் இக்கிராமத்து உறவுகளின் பங்களிப்பும் அவசியமானது.

03-07-2011

# அம்பாள் வீற்றிருந்து அருள் சுரக்கும் நயினாதீவு

நயினாதீவினை எல்லோருக்கும் நினைவூட்டுவது அருள் சுரக்கும் அன்னை நாகம்மாள் கோயிலாகும். மணிமேகலை எனும் தமிழ் மங்கை நல்லாள் வந்திறங்கியதற்கான சரித்திரப் பெருமையும் இவ்வூரிற்குண்டு. வெளிவீதியில் சுற்றி வர நிற்கும் நிழல் தரு மரங்கள் இக்கோவிலின் வீதியை அழகு செய்கிறது. புதிய கோபுரமும் கோவிலுக்குரிய புனரமைப்பு வேலைகளும் கோவிலின் அழகை மேலும் அதிகரித் திருக்கிறது. நயினை நாகம்மாளின் வருடாந்த திருவிழா என்றால் சைவப் பெருமக்கள் எங்கிருப்பினும் போய் வரத் தவறமாட்டார்கள். புலம்பெயர்ந்த மக்களும் வருடம் ஒருமுறையாவது நாகம்மாள் கோவிலுக்கு வந்து செல்வது வழக்கமாயுள்ளது. நயினையைச் சேர்ந்த மக்கள் எங்கு வாழினும் வருடாந்த திருவிழாவிற்கு சில நாட்களுக்கு முன்பே போய் விழா முற்றாக நிறைவடைந்த பின்னரே வாழ்விடம் திரும்புவர். அம்பாளின் நினைவின்றி அவர்கள் காலம் கடந்திடாது. அம்பாளிடம் அத்தனை நம்பிக்கையும், பற்றும் அவர்களுக்குண்டு. இன்றைய

காலங்களில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அதிக தொகையான மக்கள் அம்பாளிடம் போய் வருவதைக் காணலாம்.

கோயிலுக்கு செல்லும் அடியார்களுக்கு நாள்தோறும் கோயில் நிர்வாகத்தினர் சிறப்பாக அன்னதானப் பணியை செய்து வருகின்றனர். வருடாந்த திருவிழாக் காலங்களிலும் ஏனைய முக்கிய தினங்களிலும் "அமுத சுரபி" அன்னதான சபையினரும் இப்பணியை தவறாது சிறப்பாக செய்து வருகின்றார்கள். இது ஓர் அரும்பெரும் காரியம், பாராட்டுக்குரிய செயலும் ஆகும். ஆனாலும் கோயிலைச் சுற்றி நிற்கும் நிழல் தரும் மரங்களைப் போல் ஏனைய தெருவோரங்களில் இல்லாமை பெருங்குறையாகவே உள்ளது. தெருவோரங்கள், மக்கள் நடமாடும் இடங்கள் எங்கும் நிழல் தரு மரங்கள் வேண்டும். இதற்கான ஆக்கப் பணியை செய்வதற்கு அன்னதான சபையினர் முன்வரவேண்டும். அதற்குரிய ஆற்றலும் வலிமையும் அவர்களுக்கு உண்டு.

வீட்டு நிலப்பரப்புக்கள், காணிகள், வயல்கள் எல்லா வற்றுக்கும் வரப்புகளை கட்டி மழைநீரைத் தேக்கினால் இங்குள்ள கிணறுகள் நன்னீர் வளமுடையதாக மாற்ற மடையும். பனை, தென்னை, ஏனைய வளங்களும் அதிகரிக்க வாய்ப்புண்டு. நீர்வளம் பெருகினால் நிலமும் வளம் கொழிக்கும்.

நயினாதீவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் வேப்பமரங்களை வளர்த்து இலவசமாக வழங்கி வந்தார். புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த வர்த்தகரான "சுப்பிரமணியம் திருநாவுக்கரசு" என்பவர் இவ் ஆசிரியரிடம் வேப்பமரக் கன்றுகளை பெற்று குறிகாட்டுவான் பேச்சியம்மன் கோயில் வீதியில் நட்டு வளர்த்துள்ளார். இன்று அவை பெரும் நிழல் தரு மரங்களாய் வளர்ந்து நிழல் பரப்பி நிற்கின்றன. வேப்ப மரக்கன்றுகளை வளர்த்து இலவசமாக வழங்கி பெரும் பணி செய்த அவ் ஆசிரியப் பெருமகனை நன்றியுடன் நினைவு கூறி நிற்கின்றேன்.



நயினை நாகபூசணி அம்பாள் கோயில்
முன்வாசலில் அமைக்கப்பட்டுள்ள
புதிய கோபுரம்.

இக்கட்டுரையின் ஊடாக இன்னொரு கருத்தையும் கூறவேண்டியுள்ளது. அம்பாள் நாகபூசணி வீற்றிருந்து அருள் மழை பொழிந்திடும் நயினாதீவு கடல் அரிப்புக்கு உள்ளாகி இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் அம்பாளின் அடியார்கள் மனதில் எழுந்துள்ளதினால் இத்தீவை கடல் அரிப்பில் இருந்து காத்திட தீவைச்சுற்றி சுவர் எழுப்பப்படுவதாக அறியக் கூடியதாக உள்ளது. ஆனாலும் கரையை காத்திட எழுப்பும் மதிலில் மோதிவரும் அலையின் வேகத்தை குறைத்திட வேண்டிய தேவையும் உள்ளது. இல்லையேல் காலகெதியில் கடல் அரிப்பினால் மதிலும் பாதிப்புக்கு உள்ளாகலாம். எனவே மோதிவரும் கடல் அலையின் வேகத்தை குறைத்திட தீவைச் சுற்றிய கடற்கரைக்கு கருங்கற்கள் போடப்படவேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது. இச்செயலை செயற்படுத்துவதற்கு சைவப் பெருமக்களும், அரசும், அரசு சார்பற்ற இந்து சமய அமைப்புகளும் பெரும் பங்களிப்பை செய்ய வேண்டும். அம்பாளிடம் வேண்டுதல் வைப்போரும் ஒவ்வொரு பார ஊர்தி நிறைந்த கருங்கற்களை கொண்டுவந்து தருவதாகவும் தாங்கள் வேண்டுதலில் மாற்றத்தை செய்வதன் மூலமும் இப்பணிக்கு உதவிடலாம்.

01-01-2010

# மண்கும்பான்

**வே**லணை கிழக்கு பகுதியில் "மண்கும்பான்" என்று அழைக்கப்படும் இடப் பிரதேசம் 1950களுக்கு முன்னர் சிறிய மலைக் குன்றுகள் போல் மணற்குவியல்களால் நிறைந்து காணப்பட்டது. ஆதலால் இப்பகுதி மண்கும்பான் என அழைக்கப்படலாயிற்று.

பண்ணைப் பாலம் போடப்பட்டதும் யாழ் மாவட்டத்தின் கட்டட தேவைகளுக்காக லொறிகளில் மண் அள்ளிச் செல்லப்பட்டதனால் அப்பிரதேசத்திலிருந்த மண்குன்றுகள் யாவும் இப்பொழுது அங்கில்லை. ஆனாலும் மண்கும்பான் எனும் பெயர் மாறவில்லை.

தென்னைச் செய்கைக்கு ஏற்ற மண்வளமுடைய மண்கும்பானிலும் அல்லைப் பிட்டியிலும் எங்கு நோக்கிலும் தென்னை மரங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. 2003ம் ஆண்டளவில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் நூற்றுக்கு மேற்பட்ட தென்னம் பிள்ளைகள் நட்டு வளர்க்கப்பட்டுள்ளன. தற்பொழுது அத்தென்னம் பிள்ளைகள் அனைத்தும் காய்த்திருப்பதை காணக் கூடியதாகவுள்ளது. அத் தென்னம்பிள்ளைகளை நட்டு வளர்த்தவரின் முன்மாதிரியான

செயலை ஏனையவர்களும் பின்பற்ற வேண்டும். நல்ல இனத் தேங்காய்களை வாங்கி பாத்தி போட்டு முளைத்து சிறிது வளர்ந்ததும் தனித்தனியே பெயர்த்தெடுத்து 21அடி இடைவெளிக்கொன்றாக குழி தோண்டி நட்டு வளர்த்திட வேண்டும். கோடை காலங்களில் இரண்டு வருட காலம் முடியும்வரை நீரூற்றி வளர்த்தால் தென்னம் பிள்ளைகள் மிக வேகமாக வளர்ந்து நான்கு வருடத்தில் காய்களைத் தரும். இப்பகுதிகள் மணற் பிரதேசமாகையால் குழிதோண்டுவது மிகச் சுலபமாகவும், செலவும் குறைவானதாகவுமிருக்கும். இப் பிரதேசங்களில் பனைகளை ஓரளவு காணக்கூடியதாகவுள்ளது. ஆனாலும் பனைகளோ, தென்னைகளோ இல்லாத காணிகளும் இங்குண்டு.

இப்பிரதேசம் யாழ் நகருக்கு மிக அண்மையிலுள்ளது. மேலும் மேலும் வசதிகளைப் பெறவும் ஏற்ற இடமாயுள்ள இப்பிரதேசம் மா, பலா, மாதுளை, கொய்யா, லாவுளு, நெல்லி போன்ற கனிமரங்களை நட்டு வளர்ப்பதற்கும் ஏற்ற மண்வளமும், நீர் வளமும் உடைய நிலப்பரப்பாகும். பொருள் வளமுடையோர் இப்பிரதேசத்தில் பல வழிகளிலும் முதலீடுகளை மேற்கொள்ளலாம்.

03-01-2010

# 1990க்கு முன் வடக்கிலும் கிழக்கிலும் இயங்கிய தொழிற்சாலைகள்

**1990**களுக்கு முன் அரசுசார் தொழிற்சாலைகளாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஆகியனவும் கிழக்கில் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை, கந்தளாயில் சீனித் தொழிற்சாலை ஆகியனவும் இயங்கி வந்தன.

இவைகளைத் தவிர பல தனியார் தொழிற்சாலைகளும் இயங்கி வந்ததால் பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பும் பல லொறி உரிமையாளர்களுக்கும் போதிய தொழில் வாய்ப்பும் வருமானமும் கிடைத்து வந்தது. அத்தோடு இப்பிரதேசங்களில் பணப்புழக்கமும் ஏற்பட ஏதுவாயிற்று. இன்று வடகிழக்கு மாகாணங்கள் இந்த வாய்ப்பை இழந்துவிட்டன.

1990க்கு முன் இம்மாகாணங்களில் இயங்கிய தொழிற்சாலைகள் பற்றிய விபரத்தை இந்நூலில் அடுத்துவரும் கட்டுரைகளில் தந்துள்ளேன். எம்மவரின் சிந்தனைக்கு இவை பயனுடையதாயிருக்கும் எனக் கருதுகிறேன்.

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை

வடகிழக்கில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை என்பன அரசினால் இயக்கப்பட்டு வந்தன. சீமெந்து தொழிற்சாலையின் தேவைக்காக இத்தொழிற்சாலையின் சுற்றுப்புறத்தில் சுண்ணக்கற்கள் தோண்டப்பட்டதால் நாற்பதடிக்கும் அதிகமான ஆழத்தில் 50அடி வரையான சுற்றளவில் பல நூற்றுக் கணக்கான பாரிய கிடங்குகளை காணக் கூடியதாயிருந்தது. இது 1955க்கு முன் என்னுடைய இளவயதில் சுற்றுலா சென்றபோது நான் கண்ட காட்சி. சுண்ணக்கற்கள் தோண்டப்பட்டதால் அதிகளவிலான நிலம் பாழடைந்துள்ளது. காங்கேசன்துறையின் சுற்றுவட்டம் இத் தொழிற்சாலையின் செயற்பாட்டால் மிகப்பாரியளவில் மாசடைவையும் எதிர்கொண்டது. இன்னொரு புறம் வெற்றிலைக் கொடிகள், மரக்கறிச் செடிகள், திராட்சைக்

கொடிகள் போன்றவை இங்கிருந்து எழுந்து வந்த தூசியினால் அழிவுக்குள்ளாகின. மக்களும் சுவாச நோய்த்தொற்றுக் குள்ளாக நேர்ந்தது.

இத்தொழிற்சாலையினால் ஒரு சிலருக்கு கிடைத்த வேலை வாய்ப்பைத் தவிர வேறெந்த நன்மையும் விளைய வில்லை. எமது தேசத்தின் ஒரு பகுதி கடலினுள் அமிழ்ந்து விடலாம் அல்லது கடலால் அழிக்கப்படலாம் எனும் எண்ணக்கரு இத்தொழிற்சாலையின் சுற்றுவட்டத்தை சுற்றிப் பார்த்தவர்கள் மனதிலெழுந்துள்ளது. இக் கருத்தை மறுத்துரைக்க முடியாது. இத்தொழிற்சாலை அமைந்ததன் விளைவு கண்ணை விற்றுச் சித்திரம் பெற்ற கதையாய் உள்ளது.

# மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலை

"டொலர்" எனும் முத்திரையோடு அல்மினியப் பாத்திரங்களும், "குதிரை" அடையாளமிடப்பட்ட தண்ணீர் பாவிக்கும் வாளிகளும் மிக ஏராளமாக இங்கு தயாரிக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் உற்பத்தியான பொருட்கள் யாவும் உலகத்தரம் வாய்ந்தவை. இவை இலங்கை மக்களால் மிகவும் விரும்பி வாங்கப்பட்டவை. இன்றும் "டொலர்" முத்திரை பதித்த பாத்திரங்களும், "குதிரை" முத்திரை பதித்த வாளிகளும் இலங்கை மக்களால் விரும்பிப் பாவிக்கப்படுகின்றன. மாவிட்ட புரத்திலிருந்து இப்பொருட்கள் வவுனியாவிற்கும், மட்டக்களப் புக்கும், கொழும்புக்கும் கொண்டு செல்லப்பட்டன. கொழும்பி லிருந்து தென்னிலங்கை முழுவதும் சந்தைப்படுத்தப்பட்டது. 1983க்கு பின்னர் இத்தொழிற்சாலை தென்னிலங்கைக்கு மாற்றம் பெற்றது. யாழ் மாவட்டத்திலிருந்து இத்தொழிற்சாலை இடம் மாற்றப்பட்டதால் அங்கு வாழும் நூற்றுக்கணக்கானோர் வேலை வாய்ப்புக்களை இழந்தனர். பல லொறி உரிமை யாளர்களும், அவர்களைச் சார்ந்த தொழிலாளர்களும் தமது உழைப்பை இழக்க வேண்டியேற்பட்டது. இத்தொழிற்சாலை யாழ் மாவட்டத்தை சேர்ந்த தனியொரு நபரால் இயக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# மஸ்கன்ஸ் கூரைத் தகடுகள்

மாவிட்டபுரத்தில் "மஸ்கன்ஸ்" என்கிற பெயர் முத்திரையோடு கூடிய கூரைத்தகடுகள் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கை முழுவதும் சந்தைப்படுத்தப்பட்டது. யாழ் மாவட்டத்து மக்கள் இக்கூரைத் தகடு களையே பெரிதும் விரும்பி வாங்கினர். மஸ்கன்ஸ் கூரைத் தகடுகள் உலகத் தரம் வாய்ந்தவை. மாவிட்டபுரத்தில் இத்தொழிற்சாலை இயங்கிய காலத்தில் அங்குள்ள பல நூற்றுக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. தற்பொழுது இத்தொழிற்சாலை தென்னிலங்கை யிலே இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் இப்பொருட்களுக்குரிய விற்பனை நிலையமும், களஞ்சியசாலையும் யாழ். ஸ்டான்லி வீதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. மஸ்கன்ஸ் கூரைத் தகடுகளையும் ஏனைய மஸ்கன்ஸ் தயாரிப்பு களையும் வாங்குவதில் யாழ் மாவட்ட மக்கள் முன்னரை விட இன்று அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

### நீர்வேலியில் இரும்புப் பொருள் தொழிற்சாலை

நீர்வேலியில் இரும்புப் பொருள் தொழிற்சாலையொன்று தற்பொழுதும் இயங்கி வருகின்றது. இத்தொழிற்சாலையின் உற்பத்திகள் தனித்தரம் வாய்ந்தவை. மண்வெட்டிகள், கோடரிகள், கத்திகள் போன்றவை யாழ் மக்களின் விருப்பத்துக் குரியதாக தயாரிக்கப் படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் கதவு பூட்டுக்கள் உலகத் தரம் வாய்ந்த நவீனமானவை. தமிழ்நாட்டின் திண்டுக்கல் பிரதேசத்தில் தயாரிக்கப்படும் பண வைப்புப் பெட்டிகளுக்கு நிகரான பணவைப்பு பெட்டிகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. எங்கள் தேசத்தில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு முன்னுரிமை அளித்து வாங்கிப் பாவித்தால் தேசிய உற்பத்தி வளர்ச்சியடையும்.

### திருநெல்வேலியில் மின்தறி நிலையம்

புங்குடுதீவில் பிறந்து யாழ் நகரில் கல்வி பயின்று யப்பானுக்கு சென்று மின்தறி கற்கை நெறியை பயின்றவரான இரா. குணரத்தினம் என்பவர் யாழ். திருநெல்வேலியில் மின்தறிப் புடவை தொழிற்சாலை ஒன்றை 1970களில் தொடங்கினார். இத்தொழிற்சாலையில் காற்சட்டை துணிகளும், சேட் துணிகளும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டது. காஞ்சிபுரம், காஷ்மீர் ரக பட்டுச்சேலைகளைப் போன்ற சேலைகளும் இங்கு உற்பத்தி செய்யப்பட்டது. யாழ் மாவட்டத்திலுள்ள சகல பல நோக்கு கூட்டுறவு சங்கங்களும், பெரிய புடவை வியாபாரிகளும் இத்தொழிற் சாலையின் உற்பத்திகளை ஆர்வத்துடன் சந்தைப்படுத்தினார்கள். பொதுமக்களும் இப்புடவைகளை விரும்பி வாங்கினர். போரின்

காரணமாக 1980களின் இறுதியில் இத்தொழிற்சாலை முற்றாக செயலிழந்தது.

## திருமலையில் கண்ணாடி குவளை தொழிற்சாலை

திருகோணமலையில் 1970களில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த "ஜெகநாதன்" என்பவரால் இத்தொழிற்சாலை இயக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட கண்ணாடி குவளைகளும், விளக்குச் சிமினிகளும் ஓரளவு தரம் வாய்ந்தவையாக இருந்தன. இப்பிரதேச மக்கள் பலருக்கும் வேலைவாய்ப்பும் கிடைத்தது. 1977க்கு பின்னர் இத்தொழிற்சாலைக்கு பேரினவாதிகளால் இடையூறு ஏற்படத் தொடங்கியது. 1983க்கு பின்னர் பேரினவாதிகளின் கெடுபிடிகள் அதிகரித்ததனால் இத்தொழிற்சாலையின் இயக்கம் முடக்கப்பட்டது.

# பாடும் மீன் நாட்டின் பன்னுமல்களும் புற்பாய்களும்

செந்நெல்லும், செங்கரும்பும் பசும்பாலும், தயிரும் நெய்யும் தேனுமாய் நிறைந்திருந்த மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலும் பட்டிருப்பிலும் கல்முனையிலும் இழைக்கப்பட்ட பன்னுமல்கள், புற்பாய்கள் மற்றும் கைத்தறி சாரங்கள், சேலைகள் போன்ற பொருட்களெல்லாம் 1977க்கு முன் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள வர்த்தக நிலையங் களில் பெருந்தொகையாக சந்தைப்படுத்தப்பட்டு இக் கைத்தொழிற் பொருட்கள் நாடெங்கிலும் புழக்கத்திலிருந்தன.

1977ல் ஏற்பட்ட திறந்த பொருளாதார கொள்கையாலும் போர் நெருக்கடிகளாலும் இக்கைத்தொழில்கள் முடங்கிப் போய்விட்டன. பன்னுமல்களுக்கு பதிலாக பொலித்தீன் பாவனை அதிகரித்ததினால் வீசப்படும் பொலித்தீன் பைகளால் எமது தேசம் மாசடைவிற்குள்ளாகி நிற்கிறது. பொலித்தீன் பைகளை உட்கொள்ளும் கால்நடைகளும் இறந்து போகின்றன. பொலித்தீன் பாவனை தடை செய்யப்படுவதுடன் இறக்குமதி செய்யப்படும் புற்பாய்கள், பிளாஸ்ரிக் பாய்கள் போன்ற பொருட்களுக்கும் இறக்குமதி தடை விதித்திட வேண்டும். இல்லையேல் அப்பொருட்களின் இறக்குமதி வரியை அதிகரித்து உள்ளூர் உற்பத்தியாளரின் ஏழ்மையை போக்கிட அரசு வழி காண வேண்டும். உற்பத்தியாளருக்கு போதிய கடன் வசதிகளை செய்து கொடுப்பதோடு சந்தை வாய்ப்பையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

02-02-2010

# சகல பிரதேசங்களுக்கும் கல்விக்கான வளம் சமநிலைப்பட வேண்டும்

"இல்லாமை எனும் பிணியில்லாமல் எல்லோர்க்கும் கல்வியென்று சொல்லி கொட்டு முரசே" என்று புரட்சிக்கவி பாரதிதாசனார் கூறியதுபோல் எல்லோர்க்கும் சமச்சீரான கல்வி கிடைக்க வேண்டும். பட்டினங்களில் உள்ள பாடசாலை, கல்லூரிகளில் காணப்படும் பௌதீக வளங்களைப் போல கிராமப் புறங்களிலும் ஓரிரு பாடசாலைகளிற்காவது போதிய பௌதீக வளங்கள் கிடைக்க வேண்டும். ஓரிரு விளையாட்டு திடல்களும் அதற்குரிய வளங்களும் வேண்டும். வன்னிப் பிரதேசத்தை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் போதியளவு பாடசாலைக் கட்டடங்களுண்டு. ஆனாலும் புனரமைப்புக்குரிய நிதி கிடைப்பதில்லை. ஆசிரிய வளங்களும் போதியளவில் இல்லாதிருக்கிறது. வன்னிப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளோ சகல வளங்களிலும் பெரும் பின்னடைவாகவே காணப்படுகின்றன. கற்றோரும், பொருள் வசதியுள்ளோரும் தங்கள் பிள்ளைகளின் தேவை கருதி கிராமங்களிலிருந்து பட்டினங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளார்கள். இதனால் கிராமத்துப் பாடசாலைகளின் தேவைகள் கேட்பாரற்றுப் போயுள்ளது. இவ் இடப்பெயர்வினால் கிராமங்களின் சமூக முன்னேற்றமும் தடைப்படுகின்றது. சமூகம் சமநிலை பெறுவதற்கு கல்விப் பணியில் கிராமங்களிற்கு கூடுதல் முன்னுரிமை வேண்டும்.

23-02-2010

# உடலினை உறுதி செய்யும் விளையாட்டு

உடலினை உறுதி செய்வது விளையாட்டு. சிலர் பொழுது போக்கிற்காக விளையாடுவதும் உண்டு. எப்படியாயினும் சோம்பலை தவிர்த்து ஊக்கத்தை கொடுத்து உடல் உறுதி பெறுவதற்கு விளையாட்டு உறுதுணையாகின்றது. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை உடல் நிலைக்கேற்றவாறு விளையாட்டை தேர்வு செய்து விளையாடுவது உடலினை உறுதியாக வைத்திருப்பதற்கு உதவுகின்றது. நோயற்ற வாழ்வுக்கும் விளையாட்டு பயனுள்ளதாகின்றது. குழந்தைகள் விளையாடுவதை சில பெற்றோர்கள் தடுத்திடுவதுமுண்டு. இதனால் குழந்தைகளுக்கு உடல் வலிமையை பெறமுடியாது போய்விடலா மென்பதை அப்பெற்றோர்கள் அறிவதில்லை. "ஓடி விளையாடு பாப்பா ஓய்ந்திருக்கலாகாது பாப்பா தேம்பி அழும் குழந்தை நொண்டி திரிந்து பறந்து வா பாப்பா" பாரதியாரின் இப்பாடல் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் பொருந்தும். குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும், சுக வாழ்விற்கும் ஓடியாடி விளையாடுவது அவசியமானதே. எப்படியாயினும் எல்லாப் பிள்ளைகளும் விளையாட்டில் பங்கு

கொள்ள வேண்டும். காலை எழுந்தவுடன் படிப்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா என்று பாரதியார் பாட்டின் கருத்தை நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய காலங்களில் தேசிய விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை விட்டு மட்டைப் (Cricket) பந்து விளையாட்டுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. எல்லோர்க்கும் எந்நேரத்திற்கும், எல்லா இடத்திற்கும் மட்டைப் பந்து விளையாட்டோ அல்லது கால்பந்து (Foot Ball) விளையாட்டோ பொருத்தமானதல்ல. இவ்விரு விளையாட்டுக் களை பொறுத்தளவில் ஒரே மைதானத்தில், ஒரே நேரத்தில் அதிகளவிலான மாணவர்கள் கலந்து கொள்ள முடியாது. அத்தோடு 22பேர் கொண்ட மாணவர்கள் குழு மட்டும் விளையாட்டில் கலந்து கொள்ள ஏனைய மாணவர்கள் பார்வையாளர்களாகவே நேரத்தைப் போக்கிட நேரிடும். பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, சடுகுடு நீளம் பாய்தல், ஓட்டம் போன்ற விளையாட்டுக்களாயின் நூற்றுக்கணக் கான மாணவர்கள் ஒரே மைதானத்தில், ஒரே நேரத்தில் பல பிரிவுகளாக இடங்களை பகிர்ந்து விளையாட முடியும். எல்லோருக்கும் உடற் பயிற்சிக்குரிய வாய்ப்பும் கிடைக்கும். உடலும் உள்ளமும் வலுவடையும்.

08-03-2010

# சகல பிரதேசங்களுக்கும் சுகாதார சேவை கிடைக்க வேண்டும்

கொழும்பு, கண்டி மாவட்டங்களிலுள்ள சுகாதார வசதிகள் ஏனைய மாவட்டங்களிற்கும் கிடைத்திட வேண்டும் நூற்றுக்கணக்கான மைல்கள் தூரத்திலிருந்து அதியுயர் சுகாதார சேவையை பெறுவதற்காக கொழும்பை நோக்கி வரும் நிலைமாறி அந்தந்த மாவட்டங்களில் அதியுயர் வைத்திய சேவையை பெறக்கூடிய நிலை உருவாக வேண்டும். குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் அனைத்து சுகாதார வசதிகளிலும் அதியுயர் முன்னேற்றம் தேவைப்படுகின்றது.

யாழ் போதனா வைத்தியசாலையில் இட நெருக்கடிகளை குறைப்பதற்கு வைத்தியசாலையின் சில பிரிவுகளையும், விடுதிகளையும் அயலிலுள்ள கிராமங்களுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். யாழ். நகரிற்கு மிக அண்மையிலுள்ள நீர் வளமும், நில வளமும் உடைய "அல்லைப்பிட்டி" பிரதேசம் இதற்குரிய பொருத்தமான இடமாகும். இதன் மூலம் இடநெருக்கடிகளை தவிர்த்திடலாம். போதனா வைத்தியசாலை

யிலிருந்து நகர்த்தப்படும் நோயாளர் பிரிவுகள் அயல் பிரதேசங்களில் அமைவதால் பிரதான வைத்தியசாலையோடு தொடர்பு கொள்வதும், நோயாளர்களை இடம் மாற்றுவதும் சுலபமாயிருக்கும்.

புங்குடுதீவில் சகல வசதிகளையும் உள்ளடக்கக் கூடிய கட்டடங்களை கொண்ட மாவட்ட மருத்துவமனை உண்டு. ஆனாலும் அங்கு வாழும் மக்கள் வைத்திய சேவையை பெறுவதற்குரிய நிரந்தர மருத்துவர் இல்லாமை பெரும் வேதனைக்குரிய விடயமாகும். இவ் வெற்றிடம் விரைவில் நிரப்பப்பட வேண்டும்.

28-02-2010

"நினைவுகளும் கனவுகளும்"

நூலின் ஆசிரியர்

திரு. வே. சு. கருணாகரன் அவர்களை

பாராட்டுவதுடன் இந்நூலின் வெளியீட்டு விழாவும்

இனிதே நிறைவேற வேண்டும் என

எமது நிறுவனம் வாழ்த்துகிறது.



வாழ்த்துவோர்

**எஸ். கே. செல்லையா**

இல. 20, டாம் வீதி, கொழும்பு-11.

(அலுமினியம், பித்தளை, எவர்சில்வர் பொருட்கள்

பாத்திரங்கள் மொத்த, சில்லறை விற்பனையாளர்)

**"நினைவுகளும் கனவுகளும்"**

நூலின் ஆசிரியர்

திரு. வே. சு. கருணாகரன் அவர்களை

பாராட்டுவதுடன் இந்நூலின் வெளியீட்டு விழாவும்

இனிதே சிறப்புடன் நிறைவேற வேண்டும் என

எமது நிறுவனம் வாழ்த்துகிறது.



**வாழ்த்துவோர்**

# PLASTIC EMPORIUM

Wholesale Dealers In Plasticwares, Travelling Bags
School Bags And Suitcases Etc.

**No. 345, Main Street,**
**Colombo-11, Sri Lanka.**
**Phone: 0094-115671690 Mobile: 0094-777600019**
**E-mail: mugunthan345@gmail.com**

# வாசிப்பதால் மனிதன் முழுமையடைகின்றான்

தொடர்ந்த வாசிப்பு மனிதனை முழுமையடையச் செய்கின்றது என்று அறிவுலக மேதைகள் கூறுகின்றனர். வாழ்தலுக்கான நெறிமுறைகளை அறிந்து தெரிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல நூல்களை தேர்ந்து வாங்கி வாசித்திட வேண்டும். பாடசாலைக் கல்வியோடு கற்றல் நின்று போய்விடக் கூடாது. பரந்துபட்ட சிந்தனையை வளர்த்துக் கொள்வதற்கும் தேர்ந்த வாசிப்புத் திறன் வேண்டும். அத்தோடு தொடர்ந்த வாசிப்பு வாழ்வின் முன்னேற்றத்திற்கும் துணையாகும். "தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்பது ஔவையாரின் திருவாக்கு. "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு" இது திருக்குறள் கூறும் அறிவுரை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று இன்னொரு குறள் மேலும் விரிவாக அழுத்தி உரைத்திருக்கிறது. நல்லவற்றைத் தேடிக் கறைபோகக் கற்றிட வேண்டும். நாளாந்த பத்திரிகைகள் முதல் நல்லறிஞர்கள் தந்திட்ட நூல்கள் வரை தேடி வாங்கி வாசித்திட வேண்டும்.

**வாசிப்புப் பண்பாடு**

வாசிப்புப் பண்பாடு என்று ஒன்றிருக்கிறது. இன்னொன்று பண்பட்ட வாசிப்பு. வாசிப்புப் பண்பாடு என்பது நாளாந்தப் பத்திரிகைகள், பருவ கால இதழ்கள் எனத் தொடர்ந்து வாசித்தலின் விட்டு விடாத் தொடர்ச்சி.

பண்பட்ட வாசிப்பு என்பது தேர்ந்த வாசிப்பு. பல்துறை சார்ந்த வாசிப்புக்களின் பயன்பேற்றால் பரந்த சிந்தனைத் தளத்திற்கு படிக்கட்டு அமைப்பது என்கிறார் கவிஞர் சு. வில்வரெத்தினம். தேடல், திரட்டல், தேறியதைப் பேணுதல், தேன் கூட்டுச் சீவியம் தேனகத் திருத்தல், தேன் இமைகளின் சாரத்தைப் பேணி நிலாக் காலத்தில் நுகரும் தனியழகு நல்லதை நாடித் தேடித் திரட்டி பலரோடும் பகிர்ந்து கொள்ளும் பண்பாடு அதுவாகும். வாசி என்பதற்கு சுவாசம் என்றும் பொருள். சுவாசம் என்பதற்கு தமிழ்ச் சொல் மூச்சு. சும்மா மூச்சல்ல உயிர் மூச்சு என்று கவிஞர் மேலும் சொல்கிறார். மேலும் விரிவாக தெரிந்திட வேண்டின் சு. வில்வரெத்தினத்தின் "வாசிகம்" எனும் நூலை வாங்கிப் புரட்டுங்கள். கவிஞர் சு.வி.யின் வாசிகம் எனும் நூலில் வாசிப்பு பண்பாடு பற்றிய உரை நடையின் சுருக்கம் இவை.

14-04-2010

# பாட்டுக்கொரு புலவன் பாரதி

உயிர் நிகர் தமிழ் நிலை தாழ்ந்ததால் இமை திறவாதிருந்த நிலையில் இலகு பாரதி தலைவன் தோன்றினான். பாரதியாரைப் பற்றிப் பேசும் பாரதிதாசனாரின் பாடல் வரிகள் இவை.

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா" என்று கூறும் கவிமணி. தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் பாடலை தமிழ் இசை வள்ளல் தண்டபாணி தேசிகர் இசைக் கச்சேரி நிகழ்த்திய மேடைகள் தோறும் பாடத் தவறியதில்லை. இசைப் பாடகர்கள் மேடைகளில் பாரதியாரின் பாடல்கள் சிலவற்றை பாடவில்லையென்றால் அன்றைய கச்சேரி களை கட்டாது. பாரதியாரின் பாடல்கள் ஒவ்வொன்றும் இலகு தமிழில் வார்க்கப் பட்டவை. இனிமையான குரல்வளம் கொண்ட எவரும் பாரதியாரின் பாடல்களைப் பாட முடியும். அவரது பாடல்களில் இனிமைச் சுவை இருக்கும். அழகு தமிழ் நடை இருக்கும். புரட்சிகரமான புதுமைக் கருத்துக்களும் பொதிந்திருக்கும்.

*ஆசை முகம் மறந்து போச்சே இதை யாரிடம் சொல்வேனடி தோழி நேசம் மறக்கவில்லை நெஞ்சம் எனில் நினைவு முகம் மறக்கலாமோ? கண்ணில் தெரியுது ஒரு தோற்றம் அதில் கண்ணன் அழகு முழுதில்லை நண்ணு முகவடிவு காணில் அந்த நல்ல மலர்ச் சிரிப்பைக் காணோம்.*

இப்பாடலில் இனிமையுமுண்டு, சுவையுமுண்டு அழகியலையும் இப்பாடலில் காணலாம்.

பட்டுக் கருநீலப் புடவை பதித்த நல் வைரம் நட்டு நடுநிசியில் தோன்றும் நட்சத்திரங்களடி என்று கூறும் பாரதியாரின் இக் கவிதை வரிகள் அழகியலின் உயரிய நிலையைத் தொட்டு நிற்கிறது.

சின்னஞ் சிறுகிளியே கண்ணம்மா, சுட்டும் விழிச் சுடர்தான் என்ற இவ்விரு பாடல்களும் பாடப்படாத இசைக் கச்சேரிகளும் இல்லை. பாடாத மனங்களும் இல்லை.

சமுதாய எழுச்சிப் பாடல்களையும், சுதந்திர எழுச்சியை வலிமைப் படுத்திய பாடல்களையும் நிறையவே தந்துள்ளார் பாரதியார்.

*இதம் தருமனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும் பதந்திரு இரண்டும் மாறிப் பழி மிகுந்திழிவுற்றாலும் சுதந்திர தேவி நின்னை தொழுதிடல் மறக்கிலேனே*

என்ற பாடல் வரிகளுக்கு கூனரையும் நிமிர்ந்து பார்க்க வைக்கும் சக்தியுண்டு என்று பாரதியாரின் இப்பாடலை கற்றோர்கள் கூறுவர்.

எமது சமுதாயத்தினரிடையே உள்ள குல பேதத்தை சுட்டிக் காட்டும் பாடல்களும் அவரது நூல்களிலே அநேகமுண்டு.

*"வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டீர் பிள்ளைகள் பெற்றது அப்பூனை பேருக்கொரு*

*நிறமாகும். சாம்பல் நிறமொரு குட்டி வெள்ளைச் சாந்தின் நிறமொருகுட்டிபாம்பின் நிறமொருகுட்டி வெள்ளைப் பாலின் நிறமொரு குட்டி எந்த நிறமிருந்தாலும் அவை யாவும் ஒரே தரமன்றோ.*

மதத்தால், தொழிலால், வசதி வாய்ப்பால் வேறு பட்டாலும் மனிதரிடையே உயர்வென்றும் தாழ்வென்றும் பேதம் இருப்பதாகாது என்பதை விரிவாக வர்ணிக்கிறது இப்பாடல். இப்படிப் பலதரப்பட்ட பாடல்களையும் தந்த பாரதியாரை "பாட்டுக்கொரு புலவன் பாரதியென்று" பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். தமிழ் கூறும் நல்லுலகும் ஒரே குரலில் அவரது கருத்தை ஏற்றுக் கொண்டது.

எமது சமூகத்தினரிடையே இருந்து வந்த பழமை வாதம், சாதி உயர்வு தாழ்வு, பெண்ணடிமை எனப் பலவாறு சேர்ந்து கொண்ட அழுக்கை அகற்ற முயன்றவர்களுக்கு பாரதியார் பாடல்கள் துணையாய் நின்றன.

அடக்கு முறைக்குள்ளானவர்களினது போர்க் கருவியும் ஆனது பாரதியார் பாடல்கள். பேரறிஞர் அண்ணாவை அவர் காலத்தில் வாழ்ந்திருந்த திரு. வி. கல்யாண சுந்தரனார் தமிழ் நாட்டின் அழுக்கை யகற்றும் வண்ணான் எனக் கூறியதுண்டு. ஆனால் அப்பணிக்குரிய வழியை திறந்துவிட்ட முதற் பெருமை பாரதியாருக்கே உரியது.

புன்மைகள் தவிர்த்து புதிய கருத்தினைச் சொல்லி புதிய சமுதாயம் உருவாக பாரதியார் பாடல்கள் வழி திறந்தன. தமிழ் இசையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெருமையும் பாரதியாருக்கே உரியது.

**இலகு தமிழில் பாரதியார் கவிதைகள்**

பாமரத் தமிழர் பொருளறிந்து தமிழ் இலக்கியத்தைப் புரிந்திட முடியாதிருந்த காலத்தில் இலகு தமிழில் பாடல்கள்

தந்தவர் பாரதியார். பண்டிதர்களுக்கு மட்டும் சொந்தமாயிருந்த தமிழ் பாமரர்களுக்கும் சொந்தமானதென்பர் தமிழ் ஆய்வாளர்கள். இலகு தமிழ் நடை தமிழ் உலகெங்கும் பரவி தமிழ் புத்துயிர் பெறவும் பாரதியார் பாடல்கள் வழிசமைத்தன.

*என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன் தமிழால் பாரதி தகுதி பெற்றதும் தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும் எவ்வாறு என்று எடுத்துரைக்கின்றேன்*

பாரதியாரின் பெருமை பேசும் பாரதிதாசனாரின் இன்னொரு பாடல் வரிகள் இவை. நான் பாரதியாரைத் தெரிந்து கொண்டது மிகக் குறைவு. என்னால் இங்கு தரப்பட்டதோ ஒரு சில துளிகள். இளஞ் சமுதாயத்தினர் பாரதியாரை அறிந்து கொள்வதற்குரிய தூண்டுகோலே இக் கட்டுரையின் நோக்கம்.

08-08-2010

# புரட்சிக் கவிஞர் பாரதி தாசனார்

பாரதிதாசனாருக்கு பெற்றோரால் சூட்டப்பட்ட பெயர் சுப்புரெத்தினம். தமிழ் மொழி உட்பட பல மொழிகளிலும் புலமை பெற்றவர். எனினும் தாய் மொழி தமிழில் உயிரிலும் மேலான பற்றுடையவர். பாரதியாரின் எழுத்துக்களாலும் பாடல்களாலும் ஈர்க்கப்பட்டதால் தனது இயற்பெயரை "பாரதிதாசன்" என மாற்றிக் கொண்டார். பாரதியாரைப் பற்றி பல கவிதைகளையும் தந்துள்ளார். அதிகமான சமுதாயப் புரட்சிக் கருத்துக்களை உடைய பாடல்களை இவர் தந்துள்ளதால் தமிழ் கூறும் நல்லுலகினர் இவரை "புரட்சிக் கவி" பாரதிதாசன் என அழைத்தனர்.

### தமிழ் இவருக்கு அமிழ்தானது

*"தமிழுக்கு அமுதென்று பேர்! - அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!*
*தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!*

*தமிழுக்கு மணம் என்று பேர்!*

*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*

*தமிழுக்கு மது என்று பேர்! - இன்பத்*

*தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்!"*

*"தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்*

*தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்!*

*தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்*

*தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!*

*தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்*

*தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!*

*தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத்*

*தமிழ் எங்கள் வளம்மிக்க உளமுற்ற தீ!"*

இந்த இனிய தமிழ்ப் பாடல்கள் பாரதிதாசனாரின் உயரிய படைப்பு. ஏராளமான தமிழ் உள்ளங்களை கொள்ளை கொண்ட பெருமையும் இப்பாடல்களுக்குண்டு. தமிழ் என்றால் அமுது. அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நிகரானது. தமிழரின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் தமிழே துணையானது என்பது பாரதிதாசனாரின் கருத்தாகும். தமிழ் ஆர்வலரின் கருத்தும் அதுவே. சமுதாயப் புரட்சிக்கான பாடல்களோடு அழகியல் சம்பந்தமான பாடல்கள் பலவற்றையும் தந்துள்ளார்.

*ஏடு எடுத்தேன் கவி ஒன்றை வரைந்திட என்னை எழுதென்று சொன்னது வானம் ஓடையும் தாமரையும் பூக்களும் தங்கள் ஓவியம் தீட்டென்று உரைக்கும். காடும் கனியும் கார்முகிலும் வந்து கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும். ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர் அன்பினைச் சித்திரம் செய்க என்றார்.* உள்ளத்தை கொள்ளை

கொள்ளும் இப்பாடலில் எத்தனை இன்பம், எத்தனை அழகு. அழகியலை அள்ளித் தருகிறார் பாரதிதாசனார். அழகியல் நிறைந்த பாடல்கள் மட்டுமல்லாமல் இன்னும் பல்வேறு தரப்பட்ட பலநூறு பாடல்களைத் தந்து நிகரில்லாப் புகழ் பெற்றார்.

**தமிழ் தொண்டர் தம் பெருமை**

*தமிழிற்கு தொண்டு செய்வோர் சாவதில்லை. தமிழ்த் தொண்டர் பாரதிதான் செத்ததுண்டா? தமிழ், தமிழர் என்று சிறிது தொண்டு தாம் புரிவார் அவர் பெருமை அரசர்க்கில்லை.*

இக் கவிதை மூலம் தமிழ்த் தொண்டு புரிவோர்க்கு முடி சூட்டுகிறார் பாரதிதாசனார். தமிழை வளர்ப்போர் தமிழினம் வாழ வழிசமைப்போர் ஆகிறார்கள். அவர்கள் வாழ்த்தப்பட வேண்டியவர்கள், போற்றுதலுக்குரியவர்கள் என்பது பாரதிதாசனாரின் கருத்து.

*பொதுமக்கள் நலம் நாடி புதுக்கருத்தைச் சொல்க. புன்கருத்தைச் சொல்வதிலே ஆயிரம் கோடி வரினும் அதற்கொப்ப வேண்டாம். அருந்தமிழர் தமை அழிப்பாரை போற்றுதற்கும் ஏடுபல வந்தால் எதிர்ப்பதன்றோ தமிழர் தம் எழுதுகோல் வேலை. ஏற்ற செயல் செய்வதற்கு ஏன் அஞ்ச வேண்டும்.* தமிழ் ஊடகங்களுக்கு இதைவிட உயர்ந்த அறிவுரை வேறென்ன வேண்டும்? எமது தேசத்திற்கும் இன்றைய காலத்திற்கும் இப்பாடலின் கருத்து பொருத்தமுடையதாகின்றது.

25-08-2010

# திருக்குறள் ஓர் உலகப் பொதுமறை நூல்

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது உலக மொழியியல் ஆய்வாளர்களின் கருத்து. ஒரு நாடு மொழி, இனம், மதம் சார்ந்து வள்ளுவர் உலகில் இருந்து திருக்குறளை தனிமைப்படுத்தவில்லை. திருக்குறள் சொல்லும் பொதுமறைக் கருத்துக்களைக் கண்டு வியந்த உலகம் திருக்குறளை ஓர் உலகப் பொதுமறை நூலாக ஏற்றுக் கொண்டுள்ளது.

வீரமா முனிவர்,போப்பையர் போன்றவர்கள் உட்பட நாற்பது நபர்களால் திருக்குறள் தமிழ்மொழியில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் சொல்கின்றன. அத்துடன் ஆங்கிலம் உட்பட இருபத்தி ஆறு உலக மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ள பெருமையும் திருக்குறளுக்கு உண்டு. திருக்குறளின் மூல நூல் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளதால் தமிழும் வளம் பொருந்திய மொழிகளில் ஒன்றாக உலகால் இனம் காணப்பட்டும் உள்ளது.

ஆதலால் வள்ளுவரையும் தமிழ் நாட்டையும் ஒருங்கே புகழ்ந்து "வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாட்டிசைத்தார் பாட்டுக்கொரு புலவன் பாரதியார். தமிழ் உலகும் பெருமை உடையதாயிற்று.

இரண்டே வரிகளில் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய பெருமையுடையது திருக்குறள். அரசர் முதல் ஆண்டிவரை கற்றுணர்ந்து செயற்படுவதற்குரிய கருத்துக்களை தந்த பெருமையும் திருக்குறளுக்குண்டு.

நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களுக்குள் 1330 குறட்பாக்களை உள்ளடக்கியது இந்நூல். இவையனைத்தையும் மனனம் செய்வதென்பது எல்லோருக்கும் எளிதான காரியமல்ல. ஆகவே இளைய சமுதாயத்தினர் ஒவ்வொரு அதிகாரத்திலும் முறையே குறைந்தது இரண்டு அல்லது மூன்று குறள்களை தேர்வு செய்து பொருளறிந்து மனனம் செய்திடல் அவசியமானது. எடுத்துக் காட்டாக கல்வி சம்பந்தப்பட்ட திருக்குறள்கள் பத்து உண்டு. அவைகளில் "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற குறளையும் "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு" என்னும் திருக்குறளையும் பொருளறிந்து மனனம் செய்திட முயல வேண்டும். அதைப் போலவே ஏனைய ஒவ்வொரு அதிகாரங் களிலும் முறையே இரண்டு அல்லது மூன்று குறள்களையாவது மனனம் செய்திடுவது இளைய சமுதாயத்தினரது அறிவுத் தேடலுக்குரிய வழியாகும். "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்று கூறும் வாக்கியத்தின் மூலமாக ஔவையார் இக்கருத்தை வலியுறுத்தி உள்ளதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

30-08-2010

# தாய்மொழித் தினம்

சிக்காக்கோ நகரில் நாளொன்றுக்கு எட்டு மணி நேர வேலை எனும் கோரிக்கையை வலியுறுத்தி பேராட்டம் நடத்திய தொழிலாளர்கள் அக்கோரிக்கையின் பலாபலனை வென்றெடுத்தார்கள். அப்போராட்டம் வெற்றி பெற்றதன் நினைவு நாளே வருடந்தோறும் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்ற உலகத் தொழிலாளர் தினமாகிய மே முதல் நாள் ஆகும். அதைப் போலவே வங்காள தேசத்தில் வங்காள (Bengal) மொழியை அரச மொழியாக்க வேண்டுமென்று பேராட்டம் செய்த மாணவர்களில் நால்வர் மரணமடைய நேரிட்டது. ஆனாலும் அவர்களின் கோரிக்கை வெற்றி பெற்றது. வங்காள தேசத்தில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு இனத்தினதும் தாய்மொழித் தினமாக வருடந்தோறும் பெப்ரவரி 21ல் உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. வங்காளிகள் தாய் மொழியில் அதிக பற்றுள்ளவர்கள். அதைப் போலவே மற்றைய இனத்தவர்களின் தாய்மொழிப் பற்றையும் மதிப்பவர்கள். சீனர்களும், பிரான்சியர்களும் தாய் மொழியில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். சிங்கள இனத்தவர்களும் தமது

தாய்மொழியில் அதிக பற்றுடையவர்களே! ஆனாலும் பிற இனத்தவர்களின் மொழிப் பற்றை தவறாகப் பார்க்கும் எண்ணம் கொண்டவர்களாக விளங்குவது ஏனோ தெரியவில்லை?

**தமிழ்மொழித் தினம்**

உலகில் உள்ள அனைத்து இனத்தவரும் வருடந்தோறும் மாசி இருபத்தி ஒன்றில் தங்கள் தங்கள் தாய் மொழித் தினத்தை மிகச் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

எங்கள் தேசத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து மாசி மாதம் இருபத்தி ஒன்றில் தமிழ் மொழித் தினத்தை ஏனோ தானோ என்ற நிலையில் கொண்டாடி வருகின்றனர்தான் இவ்விழாவில் பெற்றோர்களின் பங்களிப்பைக் காண்பது அரிதாக உள்ளது. பாடசாலைகளில் மட்டும் அல்லாமல் கோவில்கள் மற்றும் பொது இடங்களில் எல்லாம் தமிழ் தினவிழா மிகப் பெரியளவில் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும். அவ்வேளையில் விழா அரங்குகளில் எல்லாம் முத்தமிழும் இடம்பெற வேண்டும். தமிழ்த் தின விழாவில் தமிழ் மக்கள் அனைவரும் உணர்வுடன் தவறாது பங்கு கொள்ள வேண்டும். எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழ் என்று உறுதி எடுத்திடும் நாளாக இந்நாள் அமைந்திட வேண்டும்.

13-09-2010

# தமிழே தமிழருடைய சின்னம்

உலகில் உயிரினம் பேசக் கற்றுக் கொண்ட காலம் முதல் தோன்றியது தமிழ்மொழி என்பது உலக மொழியியல் ஆய்வாளர்களின் கருத்து. தாய்ப்பசு தன் கன்றை கதறியழைத்திடும் "அம்மா" எனும் ஓசை நயத்திலிருந்து மேற்குறிப்பிட்ட கருத்து உறுதியாகின்றது. தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற பிறநாட்டு மொழியியல் ஆய்வாளர்களால் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் மூலமும் தமிழ் மொழியின் இப்பெருமையை அறியக் கூடியதாகவிருந்தது.

தமிழ் மொழியோடு பிறமொழிகளையும் கற்றறிந்த பாரதியாரும் பாரதிதாசனாரும் தமிழ்மொழியின் ஆளுமை, இனிமை, பெருமைகளை பின்வருமாறு உரைத்திட்டனர்.

*"இனிமைத் தமிழ்மொழி எமது எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல்லமுது தனிமைச் சுவையுள்ள சொல்லை தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை*

என்று பாரதிதாசனாரும் "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என்று பாரதியாரும் பாடல் தந்துள்ளனர்.

**தமிழ் எங்கள் போற்றுதலுக்குரிய தாய்**

தமிழ் குழந்தைகள் ஆரம்பக் கல்வியை தாய்மொழி தமிழில் விருப்பமுடன் தொடர வேண்டும் என்பது பாரதியாரின் கருத்தாகின்றது. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்தென்பர்" இளமைப் பருவம் முதல் தமிழைக் கற்று வந்தால் தமிழ் மொழியில் ஆசையும், ஆர்வமும் ஏற்படும். தமிழர் தம் அடையாளத்தை இழந்திடாமல் வாழ்வதற்கு தமிழ் குழந்தைகளின் ஆரம்பக் கல்வி தமிழிலே அமைந்திடுவதுவே பொருத்தமுடையது.

**வேற்று மொழி வீட்டு மொழியானால்?**

வேற்று மொழி வீட்டு மொழியானால் தாய்மொழி தானாகவே அழிந்திடும். எந்த மொழி எம் மொழியோடு அதிகம் கலக்கிறதோ அம் மொழியாகவே எம் மொழியும் மாற்றமடைந்து விடும். எனவே நடைமுறைப் பேச்சு வழக்கில் வேற்று மொழியில் உரையாடுவதையும் அல்லது வேற்று மொழிச் சொற்களை கலந்து பேசுவதையும் முற்று முழுதாக தவிர்த்திடல் வேண்டும். வீட்டில் உரையாடும் மொழி எமதானால் எமது மொழி உலகம் உள்ளவரை உயிர் வாழும். இவ்வுல கினில் தமிழர் தம் சின்னத்தை இழந்திடாமல் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால் தமிழர் வாழும் இடமெல்லாம் தமிழ் தழைத் தோங்கிட வேண்டும். தமிழைப் பேணி வளர்ப்பதோடு எம் இனப்பெருக்கத்தையும் அதிகரித்திட வேண்டும்.

எமது சின்னமாகிய தமிழ் வாழுமானால் எமது இனத்தை அழித்திட யாராலும் முடியாது. எம் மொழியைப் பாதுகாத்து இவ்வுலகில் மீண்டும் உயர்ந்து எழுந்து நிற்போம். மன உறுதியே எமது பலம்.

**பிறமொழிக் கலப்பின் விளைவுகள்**

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரே இனத்தவராயிருந்த பல கோடித் தமிழர் தமிழ்மொழியோடு சமஸ்கிருதம் கலப்புற்றதால் தெலுங்கு, துளு, மலையாளம், கன்னடம் எனப் பல மொழிகளாக உருவெடுத்ததோடு பல இனப் பிரிவுகளாகி இன மோதல்களுக்கு உள்ளாகி நிற்பதும் சரித்திரமாகிவிட்டது.

18ம் நூற்றாண்டளவில் இலங்கையில் புத்தளம், சிலாபம், வென்னப்புவ, கற்பிட்டி மற்றும் அதனை அண்டிய தீவுகள், நீர்கொழும்பு போன்ற பிரதேசங்களில் தமிழ் இனத்தவராய், தமிழ் பேசுபவர்களாய் வாழ்ந்த மக்களின் இளைய சந்ததியினர் இன்று மொழியாலும், மதத்தாலும். இனத்தாலும் மாற்றத் திற்குள்ளாகியுள்ளனர்.

அப்பிரதேசங்களில் முன்னேஸ்வரம், உடப்பு, முந்தல் போன்ற பகுதிகளே இன்று தமிழ்க் கிராமங்களாய் எஞ்சியுள்ளன. இங்கு வாழும் தமிழர்களும் தங்கள் தாய் மொழியான தமிழைக் கற்றிடவும், பேசவும், கலாச்சாரத்தைக் காப்பதற்கும் எதிர் நீச்சல் போட வேண்டிய நிலையே உள்ளது.

19ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை நீர்கொழும்பில் ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் இயங்கி வந்தன. ஆனால் இன்று ஒரே ஒரு தமிழ்ப் பாடசாலை மட்டுமே செயற்பாட்டிலுள்ளது.

போனது போக இனிமேலாவது எங்கு வாழினும், எந்த நிலையிலும் தமிழைப் பேணி தமிழ்க் கலாச்சாரத்தை காத்து தமிழ் இன அடையாளத்தை இழந்திடாமல் தமிழராய் தலை நிமிர்ந்து வாழ்வோம். கவிஞர் சு.வி.யின் தமிழ் வாழ்த்துப் பாடல் ஒன்றை கீழே தந்துள்ளேன்.

இத்தமிழ் வாழ்த்துப் பாடல் வரிகளால் எந்நாளும் எம் தாய் தமிழை வாழ்த்துவோம் (பாடுவோம்)

*தாயழகே எங்கள் தமிழே தரணியிற் பூத்த முதல் மொழியே*
*பாலூட்டித் தாலாட்டில் பண்ணாய் குழைந்து இசைந்தவளே*

*தாய் முன்னம் கைவிரல் பிடித்து தமிழ் மண்ணில் எழுதிவிக்க*
*தேயாது கூராய் அறிவின் நேராகி நிலம் கூடி*
*தமிழ்க் கவிஞர் உள நின்றவளே*

*நேய விளக்கு சுடர் நீயே*
*தென் தமிழ் பொதிகை மலையாளே*
*நேய விளக்கினை கையெடுப்போம்*
*நெஞ்சில் அறிவு சுடர் தருவாய்*

*மண்ணில் எழுதிய விரலாலே உனை*
*விண்ணிற் சுவரிலும் எழுதி வைப்போம்*
*கண்ணில் தெரியும் காட்சி எல்லாம்*
*காதல் தமிழால் தீட்டி வைப்போம்*
*கண்ணுக்கு இனியவளே கரும்பின் பாகிலும் இனிப்பவளே*
*எங்கள் எழு தமிழே நீ என்றும் நீ வாழியவே.*

**18-09-2010**

# மரண அஞ்சலி செலுத்துவதற்கு பொதுவான நூலொன்று தேவை

உலகில் பிறந்தோர் அனைவரும் என்றோ ஒருநாள் இறப்பது திண்ணம். இறந்தோருக்கு அஞ்சலி செலுத்துவது உலக வழமை. கத்தோலிக்க மதத்தவர் இறந்தோருக்குரிய அஞ்சலி நிகழ்வை செய்வதற்காகவும் எல்லோர்க்கும் பொதுவான நூலை உரைநடையில் ஆக்கி வைத்துள்ளார்கள். தமிழ் கத்தோலிக்க மதத்தவருக்கான மரண அஞ்சலி நிகழ்வை கத்தோலிக்க மதகுரு தமிழ் மொழியில் செய்திடுவார். சமூக மளித்திருப்போரும் மதகுருவுடன் இணைந்தும் தனித்தும் அஞ்சலி செலுத்துவது வழமையாயுள்ளது. அஞ்சலி உரைக்கான பொத்தகம் எல்லோரது கையிலுமிருக்கும். மனப்பாடமற்றோர் பொத்தகத்தின் துணையுடன் அஞ்சலி நிகழ்வில் பங்கு கொள்வர். மிக அமைதியான முறையில் மரண அஞ்சலி நிகழ்வு நடைபெறும். அவ்வேளைகளில் கேட்டு நிற்போரும் அமைதி காத்திடுவர்.

இன்றுவரை சைவ சமயத்தவர்களின் மரண அஞ்சலி நிகழ்வுக்கான நூலொன்று இல்லாதது பெருங்குறையாக வுள்ளது. சைவக் குருக்கள் ஏதோவொன்றை செய்யத்தான்

செய்கிறார். அதன் வகிபாகம் என்ன?அவரால் செய்யப்படும் செயலின் பொருள் என்ன? என்று குருக்களைத் தவிர ஏனையோர் அறிந்திலர். இதுகாலவரை எங்களுக்குத் தெரியாததையே செய்து கொண்டிருக்கின்றோம். இதனால் மரண அஞ்சலி நிகழ்வில் அமைதி நிலவுவதில்லை. மரண நிகழ்வில் ஏதோ தெரிந்தளவில் திருமுறைகள் சிலவற்றை ஓதுவார்கள். இதுவும் ஒழுங்குமுறையற்று இடத்துக்கிடம் வேறுபாடு உடையதாயிருக்கும் பாடப்படும் திருமுறைகளில் தப்பும், தவறும் சேர்ந்திருக்கும். திருமுறைகளையே பாடினாலும் எந்தெந்த திருமுறைகளை பாடவேண்டும் எனும் ஒழுங்கு விதிமுறை வேண்டும். கத்தோலிக்க மதத்தவரின் உரைநடை நூல் போன்று திருமுறைகளை இணைத்த எல்லோர்க்கும் பொதுவான ஓர் நூலாக்கம் வேண்டும். கையடக்கமுடையதான சிறிய நூலாகவும் அமைந்திட வேண்டும். இதையோர் அமைப்போ அல்லது கற்றோர் சிலர் இணைந்தோ இந்நூலை உருவாக்கித் தரவேண்டும். எல்லோருடைய மரண அஞ்சலி நிகழ்விலும் இந்நூல் பயன்படுத்தப்படவும் வேண்டும்.

04-11-2010

# சமயப் பணியுடன் சமூகப் பணியும் இணைந்திட வேண்டும்


எமது கோவில்கள் சமய வளர்ச்சியோடு சேர்ந்து சமுதாய வளர்ச்சிக்குரிய தளமாகவும் அமைந்திட வேண்டும். சமய வழிபாட்டு முறையில் எமது சமய முதல்வர்கள் சமயப் பணியோடு மக்கள் தொண்டையும் இணைத்து செயற்படுத்தி சமய, சமூகப் பணிக்கான முன்மாதிரியை செய்தும் காட்டி யுள்ளனர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் நாவுக்கரசரின் தேவாரப் பதிக வரியும் ஞானசம்பந்தரின் "பணிகலந்து செய்யாத பாவிகள் தொழச் செல்வதென்றால்" என்ற தேவாரப் பதிகத்தின் வரியும் இதனை உறுதிப்படுத்து கின்றது. மற்றும் பல சமய குரவர்களும் மக்கள் துயர் களைவதில் தங்கள் பங்களிப்பை செய்துள்ளார்கள் என்றும் எமது சைவ சமய நூல்களினூடாக அறியக் கூடியதாயுள்ளது.

# அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

எங்கள் தேசத்திலும் சமயப் பணியுடன் சமூகப் பணியும் இணைந்த சேவைக்கு அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை உதாரணமாகக் கொள்ளலாம். அன்னை அவர்கள் சைவத்தைக் கறையறக் கற்றவர். தமிழ் இலக்கிய நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த ஆன்மீக சொற்பொழிவாளர். பணி செய்வதே தனது கடமையெனத் தொடர்ந்தவர். கற்றோரால் பாராட்டப்பட்ட நற்பண்பாளர். அன்னை தன் ஆன்மீகப் பணிகளை தொடர்வதற்கு உரிய இடமாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயிலை தேர்வு செய்து கோயிலுக்குரிய புனரமைப்புப் பணிகள், புதிய கோபுரம், கட்டிடங்கள் எனப்பட்ட சகல பணிகளும் அவரால் முன்நின்று செய்து முடிக்கப்பட்டது. ஆதரவற்றோருக்கான பணியைச் செய்வதற்கு கோயிலின் அயற் சூழலில் ஆச்சிரமம் ஒன்றும் அமைக்கப்பட்டது. ஆதரவற்ற பிள்ளைகளைச் சேர்த்து அவர்களின் வாழ்வுக்குரிய தேவைகளோடு கல்வி அறிவைப் பெறவும் வழி செய்தார். திருமண வயதை எட்டிய பெண்

பிள்ளைகளுக்கு ஏற்ற வரன்களைத் தேடிக் கொடுத்து அவர்களின் எதிர்கால வாழ்வுக்கும் வழி செய்தார். ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைத்து அன்பு செய்து அறநெறியுடன் கூடிய அருள் நெறியும் காட்டி வளர்த்த பெருமை இவருக்கே உரியது.

அவரது அருள் நெறிச் சொற்பொழிவுகளால் கிடைக்கப் பெற்ற வருமானமும் இவ் அறப் பணிகளுக்கே செலவானது. யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியின் புனரமைப்புப் பணிகளுக்கும் தொடர்ந்த உதவியை தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயில் நிர்வாகம் செய்து வருகின்றது. இப்பணிகளுக்கெல்லாம் அன்னை அவர்களே வழிகாட்டியாய் இருந்துள்ளார் அன்னை. ஏழை, எளியோர்க்குச் செய்யும் பணி இறைவனுக்குச் செய்யும் பணியென்ற உணர்வில் உறுதி உடையவர். ஏழைகளின் வாழ்வின் உயர்வுக்கு உயிருள்ளவரை உழைத்தார். ஏழைகளின் சிரிப்பில் இறைவனை கண்ட அன்னை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தும் மறையாதவராய் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். "நல்லோர் செய்த பணி அவர் காலத்தோடு நின்று போய்விடாது என்றுரைப்பர் மேலோர்". அன்னையின் திருத்தொண்டு தமிழ்மொழியில் புலமைபெற்ற முத்தமிழ் காவலர், கலாநிதி திரு. ஆறுதிருமுருகன் அவர்களின் வழிகாட்டலுடன் துர்க்கையம்மன் வளாகத்தில் தொடர்ந்து நடைபெறுகின்றது. இப்பணிகள் சிறப்புடன் தொடர்ந்து நடைபெற வேண்டுமென நாமும் வாழ்த்துவோம்.



"சிவத்தமிழ்ச் செல்வி"
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

# அன்பே உருவாய் அமைந்த துறவி யோகர்

**யோ**கர் சுவாமிகளை அறிந்தோர் அநேகம். அவரை அறிந்தவர்களில் அவரை அண்டிப் போய் அவருடைய வாழ்த்துக்களைப் பெற்றவர்களும் உண்டு. பெறமுடியாதவர்களு முண்டு. நரைத்த தலை முடியும், வெண்ணிற ஆடையும் அவருடைய மேனிக்கு அழகைச் சேர்த்திருந்தது. அத்தோடு அகத்தின் அழகும் அவருடைய முகத்தில் அருளை வெளிக்காட்டிக் கொண்டுமிருந்தது. சுவாமிகளின் அடியார்கள் அவருடைய எண்ணங்களுக்கு அமைவான பணிகளில் ஈடுபாடு உடையவர்களாய் இருந்தார்கள். இவ் அடியார்களில் பலர் பொருள் வளம் உடையவர்களாயுமிருந்தனர். இப்பொருள் வளமுடைய அடியார்களுக்கு சில சமூகத் தொண்டுகளைச் செய்யச் சொல்லி சுவாமிகளிடமிருந்து கட்டளை பிறக்கும். அக்கட்டளை ஏழைகளின் வாழ்விற்கு இன்றி யமையாத தேவைக்குரியதாயிருக்கும். அத்தேவை மிகப் பெரிதாயிருந் தாலும் மறுப்பேதுமில்லாமல் அவர்களால் நிறைவு செய்யப்படும். எவ்வித மனக் கோணலுமில்லாது செய்யப்படும் இவ் உதவிகள் எந்தவிதமான விளம்பரங்களுக்கும் உட்படமாட்டாது. கொடுத்தவருக்கும் உதவி பெற்றவருக்கும் மாத்திரமே இவை தெரிந்திருக்கும். இதை சுவாமியும் அறிந்திருப்பார். இவ்வாறான

செயல்களே சுவாமியினுடைய பக்தி மார்க்கத்தில் முக்கிய நிகழ்வுகளாகும்.


துறவறம் என்பது வீட்டைத் துறந்து காடு செல்வதோ உடையின் நிறத்தை மாற்றுவதோ அல்ல. தன்னலம் மறந்து பிறர் நலம் பேணுவது. மக்களோடு வாழ்ந்து மக்கள் பணி செய்வதும் துறவறத்தின் இன்னொரு பக்கம் எனும் கோட்பாட்டிற்கு அமைவாகவே யோகர் சுவாமி அவர்களின் வாழ்க்கை முறைமை அமைந்திருந்தது.

சிவதொண்டன் நிலையத்திலே அடியார்கள் தினந் தோறும் தமிழ்த் திருமுறைகள் ஓதுவதில் பங்கு கொள்வார்கள். அவ்வேளைகளில் சுவாமியும் முன்னிலை வகிப்பார். தமிழ் திருமுறைகளில் யோகர் சுவாமிகளுக்கு பெரு விருப்பமுண்டு.

**சிவதொண்டன் மாத இதழ்**

சிவயோக சுவாமிகளால் ஆன்மீகப் பரப்புரைகளுக்காக சிவதொண்டன் எனும் மாத இதழ் தொடக்கப்பட்டது. மாதந்தோறும் சிவதொண்டன் மாத இதழ் வெளிவரும். அவ்விதழில் சமய, சமூக அறிவுரைகள் நிறைந்திருக்கும். அன்று தொடங்கிய காலம் முதல் சிவதொண்டன் மாத இதழ் தவறாது வெளிவந்து கொண்டிருக்கிறது. சிவதொண்டன் நிலையத்தின் சேவைகளில் இவ்விதழ் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்நிலையத்தில் எவ்வித உதவியையும் எதிர்பாராமல் சிவதொண்டர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருப்பதை காணக் கூடியதாகவுள்ளது. சிவதொண்டன் நிலையத்திலும் இன்னும் வேறு பல இடங்களிலும் யோகர் சுவாமியின் திருவடிகள் வழிபாடு சுவாமியின் திருவுருவை தொடர்ந்து நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

யோகர் சுவாமிகளால் படைக்கப்பட்ட பாடல்களுள் "நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்" என்ற பாடல் தொடக்கம் அதைத் தொடர்ந்து ஆறு பாடல்களும் முருக



**யோகர் சுவாமிகள்.**

பக்தர்களின் பெரு விருப்புக்குரியவை. "வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்" என்று தொடங்கும் பாடல் வரிசையிலுள்ள அனைத்துப் பாடல்களும் முருக பக்தர்களால் வரவேற்கப்பட்டுள்ளன.

சுவாமிகள் துறவறம் பூண முதல் அரச சேவையிலிருந்தார் என்பதும் திருமணம் ஆகாதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. துறவறத்திற்கு முன்போ - பின்போ தனக்கென எந்தப் பொருளையும் தேடி வைத்ததில்லை. அதுபோலவே சிவதொண்டன் நிலையத்திற் கென்றும் பொன்னையோ, பொருளையோ தேடி வைத்ததில்லை. அந்தந்த வேளைக்கு தேவைக்கு ஏற்றதை பெற்று அளவறிந்து செயற்படுவதே சிவதொண்டன் நிலையத்தின் தொடர் பணியாய் உள்ளது. இந்நிலையத்தில் சேவையாற்றும் தொண்டர்கள் உண்பது மிதமான சைவ உணவு. சுவாமியும் இவ்வுணவையே உண்பது வழமையாகும்.

**சிவயோக பாவனை**

யோகர் சுவாமி சொல்கிறார் - தெய்வத்தை நம்பு முழுமனதோடு நம்பு. உலகில் உனக்கு எளிதெனத் தோன்றும் எவற்றிலும் இனிதாய் நினை. இருக்கும் போதும் நிற்கும் போதும் கிடக்கும் போதும். நினை. உனது நரம்பிலும் தசையிலும் ரத்தத்திலும் தெய்வம் எனும் நினைவே நிறைவதாக. நான் இல்லை கடவுளே இருக்கிறார் என்று கடவுளைக் குடும்பிடுதலே இலக்காக வைத்துக் கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாக எல்லாம் அவராகவே காணப்படும்.

ஈவது விலக்காதே இழிதொழில் செய்யாதே சாவது வந்தாலும் சத்தியம் தவறாதே ஆவதும் அழிவதும் நமக்கில்லை என அறிந்து தேவர்கள் தொழுதேத்தும் சிவனடியைத் தொழு நெஞ்சே.

# எமது ஊரில் வாழ்ந்து மறைந்த திருத் தொண்டர்

திருநாவுக்கரசு சுவாமிகள் என்று மக்களால் அழைக்கப்பட்ட திருத்தொண்டர் ஒருவர் பல தசாப்தங்களுக்கு முன்பு புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தில் வாழ்ந்திருந்தார். இவர் ஒரு சிறந்த சிவபக்தர். என்னுடைய சிறுவயதில் நான் இவரை அறிந்திருந்தேன். அன்றைய காலகட்டத்தில் வயதில் முதிர்ந்தவராய் இருந்தார். உடலால் மெலிந்தவர். ஆனாலும் உறுதிபடைத்த உள்ளத்தினர். தொண்டாற்றும் நேரத்தில் இளைஞர் போல் செயற்படுவார். அவரின் முகத்தில் எப்பொழுதும் அருளின் ஒளி படர்ந்திருக்கும். புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தில் அருள் பாலித்திருக்கும் பானாவிடைச் சிவன் கோயிலின் வருடாந்த விழாக் காலங்களில் திருநாவுக்கரசு நாயனார் நினைவாக அன்னதானப் பணியை தவறாது முன்நின்று செய்து வந்தார். ஆதலினாலேயே இவரை திருநாவுக்கரசு சுவாமிகள் என்று மக்கள் அழைத்தனர். வீடுதோறும் சென்று அன்னதானப்

பணிக்குரிய பொருட்களைப் பெற்று தானே தோளில் சுமந்து கொண்டு போய்ச் சேர்ந்திடுவது இவரது வழக்கமாயிருந்தது. மனங் கோணாமல் கொடுப்பவரிடம் மட்டுமே பொருட்களைப் பெற்றுக் கொள்வார். மற்றவர்களுக்கு போதனை செய்யும் வழக்கம் இவரிடமிருந்ததில்லை. "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் நாவுக்கரசரின் திருவாக்கே இவரது குறிக்கோளாயிருந்தது. இவரது ஏவல் இல்லாமலே அடியார்கள் அன்னதானத்துக்குரிய அனைத்துப் பணிகளையும் செய்திடுவர். வாகன வசதிகள் அறவே இல்லாத காலத்தில் இவரது தொண்டு சொல்லற்கரியது. இத்திருத் தொண்டரால் செய்யப்பட்ட பணி இவர் மறைந்த போதிலும் இன்றுவரை தொடர்கிறது.

28-11-2010

# எமது சமய வழிபாட்டு முறைகள் அனைத்தும் தாய் மொழியில் அமைந்திட வேண்டும்

**வ**ழிபாடு இயற்றும் மொழியின் பொருளறிந்து உணர்வு கலந்து வழிபாடு செய்வதே பயனுடையதாகும். தமிழராகிய நாம் எமது தாய் மொழியாகிய தமிழில் வழிபாடு செய்வதே உணர் வோடு கூடியதாகவும் உயிர்ப்புடையதாகவும் அமைந்திடும்.

"சொல்லிய பாட்டின் பொருளறிந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்குள்" என்றுரைக்கிறது சிவபுராணம். இதன் தார்ப்பரியம் எதுவென்றால் ஆராதனையோ அல்லது அர்ச்சனையோ எதுவாயினும் தமிழிற் செய்வதே பொருத்தமுடையது என்பதாகும்.

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து விரையார் கழற்கு கைதான தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் பொய்தான் தவிர்ந்து போற்றி செய்ய வேண்டும்" என்று கூறுகின்றது திருவாசகம். உள்ளத்தால் பொய்யாது உணர்வு கலந்து மெய்யுருகி வழிபாடு செய்வதே பொருத்தமுடையது என்பதே திருவாசகத்தினது பொருளாக இருக்கின்றது.

"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன் என்பும் உருவ இராப் பகல் ஏத்துவன் என் பொன் மணியை இறைவனை ஈசனைத் தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே" என்று கூறுகின்றது திருமந்திரம்.

மேற்காட்டிய திருவாசகமும் திருமந்திரமும் கூறும் அன்பின் நிலையை எட்டுவதற்கு ஆராதனை செய்யும் மொழியின் பொருள் தெரிந்திட வேண்டும். இதற்கமைவாகவே தேவாரம், திருவாசகம் உட்பட பன்னிரு திருமுறைகளும் தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ளன. பிற்காலத்திலும் பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழியிலே உருவாகியுள்ளன.

சுந்தரரால் முதன்முதலாக பாடப்பட்ட தேவாரப் பதிகத்திற்கு இறைவனே அடியெடுத்துக் கொடுத்துள்ளார் என்றும் மாணிக்கவாசகரால் பாடப்பட்ட திருவாசகத்தை இறைவனே எழுதியருளினார் என்றும் எமது சமய வரலாறு சொல்கிறது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு" என்று சொல்கிறார் திருமூல நாயனார். "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" என்று சொல்கிறது நாவுக்கரசரின் தேவாரப் பதிகம்.

நாயன்மார்கள் இறைவனைப் பாடிய தமிழில் இறைவனால் பேசப்பட்டதும், எழுதப்பட்டதுமாகிய தமிழ் மொழியில், உலகில் பூத்த முதல் மொழியான எங்கள் இனிய தமிழ் மொழியில் அர்ச்சனை, ஆராதனை வழிபாடுகளை செய்வதற்கு இன்னும் ஏன் எமக்குத் தயக்கம்?

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் சொல்லிய வழியில் - அவர்கள் காட்டிய பாதையில் எங்கள் சைவசமயம் செல்ல வேண்டும். சமய குரவர் நால்வர் காலத்தில் சைவம் வேறு - தமிழ் வேறாக பார்க்கப்படவில்லை. சைவத்தை வளர்க்க தமிழ் மொழி பயனுடையதாய் இருந்தது. தமிழால் வளர்க்கப்பட்ட

சைவம் தமிழை வளர்த்தது. நால்வர் காலத்திற்குப் பின் தமிழைப் பின்தள்ளி தமிழ்மொழி இருந்த இடத்தை ஆரிய மொழி (சமஸ்கிருதம்) ஆக்கிரமித்துக் கொண்டது. பொருள் புரியாத மொழியைப் பயன்படுத்தி ஆரியர் தமிழரை அடிமைப்படுத்தியுள்ளனர். மந்திரம் எனும் மாயைக்குள் மயங்கிய தமிழர் தங்கள் (தம்) மொழியை மறந்தனர். ஆலயங்களில் அர்ச்சனை, ஆராதனை எனும் வழிபாட்டு முறைக்குள் "தேவார வழிபாடு" எனும் சிறிய இடத்திற்குள் தமிழ் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. ஆரியர் மொழியின் உள் நுழைவு நாயன்மார் காலத்திலோ அல்லது அதற்கு முன்போ சிறிதளவு இருந்திருக்கிறது. இதனை நாயன்மார்கள் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை." மந்திபோல் திரிந்து ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்க்கு எழியேனலேன்" என்று தமிழின் சுவை அறியாது அதன் பெருமை புரியாது ஆரியத்திற்கு துதிபாடுவோரை கடிந்துள்ளார் உலக மகா சக்தியின் ஞானப்பாலுண்ட நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்.

### கத்தோலிக்க தமிழர்

கத்தோலிக்க சமயத்தை சார்ந்த தமிழர்கள் குருவானவரோடு இணைந்தும், தனித்தும் தங்கள் இறை ஆராதனையை தாய்மொழியாகிய தமிழிலேயே செய்கிறார்கள். இதனை இறைவனும் ஏற்றுக் கொண்டுள்ளார். தாய்மொழியில் பொருள்புரிந்து வழிபாட்டைச் செய்வதால் தேவாலயங்களில் அமைதி நிலவுகின்றது. வீண் ஆடம்பரச் செலவுகளில்லை. சடங்குகளென்றும் ஏதுமில்லை. புரிந்துணர்வு உண்டாகி அருள் கூடுகின்றது. கத்தோலிக்கர்களின் வழிபாட்டு முறையைப் பார்த்தாவது சைவர்களும் தமது வழிபாட்டு முறைகளை தாய்மொழியில் மேற்கொள்ள வேண்டும்.

### எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே

எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர் இறைவன் என்றுரைக்கின்றன சமய நூல்கள். எங்கும் நிறைந்த இறைவன் எமது கண்முன்னே தோன்றும் கற்கோவில்களிலும் வீற்றிருப்பார் என்ற உண்மையை மறந்து எங்குமுள்ள இறைவனைத் தேடி கடல் கடந்தும் அதற்கப்பால் தமிழகத்தின் எல்லை கடந்தும் செல்கின்றோம். பணம் படைத்தோருக்கும் பதவியில் உள்ளோருக்கும் முன்னுரிமை அளித்திடும் கோவில்களுக்கு பொருளை நாமும் அள்ளிக் கொடுத்துவிட்டு வருவது அறிவுடைமையாகாது. நாம் கொடுக்கும் காணிக்கை பயனுடையதாக அமைய வேண்டும். விளக்கேற்ற வழியற்ற நிலையில் நம் கண் முன்னே தோன்றும் கோயில்களைத் தவிர்த்துவிட்டு பொன்னையும் பொருளையும் அறைகளில் குவித்து வைத்து நாட்டின் பொருள் வளத்தை முடக்கி வைத்திருக்கும் கோவில்களுக்கு கொண்டு போய் கொடுக்கும் காணிக்கைகள் தவறானவர்களிடம் போய்ச் சேருகின்றது. அல்லது கோவில் அறைகளில் யாருக்கும் பிரயோசனமற்று காலம் காலமாக முடங்கிக் கிடக்கின்றது. ஏழை, எளியவர்களுக்கும் உடல் உறுப்புக்களை இழந்து தங்கள் வாழ்விற்கு எங்கிருந்தாவது உதவி கிடைக்காதா? என்று ஏங்கித் தவிக்கும் பரிதாபத்திற்குரியவர்களுக்கும் இறைவன் பெயரால் உதவியளித்திடுவது உயரிய செயலாகும். இறைவனால் படைக்கப்பட்ட மனிதகுலத்துக்கு உதவுவது இறைவனுக்குச் செய்யும் உயர்ந்த ஆராதனையுமாகும்.

### இறையன்பைப் பொருள் கொடுத்துப் பெறமுடியாது

எமது சமய குரவர்கள் நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் இறைவனிடம் பாடல் பாடி படிக்காசு பெற்று பசித்தோர் துயர்

தீர்த்தனர் என்று எமது சமய வரலாறு கூறுகின்றது. "வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுவதும் தருவாய் நீ என்று" திருவாசகம் கூறுகின்றது. "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்றுரைக்கிறது நாவுக்கரசரின் திருத்தாண்டகம். எனவே வேண்டத்தக்கதை அறிந்து வேண்டியதை இறைவன் தந்தருள்வான். இறைவனுக்கு நாம் கொடுக்க வேண்டியது பொருள் அல்ல அன்பு. இறைவர்க்கோர் பச்சிலை (வில்வம்) போதுமென்கிறார் திருமூல நாயனார். இறைவனது அன்பை அழுது தொழுது பெற வேண்டுமென்கிறார் மாணிக்கவாசகர். "பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும் நின்னடியார் இடர் களையாய்" என்றுரைக்கிறது சம்பந்தரின் தேவாரப் பதிக வரியொன்று. இறைவனை ஆராதிப்பதற்கு நீரும் பூவும் போதுமானது என்பது இப்பாடல் வரிகளின் கருத்தாகின்றது. ஆதலால் பொன்னும் பொருளும் உண்டானால் இறைவன் பெயரால் வறியோர்க்கு உதவுவதே உயர்ந்த செயலாகும். இறைவழிபாட்டின் உன்னத நோக்கமும் இதுவேயாகும்.

**எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டுவதே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரனே**

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்தினிடையே வீடு வாசல்களை மற்றும் உடமைகளை இழந்தவர்களும், உடல் உறுப்புகளை இழந்தவர்களும், கட்டிய கணவனை இழந்து பெற்ற பிள்ளைகளை பராமரிக்க முடியாமல் தவித்து நிற்கும் கைம் பெண்களும் பெற்றோரை இழந்து நிற்கும் பிள்ளைகளும் எங்கிருந்து என்றாலும் எவரிடமிருந்தென்றாலும் தங்கள் வாழ்வை மேற்கொள்ள உதவிகள் கிடைக்காதா? என்று ஏக்கப்

## கிளிநொச்சியில் இயங்கி வரும் மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம்.




போரினால் ஆதரவற்ற 306 குழந்தைகளைப் பராமரிக்க உதவிக்கரம் நீட்டுமாறு மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம் கொடையாளிகளைக் கேட்டுள்ளது...

தொடர்புகளுக்கு - தி.இராசநாயகம்
+94770604950

வைப்புக்களுக்கு - Mahadheva Acchirama Saivach Siruvar Illam
Bank of Ceylon
9991351

பெருமூச்செறிந்த நிலையில் உள்ளார்கள். எமது இனத்தினரிடையே உள்ள சமூகப் பற்று மிகுந்த சில கனவான்களின் உதவியே இவர்களிற் சிலருக்கு கிட்டியுள்ளது. இவை போதுமானவை அல்ல. பிறரின் உதவியை எதிர்பார்த்திருக்கும் இப்பரிதாபத்திற்குரியவர்களை நினைத்துப் பார்ப்போர் அரிதாகவே காணப்படுகின்றனர். அப்பரிதாபத்திற் குரியவர்களுக்கு உதவிக் கரம் கொடுக்க அவர்கள் இடர்பாடுகளை களைந்திட அவர்களுக்கு தொண்டு செய்ய எமது ஆலயங்களின் பரிபாலன சபையினர் முன் வரவேண்டும். வாழ்வின் தாழ்வு நிலையில் உள்ளோர்களின் உயர்வுக்கும் அவர்களின் பிற் சந்ததியினரின் கல்வி மேம்பாட்டிற்கும் எமது ஆலயங்கள் முன்னுரிமை அளித்திட வேண்டும். இப்பணியை ஆலயங்களிற் கூடாகவும், அன்னதான சபைகளுக்கு ஊடாகவும் செய்வது சுலபமானதாகும். இப் பணியைச் செய்திடுவோர் நன்மக்களால் போற்றப்படுவார்கள். இறையருளும் கிடைத்திடும். ஆதலால் அன்பை சிவமாக்கி அறநெறியால் ஆராதிப்போம். இதுவே எமது வாழ்வின் குறிக்கோளாய் இருக்க வேண்டும்.

18-12-2010

# நன்றியுரை

இந்நூலை எழுதுவதற்கு உதவியாய் இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளேன. இப்படி ஒரு நூலை எழுதவேண்டும் என்று எனக்கு ஆர்வத்தை உண்டாக்கிய புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன அறங்காவலர் சபைத் தலைவர் செ. யுகேந்திரன் அவர்களுக்கும், அவரது சகோதரர் திரு. செ. செல்வேந்திரன் அவர்களுக்கும், திரு. சண்முகரெத்தினம் சரவணன் அவர்களுக்கும் எனது நன்றிகள். அச்சுப் பதிப்பு செய்து தந்த சன் அச்சக உரிமையாளருக்கும். எனது எழுத்துக்களை எழுத்து வடிவில் கொண்டு வந்த செல்வி. செ. உஷா அவர்களுக்கும், சன் அச்சக அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய (ஓய்வு நிலை) இலங்கை வங்கி சிரேஸ்ட முகாமையாளர் அருமைச் சகோதரர் திரு. சபா. திருச்செல்வம் அவர்களுக்கும், அறிமுக உரையை வழங்கிய அன்பர் திரு. மு. நாகரெத்தினம் அவர்களுக்கும் எனது நன்றிகள். இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு தலைமை ஏற்று சிறப்பிக்க இருக்கும் பிரபல வழக்கறிஞர் திரு. கே. வி. தவராசா அவர்களுக்கும், இந்நூலின் வெளியீட்டு விழாவில் பங்குகொண்டு நூலை பெற்றுக்கொள்ள இருக்கும் அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் உரிய நன்றிகளை முன்கூட்டியே எனது உள்மனதில் பதிவு செய்கிறேன்.

*இவ்வண்ணம்*
*அன்புள்ள*
**வே. சு. கருணாகரன்**



Visual's Entertainmant
எல்லாவிதமான CD, DVD, Blank CDs,
தமிழ் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி படங்கள்
பாடல்கள் மற்றும் போஸ்டர்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
THOR
Blu-ray Disc
3D
Blue Rays Movie
Blue Rays Blank
All Kind Of Blank CDs, DVD All Moviea & Songs
WWE Photos Wholesale & Retail
banana
TDK
SONY
imation
AL
ANGTE
No 212/1, Airtel Market, Main Street, Colombo - 11
Tel: 011-2458614
Email: Visuals@gmail.com

## "மரங்கள் நாட்டி மண்வளம் காப்போம்
## மண்வளம் பெருக்கி மனிதம் காப்போம்"

ஈரமற்றுப் போனதடா
இந்நிலம்
அட மானுடனே
காதல் செய்

பிறந்ததும்
தவழ்ந்ததும்
மண் தின்று வளர்ந்ததுமாய
இந்தப் பூமி
சுடலைப் பொடியாகிப் போதல்
உனக்குச் சம்மதமா?

**நிகழ்காலத்தில் யாழ் குடாநாடு வரட்சியின் எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக தீவுப் பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்ள அடையும் துன்பங்கள் அனைவரும் அறிவோம்.**
**ஆகவே மரங்கள் நாட்டி மண்வளம் காப்போம்,**
**மண்வளம் பெருக்கி, மனிதம் காப்போம்.**

**நண்பர்களே! உங்களுடைய பிறந்த தினத்தன்று குறைந்த பட்சம்**
**ஒரு மரத்தினையாவது நாட்டி பராமரித்திடுங்கள்.**
**இறைவன் உங்களுக்கு என்றென்றும் அருள் புரிந்திடுவார்.**



ஓ மனிதா!
நிழலற்றுத் தவிக்கின்றாயா?

பூமாதேவிக்கும் நிழல் தந்த
நேசமரங்கள் நின்ற வாழ்விடம்
நீள் பாலை வெளியாகிப் போமா?
நீ இதைச் சிந்தை செய்தாயா?

ஓ மனிதா நிழலற்றுத் தவிக்கின்றாயா?
நீ நின்ற இடம் வெயிலாடும் குழியாகிப் போகலாமா?

ஒரு நேச மரத்தையேனும் நீ நடுவாயா?
(சு.வி)

தொ.பேசி: 0112-458822